ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஹூ மார்கழிமீ 10—1—54 [இதழ் 2

தருமபுர ஆதீனம் 2-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா



குருமூர்த்த ஆலயத்தில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வலம் வருதல்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீன வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றேடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1x8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு:	...	**ரூ. 3—8—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு		ரூ. 1—5—0
காலிகோ பைண்டு:	...	**ரூ. 5—0—0**
ரிஜிஸ்டர் தபாற்செலவு		ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41. ஊஸ்மான்ரோடு,
தியாகராயநகர், சென்னை.

ஶ்ரீ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஸ்ரீ மார்கழிமீ 10—1—54. [இதழ் 2

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

பொங்குக பொங்கல்

அன்பு தழைத்திடப் பொங்குக பொங்கல்
ஆட்சி சிறந்திடப் பொங்குக பொங்கல்
இன்பம் தழைத்திடப் பொங்குக பொங்கல்
ஈகை வளர்ந்திடப் பொங்குக பொங்கல்
உழவன் ஓங்கிடப் பொங்குக பொங்கல்
ஊக்கம் பெருகிடப் பொங்குக பொங்கல்
எண்ணம் உயர்ந்திடப் பொங்குக பொங்கல்
ஏய்ந்திட நன்மைகள் பொங்குக பொங்கல்
ஐயெனும் அழகு பொங்குக பொங்கல்
ஒற்றுமை வளர்ந்திடப் பொங்குக பொங்கல்
ஓங்குக நாடெனப் பொங்குக பொங்கல்
ஔவைத் தமிழ்எனப் பொங்குக பொங்கல்

பண்ணுக்கு இசையா? - இசைக்குப் பண்ணா?

கடவுள் மக்களுக்கு அறிவை அளித்தார். மக்கள் அறிவை நல்வழியிற் பயன்படுத்தவேண்டுமென்பது அவர் திருவுள்ளக் குறிப்பு. ஆனால், மனிதனுக்குத் தீயனஎல்லாம் நல்லனவாகத் தோன்றுகின்றன. அதனால் அவன் அறிவு இழந்து அல்லற் படுகிறான்; பாம்பை அல்லித்தண்டு என்று பிடித்து அவதிப் படுகின்றவன் போல. இசை மனோலயத்திற்காக இறைவன் நமக்கு அளித்த ஓர் கருணைப்பிரசாதம். அதன் வாயிலாக மனோலயத்தை உண்டாக்கிக்கொண்டு இறைவன் திருவருட் பெருக்கில் தோய்ந்திருத்தலே மக்கள் கடமை. அதற்காகவே தான் இசை ஏற்பட்டது. இசை சிற்றின்பவாயில் அன்று; பேரின்பச் சுரங்கம். பேரின்பச் சுரங்கத்து என்றும் மீளா இன்ப அமுது இருக்கின்றது. ஞானமணிகள் பல குவிந்து கிடக்கின்றன. அச்சுரங்கம் அந்தகாரமயமன்று; பேரொளிப் பிழம்பு. இந்தச் சுரங்கத்தின் உள்ளிடத்தை எய்துவிக்கும் நடைபாதை ஒன்றே ஒன்றுதான். அதுதான் அந்தச் சுரங்கத்துக்கு அடிக்கடிபோய், மெய்ப்பொருள் கண்டு, இன்பம்நுகர்ந்து, எம்மேல்வைத்த கருணையால் வெளிவந்து, எம்மோடு உலகத்து உலாவிய சமயாச்சாரியப் பெருந்தகை யார்கள் தந்த தேவார திருவாசகமாகிய தோத்திர இசை.

சித்தவைத்திய முறையில் மயக்கம் தீர்க்க உண்ணும் மருந்து மயக்கம் விளைவிக்காது. அதுபோலத் தெய்வத் தன்மையை மனிதனிடத்துண்டாக்கும் தோத்திர இசைகள் விஷய விருப்பை விளைவியா.

கடையிலே - தெருவோரங்களிலே - அடுக்கு மாளிகை யிலே - எங்கும் ஏதோ இசை கேட்கிறது. அலைகின்ற மனத்தை மேலும் மேலும் அலையவைக்கின்றது. பழம் நறுக்கக் கிடைத்த கத்தி கழுத்தை அறுத்ததுபோல, தெய்வ சிந்தனைக்காக - மனோலயத்துக்காக - இறைவன் திருவருளைப்

பெறுவதற்காக - வாய்த்த இசை, வாழ்வைத் தாழ்வாக்கப் பயன்படுகிறது. இந்தநிலை மாறவேண்டும்.

இசை உயிர், இனிய கவிதை உடலில் தவழ்ந்தால்தான் ஏற்றம். இனிய கவிதை எது? தேவார திருவாசகங்களே. இதன் பொருள் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலுள்ள மேடு பள்ளங்களைச் சரிப்படுத்தி உயிருக்கு உணர்ச்சி ஊட்டி ஊக்கமளிக்கின்றது. இசை இதனோடு ஒன்றியபோதுதான் தெய்வீக இசையாகிறது. இதனை இசைத்துக் காட்டவும், ஆனந்தக்கூத்தப்பெருமானுடைய திருவருளே துணைசெய்தது. திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய மரபில்வந்த பெண் ஒருத்தியைக் கொண்டு பண் வகுத்தது என்பது வரலாறு. இங்ஙனமிருக்க பண்ணும் இசையும் ஒன்று வேறு என்பது அறிய வேண்டிய நிலையில் இருக்கிறது.

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக."

என்று இசையின் உயிர்நாடியாய் - உள்ளத்துறு சுவையாய் இருப்பது பண். ஏழிசையாய் இசைப்பயனாய் என்றபோதும் இதனைத்தான் பயனாகப் பரவைகேள்வர் கண்டாரென்பதும் நுனித்து அறியவேண்டியிருக்கிறது. இங்ஙனமாக அங்கங்கே பண்ணுக்கு இசைகாணு முயற்சி நடந்துவருகிறது. தோத்திர இசையாகிய வேதத்திற்குத் தொன்றுதொட்டமரபே மேல் வரிச்சட்டமாதல்போலத் தேவாரப் பண்ணமைப்புக்கும் பரம்பரையாக வருகின்ற மடாலய தேவாலயங்களின் பழக்கமே ஏற்றது.

வீதிகளிலே மக்கள் மனத்தை மகிழ்விப்பதற்காக அவர்கள், திரையிலே - மேடையிலே கேட்ட வர்ண மெட்டுக்களோடு இணைய இசைத்து; இந்துஸ்தானி மெட்டாக—இங்கிலீஷ் நோட்டாக—பாடுகின்ற பண்பாட்டைப் புகழுக்காகவும் பொருளுக்காகவும் கொண்டவர்களை ஒன்றுகூட்டி, தேவாரப்பண்ணை ஆராயச்செய்தல் எவ்வளவு பொருத்தமான தென்றுதான் கேட்கிறோம். தேவாரப்பண் அனுபவத்தை துக்கடாப்பாட்டில் கூடப் பாடி—ஊதி அனுபவியாத

66

அறிவுடைப் பெருமக்களை ஆராய்ச்சியில் இருக்கச்செய்து என்ன பயன்?

நம்முடைய தெரிவுக்கு எட்டியவரையில். தருமபுர ஓதுவாராக இருந்த நடராஜ ஓதுவார், கீழ்வேளூர்ச் சொக்க லிங்க தேசிகர் என்ற இரண்டுபேர் பரம்பரைகளில் இன்று இருப்பவர்கள் தக்க அறிவாளிகளிற் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பாடச்செய்து பதிவெடுத்து, சங்கீதப் புலவர் பலர் இன்று கேட்டு இராகங்களை நிச்சயித்தல் மிகப் பொருத்த மாகும். குருபரம்பரையில் வந்தவர்கள்—தானுகக் கற்றவர்கள்-சங்கீத ஞானம் ஒன்றுமே உடையவர்கள், இவர்களை ஒன்று சேர்த்து ஆராய்ச்சிப் போர்க்களத்தில் இறக்கிவிட்டால், ஆடம்பரப் பேச்சுத்தான் மிகும். அதுவேயன்றி ஓங்கிப் பேசுவார் பேச்சைத்தாங்கி 'இதுவே அனைவர் கருத்தும்' என்ற முடிவுக்கு வந்துவிட இயலும். இதனுல் விளையும் பயன் எதிர்பார்த்த நன்மையாக இருக்க முடியாது. ஆதலால், ஒரு மரபில் வந்தவர்கள், தேசீய சம்பிரதாயத்தைக் கலக்காத வர்கள், வாணிக முறையாகக்கொண்டு வாழாதவர்கள், சிலரைச் சேர்த்துப் பாடச்செய்து இராகமுடிவு காண்டல் ஏற்புடையதென்று கருதுகிறோம்.

பெரிய மகிழ்ச்சிச் செய்தி :

இசையரசு, தருமையாதீன இசைப்புலவர் திரு M.M. தண்டபாணி தேசிகரவர்களுடைய பண்முறை, தருமபுர ஆதீனத்தினுடைய சம்பிரதாயத்தை ஒட்டி இருப்பதால் அதை இப்போது இசைத் தட்டுகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஆதீன சம்பிரதாயம் பெரும்பாலும் தவருமல் இருக்கிறது. தேவார இசையின் பழம் பண்பாட்டைக் காக்கும் முயற்சியில் ஆதீனம் முதற்பணியாகத் தொடங்கியிருக்கிறது. பாட்டைப் பக்கவாத்தியம் விழுங்காமல் - தாளக்கட்டிற்காகச் சொல்லுருவத்தைக் குறைத்துக் கேட்பவர்களுக்குப் பொருளே விளங்காத வண்ணம் செய்யாமல் - கனிவை உண்டாக்கும் கண்ணியமான முறையில் இந்த இசைத் தட்டுக்கள் அமைந்திருப்பது மிக மிகப் பாராட்டற்குரியது.

கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

உலக அரசாங்கம் :

ஆம்! பதினான்குலகங்களையும், எல்லா அண்டங்களையும் இன்பவாழ்வில் நடத்துகிற அரசாங்கந்தானே அது. அதிலே அரசியாகிய அம்மைக்கு ஒரு சந்தேகம். அரசியாயிருந்தாலும் அரசனிடம் குற்றங்குறைகளைத் தெரிவித்துக்கொள்ளும்போது, எழுந்துநின்று வணங்கித்தானே விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அரசியாயிற்றே என்று அரியாசனத்தில் இருந்தபடி அறிவித்துக்கொள்ளவியலுமா? அதனால், எழுந்து நின்று விண்ணப்பித்துக்கொள்கிறாள். உயர்ந்தோர்களுக்கு தன் குறையை எண்ணும்போதே தன்னுடம்பில் ஒருநடுக்கம். அதனால், நடுநடுங்கிக்கொண்டே விண்ணப்பித்துக்கொள்கிறாள்.

அன்னுழி உமையவள் அகத்துள் ஓர்செயல்
உன்னினள் துணுக்கமுற்(று) ஒல்லைதான் எழீஇத்
தன்னிகரில்லவன் தாள் இறைஞ்சியே
முன்னுற நின்(று) இவை மொழிதல் மேயினாள்.

(அகம் - நெஞ்சு; உன்னினள் - எண்ணினள்; துணுக்கம் - நடுக்கம்; ஒல்லை - விரைவு; எழீஇ - எழுந்து;



விண்ணப்பம் :

"கற்பனைகடந்த கண்ணுதல் மூர்த்தீ! ஏதோ தக்கன் மகளாய்ப் பிறந்துவிட்டேன். தாக்ஷாயணி என்ற பெயரையும் சுமக்கிறேன். தக்கனோ சிவநிந்தை செய்தவன். அவன் பெயரை ஒட்டியா எனக்கு அழைப்பு. என்ன அநியாயம். ஆ! இந்த உடல் அவன் வளர்த்ததல்லவா? இதனை நீங்கத் தான் வேண்டும். அதற்கொரு உபாயத்தை உபதேசியுங்கள்.

எவ்வளவு பக்தி :

இந்த உலகத்தில் உனக்கு யாருமே நிகரில்லை. எம்மிடத்தில் அளவுகடந்த அன்பு உனக்கு. சொல் பார்க்கலாம்! எதனாலே இந்த அன்பு உனக்குண்டாயிற்று? உலகத்திலுள்ள தாவரசங்கமங்களாகிய உயிர்களெல்லாம் பேரின்பத்தைப் பெறுவதற்குத்தானே! நல்லது. இந்த எண்ணம் உனக்கு ஈடேறவேண்டுமானால், ஒன்றுசொல்லுகிறேன் கேள். நமது மேருமலைக்கு உறவாக இமயம் என்று ஒன்றிருக்கின்றது. அதற்கு அரசன் இமவான். அவனுக்கு ஒரு பேராசை. நீ மகளாகப் பிறக்கவேண்டுமாம். நான் மாப்பிள்ளையாக வர வேண்டுமாம். அதற்காக எவ்வளவு தவம் செய்கிறான்! அவனிடத்தில் குழந்தையாகப் போ; அஞ்சுவயது தொட்டிலிலும், கட்டிலிலும், தோள்மேலும், தாள்மேலும் வளர்ந்துவா. மறந்துபோகாதே! அதற்குமேலே தவஞ்செய்.

தளர்ந்துடல் மெலிவுறத் தவஞ்செய் வெற்பினான்
இளஞ்சிறு குழவியாய் எய்தி மற்றவன்
உளங்களிகூர ஆண்(டு) ஓரைந்தின்துணை
வளர்ந்தனை புரிதி மேல் மாசில் மாதவம்.

(வெற்பினன் - இமவான்; குழவி - குழந்தை; ஆண்டு - வயது; புரிதி - செய்.)

அப்போது தேவர், யக்ஷர், கந்தர்வர், இந்திரன், சந்திரன் எல்லாரும் புடைசூழவந்து மணமுடித்துக் கொள்கிறோம்.

இமயமலை:

இராமனிருந்த இடம் அயோத்தி; அம்மை இருந்த இடம கயிலை. இமயமலை கயிலையாக மாறிவிட்டது. எதனால்? பனிப்படலங்கள் உருண்டு திரண்டு வெள்ளை யானையைப் போல வீழ்தலாலே. அதுமட்டுமா? அதிலே எழுந்தருளி யிருக்கின்ற இறைவனைப்போலவும் விளங்கிற்று. எப்படித் தெரியுமா?

இமயமலை; அதற்குமேலே கருமேகத்தின் கூட்டங்கள். பனிபடிந்த இமயமலை நீறுசேர் திருமேனியனுகிய சிவம். அதற்குமேலே விளங்கும் கருமுகில் நஞ்சு. இம்மட்டோ? பரந்தாமன் பள்ளிகொள்ளும் பாற்கடலிலே விரித்த பன்னகப் பாயலாக – வெண்தாமரையாக – பூமிதேவி வைத்த புதைய லாக – பாதரசப் புகையால் வெளுத்த மேருமலையாக எல்லாம் இருந்தது.

அந்த மலையிலே, குளம். அதன்பேர் பத்மை. அதன் கரையிலே இமவானும், மேனையும் கடுந்தவம் செய்கிறுர்கள். அவர்கள் கண்ணெதிரிலே நடுக்குளத்திலே ஒரு அழகான ஆயிர இதழ்த் தாமரை. தாமரையின் நடுவிலே மரகதமணி போல பசுமையான இளங்குழந்தை. அது யார் தெரியுமே? எல்லா உயிர்களையும் பெற்றெடுத்த அன்னை தான்.

மெய்த்தவம் இயற்றிய வெற்பன் காணிய
அத்தட மலரும் ஓர் அரவிந்தத்தின்மேல்
பைத்ததோர் குழவியின் படிவத்(து) உற்றனள்
எத்திறத்(து) உயிரையும் ஈன்ற தொன்மையாள்.

(தடம் - குளம்; அரவிந்தம் - தாமரை; பைத்ததோர் குழவி - பசுமையான குழந்தை; படிவம் - வடிவம்.)

ஒரே ஆனந்தம்:

நடுக்குளத்திலே தாமரையின்மேலே அழகான பெண் குழந்தை. இங்கே எப்படிவந்திருக்கும்? அம்மைதான் இறைவனைவிட்டுப்பிரிந்து என் நோன்புக்காக இரங்கி இங்கே வந்திருக்கிறாள்; இதுதான் இறைவன் திருவருள் என்று இமவான் எண்ணினான். கண்களிலிருந்து ஆனந்தபாஷ்பம் பொழிந்தன. துள்ளிக் குதித்தான்; தாமரைமேலிருக்கும் குழந்தையைத் தன்கையால் எடுத்தான்; இந்தா குழந்தை என்று தன் மனைவி மேனை கையில்கொடுத்தான்.

மேனைக்குத் தாய்மை பிறந்துவிட்டது தனங்கள் பால் சொரிந்தன. புனைவ புனைந்து, செய்வன செய்து வளர்த்து வருகிறார்கள். வயது ஐந்தாயிற்று.

சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

திருவெம்பாவை—திருப்பாவை மாநாட்டில்

தொடக்க விழாவன்று சென்னைமாகாண முதலமைச்சர்

கனம் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் பேசியது

மார்கழிமாதம் பக்திக்குச் சரியான மாதம்:

இந்த டிசம்பர் மாதமே சந்தோஷப்படக்கூடிய மாதம். எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள், கூட்டங்கள், பாட்டு, சங்கீதம் நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்த மார்கழி மாதத்தில் நாமெல்லாம் சந்தோஷமான வாழ்க்கையை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது, இந்த மாதத்தில் பாட்டுக்கள்பாடி, பேரானந்தம் பெறுவது ரொம்ப நாட்களாக ஏற்பட்டிருக்கிறது, பாட்டுக்காக நம் நாட்டில் இந்தப் பழக்கம் ஏற்படவில்லை, வழக்கம் முன்னேற்பட்டது, பாட்டுக்காக ஏற்படவில்லை. பெரிய மரத்தில் சிறு வெற்றிலைக் கொடி ஏறி, தனக்கு ஒரு ஆதரவைப்பெற்றுப் பிறருக்கும் சந்தோஷத்தை அளிக்கிறது. கோல் தேடியோடும் கொடி போல் பழையவழக்கத்தின்பேரில் பாட்டுஏறி சந்தோஷத்தையும் இன்பத்தையும் தருகின்றது, ஆகையால் இந்தப் பாட்டும் பழக்கமும் நம் நாட்டில் நீண்ட நாளாக உள்ளது. வாழ்க்கையை நடத்துகிறவர்களுக்குப் பக்தி இயற்கைப் பொருள். இந்த மாதம் பக்திக்குச் சரியான மாதம். வெய்யிலும் குளிரும் பக்குவமாகச் சேர்ந்த மாதம். தேகத்தைச் சரியாக வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் வைகறையில் துயிலெழுந்து ஸ்நானம் செய்து, பக்தியுடன் ஞானப் பாட்டுக்களைப் பாடி, புதிய ஞானத்தையும் உணர்ச்சியையும் பெறுகின்றனர். நமது பழைய வழக்கங்களையும், பழைய பாட்டுக்களையும், பழைய நதிகள், பழைய குளங்களுடன் நமது ஆசாரியர்கள் அனுபவத்திலேயே சேர்த்து லேசாக நம்மை ஆட்கொள்ள இந்தப் பாட்டுக்களையும் செய்தார்கள். குழந்தைகளுக்குப் பாட்டும், பெரியவர்களுக்கு ஞானமும், நிஷ்டையிலிருப்பவர்களுக்குப் பக்தியும் எல்லாம் ஒன்றுதான். இதெல்லாம் இயற்கையாகவே திருப்பாவை, திருவெம்பாவையில் கலந்து கொண்டிருக்கின்றன. அவரவர்களுக்கு வேண்டியதை அதில் கொள்ளலாம்.

பக்திப் பாடல்களை ரஸித்து இன்புறவேண்டும் :

பகலெல்லாம் வாழ்க்கை நடத்திவிட்டு, ராத்திரி நாம் தூங்குகின்றோம். தூக்கம் தானாக வந்துவிடுகிறது. இந்த இயற்கையின் ஆச்சரியத்தைப் பாருங்கள். இது டாக்டர்கள் செய்ததா? இப்பொழுதுதான் அதிலுள்ளதை அறிந்து டாக்டர்கள் பிறருக்கு "ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்" என்ற மருந்தைச் சொல்லுகின்றனர். ஓய்வெடுத்துக்கொள்வ தென்பது தூக்கந்தான். தூக்கத்தில் எவ்வளவு ஆனந்தம் பாருங்கள். கவலையே இல்லை. நான்கூட சிறையில் இருக் கும்போது பார்த்திருக்கிறேன். தூக்கு தண்டனை அடைந்த ஒருவன் இன்னும் சில நாட்களில் "குழந்தைக்குத் தகப்பனு யும், மனைவிக்குக் கணவனும் இருக்கப்போவதில்லை" என்று நினைத்துக் கவலை கொண்டாலும் இரவு வந்ததும் இயற்கையான தூக்கம் அவனை அடைந்து அந்தக் கவலைகளை மறந்து அவனை ஓய்வெடுத்துக்கொள்ளச்செய்கிறது. அதனால் தான் மனிதனுக்கேற்பட்ட நூறு பிராயத்தில் பாதி தூக்க மாக இருக்கின்றது. சிலர் இந்த வாழ்க்கையில் பற்றுதல் காரணமாகத் தூக்கத்தைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் தூங்குவது க்ஷேமந்தான். மனிதன் நீண்ட நாள் ஜீவித்திருப்பதற்கும் அவசியமானது. இந்தத் தூக்கத்தை விட்டு எழுந்து ஸ்நானம் செய்து பக்திப்பாடல்களை அனு பவித்து ரசித்து இன்புறுவது கஷ்டமாகத்தான் இருக்கும்.

தெய்வத்துக்குத்தான் தெரியும் :

ஆனால் இந்தத் தூக்கம் வேறு. இந்தப் பாட்டுக்களில் சொல்லப்படும் தூக்கத்தின் அர்த்தம் வேறு. இதை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். அஞ்ஞானமாகிற தூக்கம் போக வேண்டும். இந்த இருள் நீங்கினால் அகம்பாவம் குறையும். இது முக்கியமான உட்கருத்து. நாம் பிரதிதினம் ஆகாரம் உட்கொள்ளுகிறோம். இந்த ஆகாரம் தேகத்தில் விஷமாகவும் மாறுகிறது. தேகத்தின் அங்கங்கள் இந்த விஷத்தை அகற்றி உணவுச்சத்தை ஏற்கிறது, மாறி மாறி இந்த வேலை நடக் கிறது. கெடியாரம் என்றே வைத்துக்கொள்ளலாம். இப்படி மாறிமாறித் திரும்புவதே உயிர். இந்தஉயிர்தான் ஆகாரத்தை

உட்கொள்ளுகின்றது. ஆகாரத்திலிருந்து உண்டாகும் விஷமே தூக்கத்தைக் கொடுக்கிறது. சிலருக்குத் தூக்கம் வருவதில்லை என்றால் விஷத்தை மருந்தாகக் கொடுக்கின்றனர். அதுதான் தூக்கத்தை உண்டாக்குகிறது. சிறிதுகொடுத்தால் போதையும் தூக்கமும் உண்டாகிறது. அதிகமானால் அந்த உயிருக்கே ஆபத்து உண்டாகிறது. பின் ஒரு காலத்தில் இந்தத் தூக்கமே வராமல் நாள் முழுவதும் இரவு பகலாக வாழ்க்கை நடத்த ஆராய்ச்சிமூலம் கண்டு பிடிப்பார்களோ என்னவோ தெரியாது? காலராவைத்தடுக்க கிருமியைச் செலுத்துவதுபோல-மாடுகளுக்கு மருந்துமூலம் கருத்தரிக்கச் செய்வதுபோல மனிதன் எப்பொழுதும் தூங்காமல் இருக்க வழி கண்டு பிடிக்கலாம். ஏனெனில் அப்பொழுது தானே எப்பொழுதும் இவனுக்குக் கவலை ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் (சிரிப்பு) அணுவை ஆராய்ச்சிசெய்து இறுதியில் மனுஷ்யனை நிர்மூலமாக்க உபயோகிக்க வில்லையா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் என்ன என்ன வருமோ யார் கண்டது? தெய்வத்துக்குத் தான் தெரியும்.

ஆண்டவன் படைப்பு வியப்பளிக்கிறது:

ரோஜாச் செடியைப் பாருங்கள். முள்ளுடன் கூடிய இச்செடியிலிருந்து இந்த அழகான, மணமான, இன்பமான புஷ்பம் வருமென்று யார் உண்டாக்கியது? யார் கண்டது? இந்த ரகசியத்தை அறிந்தால் உலகை அறியலாம். கடவுளை அறியலாம். ஜலத்தை ஆராய்ச்சிசெய்து அதில் இரண்டு வாயுக்கள் இருப்பதாகக் கண்டு பிடித்தனர். ஆனால் இந்த இரண்டு வாயுவையும் சேர்த்து ஜலமாக்கி விடுவதென்பது சுலபமா? சாத்தியமா? வேண்டுமானால் ஜலத்தை இரண்டு வாயுக்களாகப் பிரிக்கலாம். மனுஷ்யனைக்கூட அங்கம் அங்கமாகப் பிரித்துக் காணலாம். டாக்டர்களைக் கேட்டால் விளக்கிச் சொல்லுவார்கள். அங்கங்களைக்கொண்டு மனுஷ்யனைச் செய்ய முடியுமா? அது ஆண்டவனுடையது. அது அவன் சக்தி. இவ்விதம் ஒவ்வொரு பொருளையும் தெரிந்து கொண்டால் ஆஸ்தீகம் தானாகவரும். ஆஸ்தீகம் என்பது தான் அடக்கம். ஆண்டவன் படைப்பில் எவ்வளவு வியப்பும்

சந்தோஷமும் உண்டாகிறது. இந்த இரண்டும் கலந்ததே ஆஸ்தீகம், அறிவுக்கும் பக்திக்கும் விரோதமில்லே, ஆனல் அடக்கம் வேண்டும். இதுதான் ஆஸ்தீக இயக்கம்.

அடக்கத்தால் பக்தியும் ஆஸ்திகமும் வளரும் :

ஒரு வேப்பம் கொட்டையை எடுத்துக்கொண்டு பாருங்கள். அதிலிருந்து எவ்வளவு பெரிய மரம் உண்டாகிறது. பூ, காய் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் எவ்வளவு கசப்பு ஏற்பட்டிருக்கிறது? அந்த வேப்பங்கொட்டையில் இருக்கும்போதே ஆண்டவன் இதை எல்லாம் சங்கற்பித்து விட்டான். இதுதான் இப்படி என்ருல் ஒரு சிறு ஆலம் பழத்தில் எவ்வளவு விதைகள்! அவ்வளவு ஆயிரக்கணக்கான விதைகளில் ஒன்றினுள், எவ்வளவு பெரிய மரத்தை அடக்கிக்கொண்டிருக்கிறது. அதனுல் ஆண்டவன் பெருமையையும் படைப்பையும் அறியலாம், ஆனுல் அடக்கமும் பக்தியும் வேண்டும், படிக்காதவர்கள்கூட அறிவார்கள். படித்தவர் பாடுதான் கஷ்டம். படித்தவர்களேத்தான் ஆண்டவன் காப்பாற்ற வேண்டும்போலிருக்கிறது. அவர்களுக்குத்தான் அந்த பக்தியும் அடக்கமும் லேசில் வருவதில்லே. ஒரு மோட்டார் மணிக்கு 25 மைல் வேகம் போனுலே உள்ளே உட்கார்ந்திருக்கும்போது பயம் மாதிரி இருக்கிறது. இப்பொழுது நாமெல்லாம் உட்கார்ந்திருக்கிருேம் என்றல்லவா நினேத்துக்கொண்டிருக்கிருேம். உண்மையில் அப்படியில்லே. மணிக்கு 72,000 மைல் வேகத்தில் சுற்றிக் கொண்டிருக்கிருேம். இதை நாஸ்திகர்கள் கூட ஒப்புக்கொள்ளுவார்கள். இதற்குள்தான் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொள்வது, திட்டுவது 'கோபம்' தாபம் எல்லாம். இவ்வளவு வேகமாகச் சுற்றும் வண்டிக்குள் ஏறிக்கொண்டிருக்கிருேமே என்று அறிந்தால் அடக்கம் ஏற்படும். பக்தியும், பிறகு அதிலிருந்து ஆஸ்தீகமும் ஏற்படும். திருப்பாவை, திருவெம்பாவைகளேப் படியுங்கள். உலகத்தில் பக்தியை உண்டாக்கி வளர்க்கக்கூடியநூல் இவற்றைத்தவிர வேறு இல்லே. கஷ்டப் பட்டுப் படியுங்கள். பாடத்தெரிந்தால் மிக சிலாக்கியம். தானுகவே ஆஸ்தீகம் வரும். இல்லாவிட்டால் விஞ்ஞானத்தை நன்ருகப் படியுங்கள். ஆண்டவன் பிரபாவம் நன்குதெரியும்.

சைவத்திருமுறை மாநாட்டில்

தலைமைப்பேருரை

மூவார் புலவர்மணி ஸ்ரீ S. பொன்னம்பலம் J. P. அவர்கள்

வைதீக சைவத்திருமுறைச் செல்வர்களே !

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அரிய பணிகளை அன்பும் ஆற்றலும் நிறைந்த உள்ளத்தோடு செய்துவரும் பேரன்பர்களாகிய உங்களிடையே, இந்தத் திருமுறை மாநாடு நிகழ்வது போற்றற்பாலதே. இம்மாநாட்டிலே மகிழ்ச்சியிற் றிளைக்கின்ற உள்ளத்தோடு என்னைப் பேசவைத்த திருவருளை நினைத்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

உலகம் பொதுவாகத் துன்பச்சூழலிலேயே உழல்கிறது. இத்துன்பத்திலிருந்தும் இன்பத்தைக்காண முயல்வது அறிவு.

" இன்னாதம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன்இயல்புணர்ந்தோரே "

என்பது புறநானூறு.

நம்மை ஒரு நோய் பிடித்துளது; அந்நோய்தான் துன்பத்திற்குக் காரணம். அந்நோய் யாது? அந்நோயின் காரணம் யாது? அந்நோயை நீக்கும் வகை என்ன?

" நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்று திருவள்ளுவநாயனார் கூறுகின்றார்.

நோயையும், நோயின் காரணத்தையும், அதுதீரும் வகையையும் சொல்வதே சமயம்.

கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோயிலில் 2-5-53ல் நிகழ்ந்த முதலாவது சைவத்திருமுறை மாநாட்டு விழாவில் நிகழ்த்தியது.

76

வைதீக சைவ சமயம் இம்மூன்றையும் பற்றிப்பேசுவது மற்றச் சமயங்கள் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கி-அது, இது என்ற பிணக்குகள் இல்லாது ஞானபானுவாய்த் திகழ்கின்றது சைவம். முற்காலத்தில் சைவம் உலகெங்கணும் பரவி இருந்ததெனத் தெரிகிறது. சிந்து நதிக்கரையில் தோண்டி எடுக்கப் பட்ட சிவலிங்கங்களும், நடேசப்பெருமான் அம்மை முதலிய திருவுருவங்களும். கி. மு. நாலாயிரம் வருடங்களுக்கு முன்னே அமையப்பெற்றவையென Sir John Marshall உறுதிப் படுத்துகின்றார். சைவசித்தாந்த சமயம் உலகில் அதிகம் பழமையானசமயம் என்றும் சொல்லுகிறார். இதுவே தமிழரின் பழஞ்சமயமாகும்.

சைவசமயம் மிகவும் உயர்வான நிலையில் நின்று இலங்குகின்றது. மற்றும் சமயக்கொள்கைகள் எல்லாவற்றையும் சோபான முறையில் வைத்து அவைகட்கு மேலான முறையில் நின்று போதிக்கின்றது.

சைவம் 'பதி—பசு—பாசம்' (உலகம்—உயிர்—கடவுள்) என்னும்முப் பொருள்களின் இயல்பையும் இலக்கணத்தையும் தெளிவாக எடுத்துப்பேசும்.

உலகம் சடப்பொருள். அது தானாகவே இயங்க மாட்டாது. மண் தானாகவே குடமாக மாறிக்கொள்ளமாட்டாது. அதற்குக் குயவன் ஒருவன் வேண்டும்; அது போலவே உலகத்தையும் தோற்றி, நிறுத்தி, ஒடுக்குவதற்குத் தோற்றமும் ஈறுமில்லாத முதல்வன் ஒருவன் வேண்டும். அவன் பேரருளும் பேராற்றலும் உடையவனாயிருத்தல் வேண்டும்.

" அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்னும் குறளுக்கு " உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற 'ஆதி பகவன் முதற்றே உலகு' என உலகின் மேல் வைத்துக் கூறினார் " என்பது பரிமேலழகர் உரை.

(a)" தானலாது உலகம் இல்லை ,,

(b)" எல்லா உலகமும் ஆனாய் நீயே ,,

(c)" உலகுக்கெல்லாம் வித்தவன் காண் ,,

என்பது அப்பர் அடிகள் திருமுறை வாக்குகள்.

உலகமும் உயிரும் இயங்குகின்றன. அவன் தானே இயங்கி அவற்றை இயக்குகின்றான். அவ்வாறு இயக்கத்திற்குக் காரணம் உயிர்களிடம் அவனுக்குள்ள கருணையே. அவன் உள்ளத்தில் கருணை சுரக்கிறது. அதனால் அவன் ஆடுகிறான். உலகம் ஆடுவதற்கு அவன் ஆட்டமே காரணம். ஆட்டத்திற்கு அவன் அருள் ஆணையே காரணம். அந்த அருளே எல்லா ஆட்டத்திலும் ஒரு ஒழுங்கை அமைத்திருக்கிறது.

புராதன தமிழ் மக்களது சமய வாழ்க்கை மக்கள் வாழ்க்கையோடு வளர்ந்து வந்தது. சங்ககாலத்தில் வைதீக சைவநெறியும் வழிபாடும் மேல்நிலையில் இருந்தன.

" ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து
கூறுமற் குறித்ததன்மேற் செல்லும் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற்று எண்கையாய் கேள் இனி "

என்பது நவ்வந்துவனார் பாடிய சங்க நூலில் உள்ள கடவுள் வாழ்த்துத் துவக்கம். தமிழ்ப்பெருங் காவியங்கள் யாவும் சிவபெருமானது பெருமையைப் பேசுகின்றன.

" பிறவா யாக்கைப் பெரியோன் "

எனச் **சிலப்பதிகாரம்** சிவபெருமானைப் போற்றுகின்றது.

" போகம் ஈன்ற புண்ணியன் "

எனச் **சிந்தாமணி** சிவபெருமானைப் புகழ்கின்றது.

" நுதல்விழி நாட்டத்திறையோன் "

என்று **மணிமேகலை** சிவபெருமானை வாழ்த்துகின்றது.

சங்ககால முதல் அறிவிற்சிறந்த அருட்புலவர்களாலும் தமிழ் மன்னர்களாலும் நாயன்மார்களின் திருமுறைகளாலும் மடாதிபதிகளாலும் சிவநெறி வளர்ந்து வந்துள்ளது.

திருமுறை

சிவபெருமானது திருவருள் முன் நிற்கும் பாக்களே திருமுறைகள். திருமுறைகள் முறையே பன்னிரண்டாக வகுக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாம்.

திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் பின் மூன்று திருமுறைகளாம்.

சுந்தரமூர்த்தி நாயனர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் பின் ஒரு திருமுறையாம்.

ஆக தேவாரத் திருப்பதிகங்கள் ஏழு திருமுறைகள் ஆயின. தேவாரம் என்பது தெய்வத்தன்மை பொருந்திய பாமாலை எனப் பொருள் தரும். (தேவ – ஆரம்)

மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையார் இரண்டும் எட்டாந் திருமுறையாம்.

திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது பேரும் அருளிச் செய்த திருவிசைப்பாவும், அவர்களுள் ஒருவராகிய சேந்தனர் அருளிச்செய்த திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறையாகும்.

திருமூல நாயனர் அருளிச்செய்த திருமந்திரம் பத்தாந் திருமுறையாகும்.

மதுரை சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரருக்காக அருளிச் செய்த திருமுகப்பாசுரம் முதலாக, திருவேகாதச

மாலை இறுதியாயுள்ள நாற்பது பிரபந்தங்களும் பதினோராந் திருமுறையாகும்.

தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த திருத் தொண்டர் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

முதல் பதினொரு திருமுறைகளும் அபயகுலசேகர சோழ அரசன் வேண்டுகோளின்படி திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாரின் திருவருளைப் பெற்ற நம்பியாண்டார் நம்பியவர்களினால் வகுக்கப்பெற்றன.

பின்னர் அனபாயசோழ அரசர் காலத்தில் திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணம் அரசாணையால் பன்னிரண்டாந் திருமுறையாக வகுக்கப்பெற்றது.

இத்திருமுறைகள் காலம் பற்றிய முறையில் வகுக்கப் படா. நாயன்மாரின் முதன்மை நோக்கி நம்பியாண்டார் நம்பி வகுத்தனர்.

திருஞானசம்பந்தர் நாயன்மாருள் முதல்வராய் விளங்கினமையாலும், இறைவன் தனது நாற்றோள், முக்கண் முதலிய இயற்கை உருவத்தோடு குருவாக முன்னின்று அந்நாயனாருக்கு அருள்புரிந்தமையாலும் நம்பியாண்டார்நம்பி திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய தேவாரத்திருப்பதிகங்களை முதலில் மூன்று திருமுறைகளாக வைத்து வகுத்தார்.

மற்றைய, அப்பர் சுந்தரர் இவருடைய திருப்பதிகங்கள் இயலும் இசையும் ஒத்து, தேவாரம் என்னும் திருப்பெயருடைமையாதல் பற்றி முன்னவர் திருமுறை மூன்றுக்கும் பின்னே வைத்தருளினார்.

திருவாசகமும் திருக்கோவையும் தமிழ் வேத ஒப்புவமையால் எட்டாந் திருமுறையாக்கப் பெற்றன. திருவாசகம்— ‘ திரு ’ என்பது அருட்டிரு, எனவே அருள் வடிவான வாசகம் எனப்பொருள் தரும் தேன் போன்றது. தேன் உலகில் உள்ள

பதார்த்தங்கள் எல்லாவற்றுள்ளும்மேலானது. உடம்பிலுள்ள நோயை நீக்கி உடம்புக்குப் பலனைக் கொடுக்கும். திருவாசகமும் தன்னை அன்போடு ஓதுவாரது ஆணவம், கர்மம், மாயை என்னும் மும்மலத்தையும் கெடுத்துச் சிவானந்தத்தைக் கொடுக்கும்.

" தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன் ,,

என்று ஆன்றோர் தம் அனுபவத்தாற் சொல்லி வைத்தனர். திருக்கோவை அறிவுநூற் பொருள், உலகநூல் வழக்கம் இரண்டையும் பேசும்.

' ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே,,

என்பது ஆன்றோர்வாக்கு.

திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் வேதத்தின் பல பொருள்கள் அமையப்பெற்று ஓதுவதற்கு இசை அமைதி உள்ள திருவருட்பா மாலையாதலால் ஒன்பதாந் திருமுறையாக்கப்பெற்றன.

சிவபெருமான் திருவருளாள் திருமூல நாயனார் சிவயோகத்தமர்ந்து தமிழ் உலகுக்கு உபகரித்த திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வகுக்கப்பெற்றது. இதன்கண்ணே சிவாகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கின் உயரிய உண்மைகள் அடங்கியுள்ளன.

பதினோராந் திருமுறை நாயன்மார்கள் அருளிச்செய்த 40 பிரபந்தங்கள். திருமுகப்பாசுரம் ஒன்று,—காரைக்காலம்மையார் அருளியது மூன்று,—ஐயடிகள் காடவர்கோன் அருளியது மூன்று,—சேரமான் பெருமான் நாயனார் அருளியது மூன்று.

நற்கீரதேவர் அருளியது பத்து, பட்டினத்தடிகள் அருளியது ஐந்து, —நம்பி யாண்டார் நம்பி அருளியது பத்து,—மற்றை நாயன்மார்கள் அருளியது ஐந்து; ஆக நாற்பது பிரபந்தங் களாகும்.

தெய்வச் சேக்கிழார் பெருமானுல் அருளிச்செய்யப் பெற்ற பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். இத்திருமுறைகள் யாவும் "தமிழ் வேதம்" என்று வழங்கப் பெறும், வேதம் என்னும் சொல்லுக்கு அறிதற்கருவி யெனப்பொருள்.

(வேதத்துக்குச் சுயம்பு என்னும் பெயர் வழங்கப்படும் சுயம்புவாகிய பரமசிவனுல் அருளிச் செய்யப்பெற்றமையால் வேதத்துக்குச் சுயம்பு என்று பெயர் உண்டு) வேதங்கள் சிவ பெருமானுல் செய்யப் பெற்றவை. அவை காலவரையறைக்கு அப்பாற்பட்டவை.

வேதங்களை உணர்வதற்கு ஆறு நூல்கள் உண்டு. அவற்றை ஆறு அங்கம் என்று சொல்லுவார்கள். அவை யாவன:— சிக்ஷை. வியாகாரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம். இறைவன் தன் தன்மையையும் உயிர்களின் தன்மையையும் வேதத்தின் மூலம் வெளிப் படுத்தியுள்ளார்.

வேதம் ஆதிநூலென்றும் இறைநூலென்றும் சொல்லப் பெறும். நமக்கு விளங்காத பலபொருள்கள் வேதத்தில் மறைந்திருக்கின்றன; அதனுலேயே அவ்வேதத்திற்கு ,மறை என்றபெயர் வந்தது.

[வரும்]

82

"ஐயாறதனிற் சைவனாகியும்"

புலவர். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

'ஐயாறதனிற் சைவனாகியும்' என்பது, மாணிக்க வாசகம். அத்திருவாசகத்தால், சிவபெருமான், திருவையாற்றில் ஒரு காலத்தில் சைவனாகிய திருக்கோலம் பூண்டு நிகழ்த்திய அற்புதச்செயல் குறிக்கப்படுகின்றது.

சிவன் என்னும் பெயர் வடிவத்தின் அடியாகச் சைவன் என்னும் மற்றொரு பெயர்வடிவம் தோன்றிற்று. அவ்வாறே திலம் - தைலம் முதலிய பெயர்கள் பல இருக்கின்றன. 'சைவம் சிவத்தொடு சம்பந்தமாவது' என்பது திருமூலர் திருமந்திர மொழி. சிவனுக்குச் சைவன் என்றும் ஒரு திருப்பெயர் உண்டு. 'சைவா போற்றி தலைவா போற்றி' என்ற திருவாசகத்தை நோக்கின் அது தெளிவாகும். ஆகவே. 'ஐயாறதனிற் சைவன் ஆகியும்' என்னுந் திருவாசகத்தில், 'சைவன்' என்னுந் திருப்பெயர்க்குப் பொதுவில், சிவனே பொருளாகும் எனல் விளங்கிற்று. விளங்கினும், சிவனைச் சிவனென்னாமல், சைவன் என்பதற்கு ஒரு காரணம் வேண்டும் அன்றோ! அக்காரணம், திருவையாற்றுத் திருக்கோயிலுள் நிகழ்ந்த ஓர் இகல் (மாறுபாடு, பகை) பற்றிய தெய்விக சம்பவம், அதைத்தான் மணிவாசகப் பெருமான் 'ஐயாறதனில் சைவன் ஆகியும்' என்று குறித்தருளினார். 'ஆகியும் என்றதால், ஆக்கம் பெறப்பட்டது. ஆவதற்குமுன் 'சிவன்' என்றும் ஆனதுமுதல் 'சைவன்' என்றும் அறியக் கிடக்கின்றன.

பரமசிவன் அநாதிசைவனாவான். அவனருளால் வந்த சைவர் ஆதிசைவர் முதலியோர். ஆதிசைவர் முதலியோர் அடைமொழி (ஆதி, மகா முதலிய விசேடணம்) இன்றிக் குறிக்கப்பெறார். அநாதிசைவனாகிய சிவனைச் சைவன் என்று அடைமொழியின்றிக் குறித்தல் உணர்ச்சித்தடுமாற்றத்தை

விளக்காது. அதனால், 'சைவன்' என்று பெயரளவில் (ஓர் அடையும் இன்றி) உணர்த்துமிடத்தில், 'சிவன்' அப்பெயர்ப் பொருளாய்க் கருத்திற்கு நிற்கின்றான். 'சைவசித்தாந்தம்' என்னுந் தொடர்க்குச் சைவனது சித்தாந்தம் என்றும் ஒருவர் பொருள்கொண்டது பொருந்துமாறறியலாம்.

பெரியபுராணத்தில், அடியார் வரலாறுகளுள், சிவபிரான் சைவனாகி அருளிய திறங்களை உணர்வோர்க்குச், சிவன் திருவையாற்றில் ஆதிசைவனான உண்மையில் ஐயம் ஏற்படாது. அச்சைவத் திருக்கோலம், சகலர் முதலிய மூவகை உயிர்களின் கோலம்போல்வதன்று. அருளிற்கொண்ட திருவுருவம். சிவஞானசித்தியாருள்,

"உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தரும் அருள் உபாங்கம் எல்லாம் தான் அருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே."

என்னுந் திருவிருத்தத்தால் அவ்வுண்மையைத் தெளியலாம்.

திருவையாற்றில், மகாலிங்கேசனைச் சிவாகம விதிப்படி வழிபாடு புரியும் ஆதி சைவருள் ஒருவர், கங்கை நீராடக் கருதிக் காசித்தலத்தை அடைந்தார். அத்திருக்கோயில் அருச்சகர் இருபத்துநால்வருள் ஏனையோர், காசியிற்சென்ற அச்சைவருடைய காணியுரிமைகளைக் கவர்ந்தனர். அவர் மனைவி மக்களுக்கு வருத்தம் விளைத்தனர். அப்போது அவர்க்கு மகாலிங்கமே கதி என்ற எண்ணம் எழுந்தது. அதனால், அந்த அம்மையார், தம் குல முழுமுதலாகிய செம்பொற் சோதியின் திருவடித் தாமரைகளை வணங்கிக் குறையிரந்தார். அதற்குத் திருவுள்ளம் இரங்கிய அம்மகாலிங்கப் பெருமானார், காசிக்குச் சென்ற சைவரைப்போல,

"விழுத்த சோமனும் வெண்புரி நூலும்வெண் சிகையும்
பழுத்த மேனியும் பண்டியும் புண்டரப் பரப்பும்
அழுத்து கண்டிகை ஆறணி காதுங்கைத் தண்டும்
வழுத்து காவடித் தோளுமாய் எழுந்துநேர் வந்தார்"

84

அவரது மனையுட் புகுந்தார். மனைவி மக்களது நலத்தைக் கேட்டறிந்தார். மக்களைத் தழுவினர்.

மற்றைய சைவர்களை நோக்கி, "யார்க்குப் பங்கில்லை என்றீர்கள்" என வினவினர். அம்மறையவர்கள் 'கீழ்மை யுடையேம் செய்த பிழையினைப் பொருளாக் கருதாமல் பொறுத்தருளும்' என்றனர். அப்பொழுது மனைவி மக்களும் நெருங்கி, உள்ளங்குலைந்து நின்று, கண்ணீர் சொரிந்து அழு தனர். அவர்களை ஆறுதல் கூறித் தேற்றினர். தேற்றி 'மனைக்குச் செல்க' என்று ஏவினர். ஏவியபின்னர், திருக் குளத்தில் நீராடி, அநுட்டானம் முடித்து, பத்திர புட்பங் களைக் கொண்டுவந்து, சிவாகம விதிப்படி சிவபூஜை செய்து, மாகேசுர பூஜையும் முடித்து, ஒரு பொதுமடத்தில் வீற்றிருந் தருளினர்.

காசிக்குச் சென்றிருந்த ஆதிசைவரும், ஒரு கங்கைநீர்க் காவடியைச் சுமந்துகொண்டு, அந்நாளில் அவ்வேளையில் வந்துசேர்ந்தார். தற்பரச் சிவசைவரும் கங்கையினின்று பிற்பட வந்த சைவரும் ஒரு பெருஞ்சபையில் ஒருசேர நிற் கின்றனர். அந்த அற்புதம் எல்லாரறிவையும் மயக்கிற்று. வீட்டிலிருந்த மனைவிமக்களையும் ஏங்கச் செய்துவிட்டது.

அநாதி சைவன் (ஐயாற்றப்பன்) ஆதிசைவரை நோக்கி "நீ யார்?" என்றான். அவர் "மகாலிங்கநாதரைப் பூசிக்கும் இருபத்துநால்வருள் நானும் ஒருவன், எனக்கே முதற்பூஜை உரிமை உண்டு" என்றார். அநாதி சைவன் ஆதிசைவரைச் சீறியும் பலவாறு வைதும் நின்றான்.

ஆதிசைவர் வருத்தத்தொடும் வீடு சேர்ந்தார். முதற் பங்காகப் பூஜை செய்யும் உரிமைப்பத்திரத்தை எடுத்துவந்து அநாதிசைவனுக்குக் காட்டினர். அநாதிசைவனும் தனக்கே உரிமை உண்டு என்று நிரூபிக்கச் சாதனம் காட்டினன். அவற்றைப் பூஜகர் முதலிய பலரும் நோக்கினர். நோக்கி, சைவன் (சிவன்) காட்டிய சாதனம் பொய்யாய்ப் போயிற்று என்று அறுதியிட்டுரைத்தனர். ஆதிசைவர் வென்ற

களிப்பால் வீறுடு விளங்கினர். அநாதிசைவன் விண்ணில் ஒளிந்தருளினன். பரமசிவனுக்குக் காட்சியருளும் அம்முழு முதல்வன்,

............" நம் சைவனை வளம்பெறக் கொணர்மின்
குறைந்து கொள்ளன்மின் காணியும் இருமடி கொடுமின்
நிறைந்து செல்வராய் நீடூழி வாழுவீர் என்றுன் "

செம்பொற்சோதியான திருவையாற்றிறைவன் வானில் விளங்கி, அருளிய திருவாணையைக்கேட்ட வேதியரும் மாதவரும் பணிந்தனர். சிரமசைத்துக் கரங்கொட்டிப் பாடினர், ஆடினர், அகமகிழ்ந்தனர்.

தருமையாதீனத்து வெளியீடாகிய புராணத்திலுள்ள இவ்வரலாற்றைக் குறித்ததே மாணிக்கவாசகப்பிரான் 'ஐயாறதனிற் சைவனுகியும்' என்றுபாடியருளியது என்னலாம்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கிலமீ 10௳ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத்தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத்தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியலாயம்
தருமபுரம், மாயூரம் P. O.

சுவைவிளக்கம்

வித்துவான், திரு, நா. பார்த்தசாரதி, மதுரை.

(தொடர்ச்சி.)

இனித் தண்டியாசிரியரும்,

" அவைதாம்,
வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே
காமம் அவலம் உருத்திரம் நகையே"

என எட்டுச்சுவையே வேண்டினர். "இவ்வெட்டனேடு சாந்தமென ஒன்று கூட்டி நவரஸமென்று கூறலும் உண்டு, எனக்கூறிய தண்டியலங்கார உரையாசிரியர் சுப்பிரமணிய தேசிகர்,

" தன்னுயிர்க் கின்னமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்ன செயல்.'"

என்னும் திருக்குறளை உதாரணமாகக் காட்டி, ஒன்பதென உடன்பட்டார். பிற்காலத்தினரான மாறனலங்கார ஆசிரியரும், தண்டியாசிரியர் நெறியிற் சிறிதும் விலகாது நின்று,

" அவைதாம்,
பெருமிதம் நடுக்கம் அழுகை இளிவரல்
உருத்திரம் நகைவியப் புவகை என்றகும்"

என்று எண்வகை இரதமே கூறினர். கூறினரேனும், அந்நூலுரைகாரரான திருமேனிரத்தினகவிராயர் "சாந்தரத மென்பதுங் கூட்டிச் சுவை யொன்பது எனவும்படும். அஃதாவது "செஞ்சாந்து பூசினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலைமைத் தாகும்," அது காம, வெகுளி மயக்கம் நீங்கினர்கண்ணே நிகழ்வது. சமனிலை, நடுவுநிலை, யென்பதுமிது" என்று பேராசிரியர் உரைத்தாங்குரைத்துப்

போந்தார். இனி இதனை இவ்வளவானே அமைத்துச் சுவையும் மெய்ப்பாடும் ஒன்று? வேறு? என ஆராயப்புகுவோம். ஒன்றென்பது நமக்கு உடன்பாடாயினும் கருத்து வேறுபாடுகள் உளவாகலின் ஈண்டு அதனை ஆராய்வது இன்றியமையாது வேண்டப்படுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய அலங்கார நூலாசிரியர்கள் பலரும் சுவை வேறு மெய்ப்பாடு வேறு என்றே கொண்டனர். ஆசிரியர் தொல்காப்பியருக்கும் பேராசிரியருக்கும் சுவையும் மெய்ப்பாடும் ஒன்று என்னுங் கருத்தே உடன்பாடு ஆகும். இக் கூற்றிற்குத் தக்க சான்றுகளைக் காட்டமுடியும்.

"உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே"

என்றமையால் மெய்ப்பாட்டைச் சுவைக்கு ஏதுவாகக் கொண்டார் தண்டியாசிரியர் என்பது புலப்படும்.

"பொறியுணர் வொடுமொரு பொருளினை எதிர்ந்த
நெறியுடை மனத்துள் நிகழ்தரும் பான்மை
அயலவ ருறப்புறத் தாய்ப்பொரு ளெட்டின்
இயல்வது சுவைஎன் றியம்பினர் புலவர்"

என்று மாறனலங்காரமுடையாரும் முன்னோர் துணிபே தந் துணிபாகக் கூறினர். இச்சூத்திரத்திற்குப், "பொருளென்பது மெய்ப்பாடு. இயல்வது - உண்டாவது, பொருளெட்டின் இயல்வது சுவையென்பது பொன்னினியன்ற குடம் என்பது போலக் கொள்க" என்று சிறப்புரை எழுதுகிறார் கவிராயர். பொருளென்பதற்கு மெய்ப்பாடென்று பொருள் கொள்ளாது சுவைக்கப்பெறுகின்ற பொருள் என்றே பொருள்கொள்ளின் மாறனலங்கார நூலாசிரியர் நமக்குச் சான்றாக நிற்பார். சுவைப்போனும் சுவைக்கப்படுபொருளுமென இரு வகை நிலத்திற் சுவை இயலும் என்ற பேராசிரியர் கருத்திற்கு ஒப்பச் சுவைக்குச் சுவைக்கப்படு பொருளை ஏதுவாகக் கூறினாரெனினும் அமையும். இங்ஙனம் அலங்காரஞ்செய்வான் புக்கு அதற்கொத்தவாறு சுவைக்கும் மெய்ப்பாட்

டிற்கும் உறழ்ச்சி கண்டனர் இவ்வாசிரியர், "இவற்றைச் சுவையெனவும் குறிப்பெனவும் வழங்குப" என்று பேரா சிரியர் கூறுவதனுல் சுவை குறிப்பு மெய்ப்பாடு என்பன ஒரு பொருட்கிளவி யென்னுங் கருத்தினராக அவராதல் வேண்டும். மெய்ப்பாடு ஏதுவாக உள்ளத்து நிகழுஞ் சுவையே, சுவையெனின், உள்ளமும் மெய்ம்முழுதும் பரந்த ஒருணர்வேயாகலின் அதன்கட்படுவதும் மெய்ப்பாடேயாம். இஃதிவ்வாறிருக்க மெய்ப்பாடுஞ் சுவையும் வேறென்பார் "அலங்கார நூலார்க்கு வேண்டுவது சுவையுணர்வாற் பிறந்த கூற்றே என்பதனையும், அவர் கூறுஞ் சுவையென்னும் சொல் இரஸம் என்னும் வடசொல்லை ஒருவாற்ருன் மொழிபெயர்த்துக்கொண்டது ஆதலையும், நாடக நூலுட் கூறப்பெறும் மெய்யும் உணர்வும் ஒன்ருகிய சுவையும், அலங்கார நூலுட் கூறப்பெறும் சுவைக்கூற்ருகிய அதுவும், வேறுபடுதலையும் நுண்ணுணர்வால் பகுத்துணர மறந்தனர் போலும். சுவைக்கு மெய்ப்பாடு ஏதுவாமோ? ஆகாதோ? என்னும் தடை விடைகளை எழுப்புகிறது அவர் முடிவு. சுவை வேறு மெய்ப்பாடு வேறு என்னின், உள்ளத்துச் சுவைக் குறிப்பு நிகழ்ந்த பின்னன்றே மெய்ப்படுதல் வேண்டும், மெய்ப்பட்டபின் சுவைக்குறிப்பு நிகழுமெனின் சுவைக்கப்படு பொருளை உணரும் பொறியுணர்வே ஆண்டு அந்தக்கரண மாகிய உள்ளத்தின் ஒரு கூறு ஆகலின், சுவை நிகழ்ந்த பின்னரே மெய்ப்பாடு நிகழ்தல் வேண்டுமென மறுக்க. சுவையும் மெய்ப்பாடும் ஒருங்கு இயங்குவனவாய் ஒன்றென்பதாய்த் தோற்றுமென்பாரோடோ, அலங்காரத்துள் அவரவர் கிளவியும் கூற்றுமாகக் கூறவேண்டி வேறுபடுப்பாரோடோ நமக்கு மாறுகோளில்லை. "நாடக நிலையுள் நிகழும் சுவை வேறு மெய்ப்பாடு வேறு" என்பாரோடுதான் ஈண்டு மலை வென்க. சுவையென்பதே உள்ளத்தின் புடைபெயர்ச்சி யாகியே மனத்துள் நிலையாக நிகழும் உண்மை நிகழ்ச்சியின் தோற்றம் (expression the sincere stage of mind). ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தும் இதுவே ஆதல் வேண்டும். ஆகவே, அலங்கார நூலார்நெறி சென்று நாடக நிலையுள் வேண்டப்படும் சுவையை மெய்ப்பாட்டோடு வேறுபடுத்துதல்

பெருந் தவறு என்பது பெறப்படும். அன்றியும் ஆசிரியர் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலுள்,

"வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே"

என்றாராகலின் உயிரொடு தொடர்புடைய அல்லது அதனோ டிரண்டறக் கலந்த மனநிகழ்ச்சியே சுவையும் மெய்ப்பாடும் குறிப்புமாகிய எல்லாம் என்பது அவர்க்குக் கருத்தாம். வினை மெலிதற்குக் காரணமும் நெஞ்சத்துப் பிறந்த சோர்வே யாகும். அற்றேல் பேராசிரியர் முப்பத்திரண்டாக உறழ்ந் தும், பதினொன்காக அடக்கியும் ஆசிரியர் பிறர் மதம் பற்றி ஓதினார் என்னுங் கருத்தை வெளிப்படுப்பது எற்றுக்கோ எனின், அவரெல்லாம் சுவையும் மெய்ப்பாடும் வேறென்று கொண்டு பல்லாற்றானும் பகுத்து இடர்ப்படுவாராயினர். ஆசிரியர் தொல்காப்பியர் அம்மயக்க நெறி தலைப்படாது ஒன்றென்பதோர் உண்மையைப் புலப்படுத்தவே "அப்பா லெட்டே மெய்ப்பாடென்ப" என்று தேற்றஞ் செய்தார்" என்பவற்றை விளக்குதற்கேயாம். "உலகத்தாருள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தாற்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்" என்ற பேராசிரியர்க்கும் உள்ளம் என்பது யாண்டும் இடையீடின்றி யாக்கையின்கட் பரந்து பட்டதோர் உணர்வென்பதே கருத்தாகலின் பொருட்பாகு பாட்டு முறை (classifications of the Subject) யால் சுவைப்பொருள், சுவையுணர்வு, குறிப்பு, விறலென நான்கா மாயினும் சுவையும் மெய்ப்பாடும் ஒன்றென்றே கொள்ளல் வேண்டும். இன்னும், "ஒன்பது சுவையெனப்பட்ட வற்றுள்"......... "அச்சுவை எட்டனோடுங் கூட்டி"......... என்று அவருரையின்கட் பரந்து வருதலின் வேறென்பார், புறத்தார்க்குப் புலப்படும் நிகழ்ச்சியைக் கவிநுகர்ச்சியாகக் கொண்டு ஓர் காரணம்பற்றி அவரவர் கூற்றாக வெளியிடும் பாடல்களில் அலங்கார நூலார் நெறிபற்றிப் பொருள் காட்டியே வேறெனல் வேண்டும். வேண்டினும் பிழைபடும், என்னை ? அவர்தாமும் சுவைக்கு மெய்ப்பாட்டை ஏது வாக்குவராதலினென்க. மேல்புல அறிவியல் நூலார்

(Western Scientifics) கருத்துப்படி தீச்சுட்ட இடத்தில் நிகழும் நோயுணர்வுக்குரிய உணர்ச்சியுள்ளம் அச்சுட்ட இடத்திலேயே இருப்பதென்பதேயன்றி வேறல்ல. அக்கருத்தும் இங்கே ஒப்புநோக்கி உண்மை காணுதற்கு உதவக்கூடியதாகும்.

அன்றியும் சுவை வேறு மெய்ப்பாடு வேறெனின் ஆசிரியர் காட்டலாகாப் பொருளென (பொருளியல் 53)க் கூறிய ஆண்டே விவரித்திருத்தல் கூடும். "மேலை இயல்களுள் கூறப்படும் ஒழுகலாறுகளுக்கும், காட்டலாகாப் பொருளென்பவற்றிற்கும் (Abstracts) எல்லாம் பொதுவாகிய குறிப்பு இவையாகலின்" என்றார் பேராசிரியர். உவமவியலுக்கு இயைபு கூறவந்த அவர், "மேற்பொருள் புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றாகலின்" என்றும், "எங்ஙனமோவெனின் ஆபோலும் ஆமா என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட்சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலான் என்பது" என்றும் பொருந்துமாற்றான் இயைபு கூறினார். இதில் ஆமா கண்டவழி ஆவொப்புமை தோன்ற ஆமாவெனும் உணர்வு பெறப்படுவதற்கு விளக்கமாகப் புறப்படும் மெய்ப்பாடின்மையின் அவ்வுணர்வே சுவை மெய்ப்பாடு எல்லாமாகும் என்பது பேராசிரியர் கருத்து என்க. இதுகாறுங் கூறிய சில பல ஏதுக்களால் சுவை வேறு மெய்ப்பாடு வேறு என்பது அன்று இரண்டுமொன்றே என்னுங் கருத்து ஒருவாற்றாற் புலப்படும். இனி அகப்பொருள் விளக்கமுடையார்,

> "நகைமுத லாமிரு நான்மெய்ப் பாடு
> நிகழ்பொருள் மெய்ப்பட நிற்பமெய்ப் பாடே"

என்று கூறினர். "அவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யின்கண்ணே வெளிப்பட நிற்பன மெய்ப்பாடென்னும் உறுப்பாம். மெய்ப்பாடு வெளிப்பாடெனக்

கொள்க" என்று இதன் உரைகாரருரைத்தார். மெய்ப்படலென்பதற்குப் புலப்படுதலென்ற பொருளே அமையும். வெளிப்படலென்ற பொருள் குறிப்பொடுபடுதலுக்கு ஒவ்வாமையின், குறிப்பொடு தோன்றல் என்னும் பொருளைத் தரும் புலப்பாடென்பதே அமைவது. இவ்விருவரும் மெய்ப்படலென்றதல்லது வேறுபடுத்துரையாமையின் ஒன்றென்பதே கருத்தாகும். அன்றியும் அகப்பொருட்கே யுரியனவற்றைக் கூறலின் புலனெறி வழக்காற் செய்த செய்யுளிற் கண்டு சுவைத்தலல்லது பிறவாற்றாற் சுவைத்தல் ஒத்தகாமத்திருவர்க்கன்றிப் பிறர்க்கில்லை. அதனான் இதனை ஒரு பெருஞ் சான்றாகக் கோடல் வேண்டுமென்பதின்று. இன்னும் ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுளியலின்கண்,

> "உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருளான்
> மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்" (சூ. 516.)

என்று மெய்ப்பாட் டுறுப்புக் கூறினர். "உய்த்துணர்ச்சியின்றி அவ்விடத்து வந்த சொல்லப்படும் பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பல் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்" என்றார் பேராசிரியரும். ஈண்டும் மெய்ப்படலென்பதற்குப் புலப்படலென்பதே சிறக்கும். அன்றியும் இவை புலனெறிவழக்கிற் செய்யுளுறுப்புப் பற்றி வருவனவாதலால் நாடகநிலையோடு சிறிதளவு வேறுபடுகின்ற இயல்பினை உடையது எனல் வேண்டும். "கவிப் பொருளுணர்ந்தால் அதனானே சொல்லப்படுபொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென்றான்" எனவும் "தலைவரும் பொருளானெனவே நோக்குறுப்பாதல், உணர்ந்த பொருள் பிழம்பினைக் காட்டுவது, மெய்ப்பாடென்பது இதன் கருத்து" எனவும் பேராசிரியர் மேலும் எழுதுகின்ற விளக்கங்களால் இவை வலியுறும். ஆக இதுவரை கண்ட சில சான்றுகளால் அகனைந்திணை பற்றிவருகின்ற மெய்ப்பாடுகள் எல்லாத்திணைகளும் பற்றிவரும் பொதுமெய்ப்பாடுகளோடு மிகச் சிறிய அளவில் வேறுபாடுடையதேனும் ஒருதுறைக

குரிமை பூணும் பொருள்வகைச் செய்யுளொழிந்த பிறவற்று ளெல்லாம்வேறுபாடின்றிச் சுவையும்மெய்ப்பாடுமிரண்டறக் கலந்தே ஒரு நிகழ்ச்சியாய் வெளிப்படுமென்க. அன்றியும் வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தால் அச்செந்நூல் தானே புறம்போந்து தெரிவதல்லது பிறிதொன்று தெரிவது யாண்டும் இல்லை. ஆகலின் உள் நிகழுஞ் சுவையே மெய்ப்பாடு, மெய்ப்பாடே சுவை, அது வேறு இதுவேறல்ல, தோற்றும் நிலவகையான் வேண்டுமாயின் வேறுபடுத்தல் ஒல்லும். "வேப்பு முதலாயின பொருளும் அதனோடு நா முதலாயின பொறியும் வேறு வேறு நின்றவழிச் சுவையென்று சொல்வதே பிறவாமையானும் அவ்விரண்டுங் கூடியவழிச் சுவையென்பது பிறத்தலானும் அவை பதினாறும் எட்டெனப்படும்; இனிக் குறிப்புஞ் சத்துவமு மென்பனவும் உள்ள நிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடு மென்பராகலின் அவ்வுள்ள நிகழ்ச்சியை வெளிப்படுப்பது சத்துவமாகலின் அவை பதினாறும் எட்டாயடங்குமாகலின் அவை ஈரெட்டுப் பதினாருகு மென்பது" என்ற பேராசிரியர்க்கும் உட்கருத்து இதுவே ஆதல் ஒருதலை. அன்றியும் பிரிவுகளெல்லாம் மெய்ப்பாடு அல்லது அதனேடொருபொருட்கிளவியாகிய சுவையின் புடைபெயர்ச்சி வகைகளே அல்லாமல் சுவை யென்பதும் மெய்ப்பாடென்பதும் வேறு வேறு நிகழ்ச்சிகள் எனத் தலைமைப்பொருளே பிரிவுபடுக்கப்படுவது பொருந்தாக் கூற்றும். ஆசிரியர் செயிற்றியனாரும் புடைபெயர்ச்சி வகையான்,

"எண்ணிய மூன்றும் ஒருங்கு பெறும்என
நுண்ணிதின் உணர்ந்தோர் நுவன்றனர் என்ப"

என வேண்டியதன்றிப் பிற வகையான் வேறுபடுக்க வேண்டினாரல்லர். தவிரச் சுவையும் மெய்ப்பாடும் அபேத சம்பந்தமாய்ச் சமவேதித்து இயல்வனவாகிய சமவாயத்தோடு சையோகித்து நிகழ்தலின் ஒரு தொழிற்பண்பிற்கு மற்றொரு பண்பு கற்பித்ததாய் மாறு எய்த ஏதுவாகும் இவ்வேறுபா டுடையோர் கூற்று. சுவை என்பது இரசனேந்திரியத்தாற்

கவரப்படுங் குணம்" என்பர் தருக்கநூலார். ஒரு பொருளைக் காண்பதனால் ஏற்படுகின்ற உணர்வு வேறு புறப்பாட்டு நிகழ்வு வேறென்னின், சையுத்த சமவேத சமவாயமாக நிகழும் உள்ளத்தே புறத்ததாகிய நிகழ்ச்சியெனும் கருமப் பண்பைப் பிறிதோர் பண்புடையதாக்கி வழுப்படுத்தும், என்னை? குணத்திற்குக் குணம் ஒப்பாமையின் "அன்மையி னின்மையின்" என்னுஞ் சொல்லதிகாரச் சூத்திரத்திற்குச் சேனாவரையரும் இவ்வாறுரைத்தார். இச்சொல்லப்பட்ட மறுக்கவொண்ணாக் காரணங்களால் சுவையும் மெய்ப்பாடும் வேறெனல் தலைமைப்பொருளாகிய ஒன்றை வேறுபடுத்தும் வறுநோக்கமே யன்றி வேறாகாது; பண்பிற்கும் பண் பின்மையின்.

இதுகாறும் கூறியவை மெய்ப்பாட்டியலுக்கு உரிய ஆராய்ச்சி முன்னுரைகள். இனி மேல் வருவனவாகிய மெய்ப்பாடுகளையும் அவற்றின் நெறி துறைகளையும் தொல் காப்பியர் அடிச்சுவடு பற்றி விளக்கமுற்படுதல் வேண்டும். இரசதரங்கிணி, இரசமஞ்சரி, இரசகங்காதரம் முதலிய வடமொழி நூல்கள் இரசங்களை அலங்காரங்களின் இயைபோடு கூடிய முறையில் விள்க்கிச் செல்லுகின்றன. ஆசிரியர் தொல்காப்பியர் சுவையை விளக்க வந்த நெறியே ஒரு புதுநெறி. அது தமிழுக்குப் புதியது. தமிழில் மெய்ப்பாட்டியல் ஒரு புதிய துணிவான வனப்பு மிக்க ஆக்கம். அதை விளக்க வேண்டுமானால் ஏனை நூல்களின் கருத்துப்போக்கை ஒருவாறு கூறிப் பிறகு அதன் தனி நயத்தை எடுத்து நிறுவவேண்டும், குன்றிமணியிடைக் கிடந்த பொன்மணி தேர்ந்தெடுத்தல் போல. அத்தேர்வில் நச்சினார்க்கினியர் இளம்பூரணரைக் காட்டிலும் பேராசிரியர் ஒருவரே நமக்குத் துணைசெய்ய உரிய அளவு தகுதியால் சிறப்புப்பெற்றிருக்கிறார். உண்மையையும் காண முயன்று உரைத்திருக்கிறார்.

94'

உவமை யிலக்கணம்

[தென்னாப்பிரிகா, டர்பன், திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.]

கடவுள் படைத்த இயற்கை நிரம்பிய உலகத்துக்கு, உயிர் வருக்கங்களை ஆன்றோர் ஓரறிவு முதல் ஆறறிவுயிர் ஈறாகக் குறித்துப் பகுத்திருக்கின்றனர். அதில் வைத்து மேம்பட்ட அறிவுடையோர் மானிடரே. மானிடரையும் மாக்கள் மக்கள் என இரண்டாகப் பகுத்தனர்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே யாறறிவுயிரே."

அதாவது மாக்கள் ஐயறிவுடைய உயிராகவும், மக்கள் ஆறறிவுடைய உயிராகவுமாகின்றது. ஆறாவதறிவென்பது ஈண்டு பகுத்தறிவாகும், இதனால் பகுத்தறிவில்லாத மனிதர் விலங்கோடொப்பர் என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு மேற்கோளாகக் கம்பர்,

"தக்கவின்ன தகாதன வின்னவென்று
ஒக்க வுன்னவராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே, மனுவின்நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே."

எனக் குறிப்பிட்டு, ஒருபடிகூட உயர்த்திக் கூறி வற்புறுத்தி நிலைநாட்டினர். நிற்க இதன்படி மாக்களை மக்களாகச் செய்வது அறிவு, அவ்வறிவை வளர்க்கக் கூடிய வல்லமை வாய்ந்தது கல்வியேயன்றி பிறிதன்று. அக்கல்வி வளர்க்குங் கருவி பலவற்றுள்ளும் முதற் கருவியாகவுள்ளது நூற்களே யாகும். நூற்களாவன அறிவுடையோர் தம்மனதிற் றோன்றிய அறிவு நிகழ்ச்சிகளைப் பிறரறிந்துயரும் பொருட்டு வரிவடிவிற் பொறித்து வைத்தவையே. இங்ஙனம் வந்த நூற்களைப் படித்துவருதலினால் விளக்கமடைந்த அறிஞர் பல்வேறு இலக்கியங்களைத் தம் கருத்திற்கியைந்தவாறு, செய்யுளிலும் உரைநடைகளிலும் எழுதிவைத்துப் போற்றிய தனால் நூற்கள் பெருகின. பிற்காலத்துச் சான்றோர் இங்ஙனம்

அறிவு கனிந்து ததும்பியதனால் ஏற்பட்ட இலக்கிய நூற்களை ஆதாரமாக வைத்து, இலக்கணங் கூறி வரையறை செய்தனர். சுவரின்றிச் சித்திரமில்லாததுபோல 'இலக்கியமின்றி இலக்கணமில்லை' என்பதை அனைவர்க்கும் நன்கு புலப்படுத்த 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்று கூறினர் ஓர் இலக்கண ஆசிரியர்.

அவ்விலக்கணமும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். இவ்வைந்தும் முறையே ஒன்றினோடொன்று விடாத தொடர்ச்சியுடையன. ஒவ்வொரு இலக்கணத்தையும் பற்றித் தனித்தனி பலரும், இவ்வைந்தையும் ஒன்று சேர்த்துச் சிலரும் பலவாறு தொகை வகை விரியிற் கூறியிருக்கின்றனர்.

இனி உவமையென்பது ஐவகை இலக்கணங்களுள் அணியிலக்கணத்துள் அடங்கியது. அணியாவது, இயற்கையான நமது யாக்கையை அணிகலன்கள் அழகு செய்வதுபோல, செய்யுட்குப் பொருட்சிறப்பால் அலங்காரஞ் செய்வதாகும். உடலுக்குப் பூணும் அணிகள் பலவாறுவனபோல, செய்யுள் அணிகளும் பலவாயின. யாக்கையிற் பூணும் அணிகலன்கள் பலவாறுயிருப்பினும், அதன் முதற்பொருள் பொன்னுவது போலவும், வெவ்வேறு முறையான சமயக் கோட்பாட்டால் பல்வேறு கடவுளெனத் தோன்றியும் உய்த்து நோக்குமிடத்து எல்லாம் முழுமுதற் பொருளாகிய பேரொளிப்பிழம்பிலடங்குவது போலவும், செய்யுள் அணிகளனைத்தும் தோற்றம் பலவாறுயிருப்பினும் எல்லாம் உவமையுளடங்கும். பொற்கொல்லனொருவன் இயற்கையான செம்பொன்னினால் தன் கைத்திறங்கொண்டு ஆபரணங்கள் செய்து பூணும் இடவேறுபாட்டால், காப்பு ஆழி எனத் தொடக்கத்தன பெயர் கற்பித்து நிலவச் செய்வதுபோல், அறிவுடைக் கவிவாணனொருவன் உவமை ஒன்றையே முதற் பொருளாக வைத்துத் தன் அறிவின் திறத்தால் பல்வேறு விதமாகக் கற்பித்து, அழகு படுத்தி, உருவக முதலிய பெயர் கொடுத்துக் காவிய உலகத்தில் உலவச் செய்தவைகளே நாளடைவில்

அணிகள் பலவாயின. கற்பனை செய்வோர் மனோபாவமே அணிக்கு எல்லையாகுமேயன்றி அணிக்கு அற்றமில்லை என்பதை,

> ''படைக்குனர் சிறுமையல்லால்
> எண்பெருங் கழகுக்கு எல்லையில்லையாம்''

எனக் கம்பரும் கூறியிருக்கின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் அணியிலக்கணங் கூறும் இயலுக்கு, உவமவியல் எனக் கூறியதும் இதுபற்றியேயாகும். அப்பய்ய தீக்ஷிதரும் சித்திர மீமாம்சையில் 'உவமையென்னும் கூத்தி பல்வகை வேஷம் புனைந்து, காப்பியமாகிய அரங்கத்தில் வந்து நடித்துக் கற்றோர் மனத்தைக் களிப்படையச் செய்கின்றாள்'. என்று பொருள்படக் கூறியிருக்கின்றார்; தண்டியலங்கார ஆசிரியர் உவமையிலக்கணங் கூறுமிடத்து,

> ''பண்பும் தொழிலும் பயனுமென்றிவற்றின்
> ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து
> ஒப்புமை தோன்றச் செப்புவ துவமை''

எனக் கூறுகின்றனர். அதாவது, பண்பு தொழில் பயன் என்பன, காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வருகின்ற பொருளோடு பொருளியையவைத்து, ஒப்புமை புலப்படப் பாடுவது 'உவமை' என்னும் அலங்காரம் எனத் தொடக்கத்து ஐந்து சூத்திரங்களால், ஏறக்குறைய முப்பத்திரண்டு வகையாகப் பிரித்துக் கூறுகின்றனர்.

இவ்விலக்கணத்தால் பொருளோடு பொருள் சேர்ந்து இசையும் இரு பொருட்கு ஒப்புமை அறிவதற்கு, உவமை என்னும் அணி ஏற்பட்டதென்று அறியக்கிடக்கின்றதேயன்றி வேறு புலப்படவில்லை. தண்டியலங்காரக்காரர் கூறிய படி, ஒப்புமை புலப்படக் கூறவில்லையானால் கவியின் இயற்கைப் பொருள் சிறவாதோ? அங்ஙனமாயின் உவமை என்னும் அணி எதற்கு? என்று இத்தொடக்கத்தன வினாவிற்குக் காரணமேற்படுகின்றன. ஆதலால் உவமை ஏற்படக் காரணமறிந்த பின்னர் பொருள் கொண்டால் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகும்.

தருக்க நூலாசிரியர் இதற்கு, அடியில் வருமாறு இலக்கணங் கூறுகின்ருர். அதாவது, "உவமானம் உவமிதி யறிவிற்குக் காரணம், உவமிதி பெயர்க்கும், பெயர்ப் பொருட்குமுள்ள சம்பந்தமறியுமறிவு; அதற்குக் காரணம், ஒப்புமையறிவு; அஃதெங்ஙனமெனில் 'ஆமா' (காட்டுப் பசு) என்னும் சொற்குப் பொருளுணராதான் ஒருவன், 'ஆ' வினை யொக்கும் 'ஆமா' என ஓராண்மகன் சொல்லக் கேட்டுக் காட்டகம் புக்கானுக, அவன் கூறிய தொடர்மொழிப் பொருளைக் கருதி 'ஆ' வொப்புமையடுத்த பிண்டத்தைக் கண்டபின்னர், இது 'ஆமா' வென்னும் உவமிதியறிவு தோன்றுமென்க" என்பதே.

இங்குக் காட்டிய இலக்கணத்துள் ஒப்புமைக்கு விளக்கம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. ஓர் பொருளைப்பற்றித் தெரியாத ஒருவனுக்கு, அவன் தெரிந்த அப்பொருளையொத்த வேருெரு பொருளைச் சுட்டிக்காட்டி அறியவைத்தால், பிறகு எப்பொழுதாவது அப்பொருளைக் கண்ட சமயம் உவமை காட்டி அறிவித்த பொருள் நினைவிற்கு வரப்பெற்று, உண்மைப் பொருள் இதுவென்று ஐயமின்றித் தெரிந்து கொள்கிருன். தெரியாத பொருளின் தன்மை முதலியவை களை அறிவின் தன்மையினுல் நன்கு தெரிந்துகொள்வதற்கே உவமை ஏற்பட்டது. தன்னைக் காட்டித் தன் குரவரையும், அகப் பொருளை வைத்துப் புறப்பொருளையும், முகத்தை வைத்து மதியையும். கூரையைக் காட்டி வானத்தையும், பூனையைக் காட்டிப் புலியையும் விளக்கவேண்டும்; அன்றி அறியாத பொருளைக்கொண்டு அறியவேண்டும் பொருளுக்கும், அறிந்த பொருளுக்கும் ஒப்பிடுவது இயற்கையன்று என்பர் சிலர். சிலர் அறிந்த பொருளாயிருப்பினும், பொருள் சிறப்படைவதற்கு உவமை கூறி நன்கு விளக்கவேண்டு மென்றும் கூறுவர். இவைகளுக்கெல்லாம் அவரவர்களது கொள்கையே பிரதானமாகும்.

98

ஆதீனத்தின் இம்மாத நிகழ்ச்சிகள்

கார்த்திகைக் கடைஞாயிறு விழா :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வழக்கம்போல கார்த்திகை ஞாயிறுகளில், பெருமான் தருமபுரம் காவிரித்துறைக்கு எழுந்தருளித் தீர்த்தங்கொடுத்தருளினர்.

13—12—53 கடைஞாயிறன்று சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தடைபட்டிருந்த பஞ்சமூர்த்தி புறப்பாடு வெகுவிமரிசையாக இந்த ஆண்டு நிகழ்ந்தது. காலை 7-மணிக்கெல்லாம் வெள்ளி வாகனங்களில் **பஞ்சமூர்த்திகளையும்** புறப்பாடுசெய்து தீர்த்தத்துறைக்கு எழுந்தருளச்செய்யப்பெற்றது. ஏராளமானமக்கள் தீர்த்தமாடி வழிபட்டனர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளினர்கள். அன்று பகல்முழுதும் காவிரித்துறையிலேயே பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளியிருந்து அனைவர்க்கும் அருள்வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. பகல்முழுவதும் அன்பர்கள் தரிசனஞ்செய்து வழிபாடாற்றினர்கள்.

இரவு 7-மணிக்கு, சிறந்த மேளக்கச்சேரியுடனும், வாணவேடிக்கையுடனும் சுவாமி புறப்பாடு நிகழ்ந்தது. சுவாமி ஆலயத்தைய அடைய சுமார் இரண்டுமணிநேரமாயிற்று.

8-மணிக்கெல்லாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளினர்கள். சுவாமிக்கும், அம்மனுக்கும் தக்ஷிணமூர்த்திக்கும் சந்தனக்காப்பலங்காரம் செய்விக்கப்பட்டிருந்தது. முறையே பஞ்சமுகார்ச்சனையும், நவசக்தி அர்ச்சனையும் சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன. திருக்கருகாவூர், சமயத்தொண்டர், திரு. மருள்நீக்கியார் "அன்பு" என்பதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். வெகு

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி ஆலயத்தில்
13—12—53 கடைஞாயிறன்று
பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளியாகி வருதல்.



தருமபுர ஆதீனம் 2-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழாவில்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வழிபாடு செய்தருளுதல்.

காலமாக நின்றிருந்த இந்தப் பஞ்சமூர்த்தி புறப்பாடு அன்று வெகு சிறப்பாக நடந்ததுபற்றி அன்பர்கள் அனைவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

ஆதீனத்தைச்சார்ந்த குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானத்திலும் கடைஞாயிறன்று வழக்கம் போல் காவிரிதீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

இங்கும் திருவாஞ்சியம் ஸ்ரீ ப்ராக்ருகேசுவரர் தேவஸ்தானத்திலும் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார், வித்துவான், திரு V. S. குருசாமி, வித்வான், திரு. V. திருஞானசம்பந்தம், வித்வான், திரு. C. சிங்காரவேலன் ஆகியோர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்கள் திருமுறை ஓதினர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூஜைவிழா :

தருமபுர ஆதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழா 23—12—53 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ பந்தலலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. முதனாள் மாலை 6-மணிக்கு, குருமூர்த்தத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் எழுந்தருளி, தரிசனம் செய்தருளினார்கள். நிவேதனம் குழந்தைகட்கு வழங்கப்பட்டது. ஆதீனத் தேவாரபாடசாலை ஆசிரியர், மாணவர்கள் தேவாரபாராயணம் செய்தார்கள். அடுத்து, சொற்பொழிவு தொடங்கியது. வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வழிபாட்டின் அவசியத்தை விளக்கிப்பேசி, சபையைத் தொடங்கிவைத்தார்கள். சமயத் தொண்டர் திரு. மருள்நீக்கியார் குருபக்தி என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்.

மறுநாள் குருபூஜைவிழா: வழக்கம்போல் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் காலை திருப்பள்ளியெழுச்சி பூஜையை முடித்துக்கொண்டு, அடியார் கூட்டம் சூழக் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தீபாராதனைக்குப்பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள். வந்திருந்த ஏழைக் குழந்தைகள் எல்லோருக்கும் நிவேதனம் வழங்கப்பட்டது.

நடுப்பகல் ஒருமணிக்கு ஆதீன மடாலயத்தில் மாகேசுவர பூஜை நடைபெற்றது. ஏழைகட்கு அன்னமும் வழங்கப் பட்டது காலையிலும், மாலையிலும் குருமூர்த்த ஆலயத்தில் திருவருட்பயனைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

மாலை 6-30 மணிக்குமேல் திருவாரூர் T. V. நமசிவாயம் பாட்டு; தருமபுர ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர்கள் திரு. T. S. சம்பந்தம் பிள்ளை பிடில்; குத்தாலம், ஸ்ரீ R. விசுவநாத அய்யர் மிருதங்கம். இப்படி சிறந்த இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளியானார்கள். மாயூரத்திலிருந்தும், பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான அன்பர்கள் வந்திருந்தார்கள். தீபாராதனைக்குப்பிறகு குருபூஜை விழா மலராக அச்சிட்ட **சிவபூஜா விதி** என்ற ஆதீன வெளியீடு வழங்கப்பெற்றது. நிகழ்ந்த சொற்பொழிவுகள் :—

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "பதிமுது நிலை", வித்வான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "உயிரவைநிலை", வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் "இருள்மலநிலை", ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "அருளதுநிலை", புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "அருளுருநிலை", வித்துவான் திரு. V. S. குருசாமி "அறியும்நெறி", வித்துவான் திரு. C. சிங்காரவேலன் "உயிர் விளக்கம்", வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் "அஞ்செழுத்தருள்நிலை", சமயத் தொண்டர் திரு. மருள்நீக்கியார் "அணைந்தோர் தன்மை".

மாயூரம் கோயிலில் விசேஷ பூஜை:

இம்மாத முழுவதுமே ஆலயங்களில் விடியலில் திருப் பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாக நடக்கும், அன்பர்கள் சென்று வழிபடுவார்கள். எல்லா நாளையும்விட இந்த 1954-ம் ஆண்டு பிறந்த முதல் நாளிலேயே அதாவது 1—1—54-ல் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ மாயூரநாதர் ஆலயத்தில் அன்பர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது. தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி, ஆதீனச் சார்பில் ஷை கோயிலில் அன்றைய திருப்பள்ளியெழுச்சியில் விசேஷ வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, விடியலிலேயே சுவாமி, அம்மன், விநாயகர், அறுமுகன், ஸ்ரீ குமரக்கட்டளை முருகன் எல்லாமூர்த்திகட்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அருமையான அலங்காரம். தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் வழக்கம்போல மடாலயத்தில் பூஜை பாராயணாதிகளை முடித்துக்கொண்டு சுமார் ஏழு மணி அளவில் ஷை ஆலயத்திற்கு எழுந்தருளியானார்கள். கோபுரவாயிலிலேயே திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள், ஆலய சூபரிண்டெண்ட், ஷை கோயில் குமரக்கட்டளை சுவாமிகள் உட்பட அனைவரும் வரவேற் றார்கள். சம்பிரதாயப்படி விபூதிபிரசாதம் பார்க்கப்பட்டது. முறையே ஆலய வழிபாடு நடைபெற்றது, விநாயகப்பெரு மானுக்குச் சோடசார்ச்சனை, மாயூரநாதருக்குப் பஞ்ச முகார்ச்சனை, அறுமுகனுக்கும், முருகப்பெருமானுக்கும் சண்முகார்ச்சனை, அம்பிகைக்கு நவசக்தி அர்ச்சனை எல்லாம் சிறப்பாக நடைபெற்றன, அன்பர்கள் ஆனந்தமாக வழிபாடாற்றினார்கள்,

8-மணி முதல் தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு V. S. குருசாமி ஆகியோர் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அன்று விடியல் மூன்று மணியிலிருந்தே ஒலிபெருக்கியின் வாயிலாகத் திருமுறை மணம் ஊரெங்கும் பரப்பப்பட்டன. ஆதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களும், ஆதீனத் தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியர்களும் ஷை மாயூரநாதசுவாமி தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவர்களும் இப்பணியில் ஈடுபட்டார்கள். சிறப்பாகத் திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் பாராயணம் செய்யப்பட்டன. அவர்கள் ஓதிய அருமையான தேவாரப் பாசுரங்களும் அன்பர்கள் மனதைக் கனியச்செய்தன, 5-மணி அளவில் தக்கபக்கவாத்தியங்களுடன் நான்கு திருவீதிகளிலும் வீதியுலாவாகத் தேவாரகோஷ்டியும் நடைபெற்றது. வீதிகளில் பாராயணத்தோடு தேவாரத்தின் உட்பொருள், பாடிய சந்தர்ப்பம் முதலியவைகளையும் ஆங்காங்கு திருமுறைவாணர்கள் பிரசங்கம்செய்தது மிகச் சிறப்பாக இருந்தது. அன்பர்கள் இதனைப் பெருவிருந்தாக எண்ணி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பாராட்டினார்கள்,

ஊஞ்சல் உற்சவம் :

இம்மாதத்தில் எல்லா ஆலயங்களிலுமே திருவெம்பாவை உத்ஸவம் நடைபெறுவது வழக்கம். அதன்படி சீகாழி கோயிலில் திருவெம்பாவை உத்ஸவம்—ஊஞ்சல் உத்ஸவம் எல்லாம் 12—12—53 முதல் பத்து நாளும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொருநாளும் பெருமானையும் பெருமாட்டியையும் ஊஞ்சலில் எழுந்தருளுவித்துப் பாடல் ஓதப் பெற்றது, பாடல் தோறும் தீபாராதனை. ஒருநாள் திருவாசகத்திலுள்ள திருப்பொன்னூசல் பாடல்கள் முழுதும் ஒவ்வொன்றாக ஓதப்பட்டு ஆராதனை நடந்தது. திருவாதிரை அன்று நடராஜப்பெருமான் வீதிக்கெழுந்தருளித் தரிசனம் கொடுத்தருளினார். முன்னைய வருஷங்களைவிட இந்தவருஷம் உற்சவம் மிகச் சிறப்பாக நடந்ததை அன்பர்கள் பாராட்டினார்கள்,

ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை:

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ ஸ்தலங்கள்தோறும் அபிஷேக ஆராதனை செய்துவரும் வழக்கம்போல் இம்மாதத்திலும் (28—12—53) திருவாஞ்சியம் ப்ராக்ருகேஸ்வரர் ஆலயத்தில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருவாஞ்சியத் திருப்பதிகங்கள் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. ஆதீன ஓதுவா மூர்த்திகளைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச்செய்யப்பெற்றது.

விடியலில் திருவெம்பாவை பாராயணம்:

பொதுவாகத் தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில் பெரும்பாலனவற்றில் ஒலிபெருக்கியமைத்து எப்பொழுதுமே தேவார இன்னிசையாளர்களைக்கொண்டு விடியலில் திருமுறைப்பாராயணம் செய்யப்பெற்றுவருகின்றது. ஆயினும் இந்த மார்கழிமாத விடியலில் மெய்யன்பர்களது ஒவ்வொரு இல்லத்திலும் திருவெம்பாவை முழக்கம் கேட்டுக்கொண்டேயிருக்குமல்லவா? ஆகவே தேவஸ்தானங்கள் எங்குமே விடியல் 4 மணிக்குத் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை பாராயணம் செய்யப்பெற்றது. 'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே! கண்ணுக்கினியானைப் பாடு; ஓல மிடினும் உணராய் உணராய்; இன்னம் புலர்ந்தின்றோ?' என்றெல்லாம் ஒலிபெருக்கியின் மூலம் எங்கும் பரவும் ஓசை அனைவரையும் படுக்கையினின்றும் எழுப்பி உட்கார வைத்துவிடும். வழக்கம்போல் ஆதீன மடாலயத்திலும் ஆதீனப்பாடசாலை மாணவர்கள் பாராயணம் செய்தார்கள். ஆதீனக் கல்வி நிலைய மாணவர்கள் அனைவரும் விடியலில் நீராடி, தூய்மையோடு திருப்பள்ளியெழுச்சி பாராயணம் செய்துகொண்டு வீதிவலமும் வந்தார்கள்,

வள்ளலார்கோயிலில் விசேஷ வழிபாடு:

தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் 7—1—54 அன்று திருப்பள்ளியெழுச்சி பூஜை, விசேஷ வழிபாடாக நடைபெற்றது. அன்று குருவாரமாகையால் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு உபவாச மௌன விரதம். காலையில் திருப்பள்ளியெழுச்சி பூஜையை முடித்துக்கொண்டு வள்ளலார் கோயிலுக்கு எழுந்தருளியானுர்கள். குரு மூர்த்திக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை நடைபெற்றது. சகஸ்ரநாமார்ச்சனையும் நிகழ்ந்தது.

திருக்கடவூரில் விசேஷ வழிபாடு:

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி 8—1—54 அன்று திருப்பள்ளியெழுச்சி காலத்தில், விசேஷ அபிஷேக ஆராதனை செய்விக்கப்பெற்றது. பெருமானுக்கும், காலசங்கார மூர்த்திக்கும் பஞ்சமுகார்ச்சனையும், அபிராமியம்மைக்கு நவசத்தி அர்ச்சனையும் நடைபெற்றன. ஆராதனையின்போது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளியாகி வழிபாடு செய்தருளினுர்கள்.

திருவையாற்றில்:

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி ஆலயத்திற்கு 26—12—53 இந்துமத பரிபாலன போர்டு கமிஷனர் திரு. டி. கே. சங்கரவடிவேலுப் பிள்ளை அவர்கள், தஞ்சை ஜில்லா உதவி கமிஷனர் திரு. பி. சுப்பிரமணியபிள்ளை கலெக்டர் திரு. டி. கே. பழநியப்பன் ஆகியோர்களுடன் விஜயஞ்செய்தார்கள். அப்பருக்குக் கயிலைக் காட்சி அளித்த தென்கயிலாயம் உள்ளிட்ட எல்லா இடங்களையும். ஆங்காங்குள்ள பழங்காலச்சிற்பங்களையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள்.

31—12—53 அன்று மத்திய அரசாங்க தொழில் மந்திரி கனம் ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் குடும்ப சகிதமாக விஜயம் செய்தார்கள். டிப்டி கலெக்டர் உள்ளிட்ட அரசியல் அதிகாரிகள் பலர் உடன் வந்திருந்தனர். தேவஸ்தானத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பெற்றது. சந்நிதிதோறும் வழிபாடு நடைபெற்றது. தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவிகள் பாடிய தேவார திருவாசகங்கள், திருப்புகழ் முதலிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள். எல்லாவற்றையும் கண்டுகளித்த கனம் மந்திரி அவர்கள் பார்வையாளர் புத்தகத்தில் கீழ்க்காணுமாறு தமது பாராட்டுதலையும் குறித்துள்ளார்கள்.

I visited the temple along with Mrs. Giri, my son Sankar and my daughter-in-law. It is kept very clean and tidy and the officers of the temple were very courteous.

(Sd.) V. V. GIRI,

சென்னை தமிழிசை விழாவில்:

சென்னையில், இவ்வாண்டு தமிழிசைச் சங்கத்தினரால் நடத்தப்பெற்ற தமிழிசை விழா 26—12—53 முதல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பலவூர்களிலிருந்தும் முத்தமிழிலும் வல்ல அறிஞர்கள் பலர் சென்றிருந்தார்கள். தேவார இன்னிசையாசிரியர்கள் பெரும்பாலோரும் இந்த விழாவில் கலந்து கொண்டு ஆராய்ச்சியுரைகள் நிகழ்த்தினர்கள். தகுந்த — குறிப்பிடத்தக்க பேராசிரியர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். வழக்கம்போல் தேவாரப்பண்ணிசை, நவசந்திகளின் போது கையாளப்பெறும் நடனங்கள், தீபாராதனையின்போது நடிக்கப்பெறும் நிருத்தங்கள் முதலாகிய பல அரியவிஷயங்கள் ஆராய்ந்து முடிவுசெய்யப்பெற்றன. கலைச் சிறுமிகள் பலர் நடனங்களை நடித்துக்காட்டி யாவரையும் வியப்புறச்செய்தனர். தருமையாதீனத்தின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணையின்வண்ணம் ஆதீனப் பாடசாலை தேவார ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களும், ஆதீனப் பாடசாலை சிவாகம ஆசிரியர், சிவாகம வித்துவான், பிர்மஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும் கலந்துகொண்டு தம் ஆராய்ச்சிக் கருத்துக்களை அழகாக எடுத்துரைத்தார்கள்.

106

தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில்

திருவெம்பாவை மாநாடுகள்

பேரளம்:

24, 25—12—53 ஆகிய இரண்டுநாளும் **பேரளம் ஸ்ரீ சுயம்புநாதஸ்வாமி கோயில் பிரசாரசபா மண்டபத்தில்** மாநாடு நடைபெற்றது. திருவாரூர் இராஜன்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். ஊர்ப் பொதுமக்கள் சார்பில் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது. அந்த வரவேற்புரை வருமாறு:—

அன்பரீர்!

மார்கழித்திங்களில் மாண்புற நடைபெறும் திருவெம்பாவை மகாநாட்டிற்கு உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். பெறுதற்கு அரியது மானிடப்பிறவியே என்று பேசுகின்றனர் பெரியோர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து பிறவி பெற்றதனால் அடையத்தகுந்த பெரும்பேற்றை அடைபவர் மனிதரே என்பதும் பெரியோர் கருத்து. அத்தகைய நற்பிறவியைப்பெற்ற நாம், ஞானமும் கல்வியும் அடைந்து, ஆண்டவனை அறிந்து, அவனருள் பெற்று, மீண்டும் இருள்தரும் ஞாலத்திற் பிறவாப் பெருநெறி அடைவதே செய்யத்தக்கது, "கற்று ஈண்டு மெய்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி" என்று கூறும் திருவள்ளுவரின் செம்மொழி நம்மால் சிந்திப்பதற்கு உரியது.

வையத்து வாழும் நாம், வாழ்வாங்கு வாழ்வதற்கு வானவன் திருவருளைப் பெறவேண்டுவது அவசியம். அத்திருவருளைப் பெற நமக்கு வழிகாட்டியுள்ளவர்கள் ஆழ்வார்களும், ஆச்சாரியார்களும், நாயன்மார்களும் ஆவார்கள். ஆழ்வார்களின் வரிசையில் அமைந்த ஸ்ரீ ஆண்டாளும் நாயன்மார்களுள் ஒருவராகத் திகழ்ந்த ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகையாரும் திருவாய்மலர்க்

தருளிய திருநூல்களே திருப்பாவை, திருவெம்பாவை, மார்கழி மாதத்தில் இத்திரு நூல்களை உள்ளம் உருகி ஓதும் அன்பர்கள் இம்மைச்செல்வங்களை இனிது பெற்று, மறுமைக்கு நலம்பெறும் மாண்பையும் அடைவார்கள் என்பது நம்நாட்டு நல்லறிஞர்கள் கருத்து. நாடு மழையின்றி வாடுவதும் மக்களுள் பகைபண்புகள் வளர்வதும் எங்கும் பட்டினியும் வறுமையும் காட்சி அளிப்பதும் உலகில் நிகழ்வதற்குக் காரணம், மக்கள் இறைநெறி நாடாது மறநெறியைப் பின்பற்றி நடப்பதே என்பது நல்லறிஞர்களின் கருத்து.

நம்மைப்பற்றி நலியும் இன்னல்களெல்லாம் நீங்கி நாடு செழிக்க நாம் அல்லும் பகலும் இறைவனை வேண்டுவது அவசியம், என்பதையே அடிப்படைக் கருத்தாகக் கொண்டு திகழ்வன திருப்பாவையும், திருவெம்பாவையும்; ஆதலின் இத் திரு நூல்களைத் தமிழர் அனைவரும் ஓதி உணர்தலும், பிறருக்கு உணர்த்துதலும் அவசியமென்பதைத் தருமை ஆதீன குருமகா சன்னிதானமவர்கள் உணர்ந்து இம்மகாநாடு நடத்தும் திருப் பணியைத் தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ள வேண்டுமெனப் பணித்துள்ளார்கள். அன்னவர்கள் பொற்பாத கமலங்களுக்கு நமஸ்கரித்து இத்திருப்பணியில் ஈடுபட்ட உங்கள் எல்லோரையும் அன்புடன் வரவேற்பதுடன் இம்மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் மீண்டும் ஒருமுறை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

வாழ்க திருப்பாவை; வாழ்க திருவெம்பாவை; வாழ்க உலகம் வளம்பெற்றே; ஆழ்கடல் போல்; வேறுபாடின்றி விளங்குக அன்பரெல்லாம்; கூறுதமிழ் வேதங்குறித்து.

இங்ஙனம்,

த. ரத்தினம் பிள்ளை,

ந. குருநாத பிள்ளை.

பிறகு தலைவர் ஸ்ரீமத், சுவாமிகளவர்கள் மனம் ஒருவழிப் பட ஆலயங்கள் ஏற்பட்டனவென்றும், ஆன்மா ஆத்மசுத்தி யடையவே சமயாச்சாரியார்களால் அருட்பாக்கள் அருளிச்

செய்யப்பட்டனவென்றும், அவற்றில் ஒன்று திருவாசகம் என்றும், இத்திருவாசகத்தில் திருவெம்பாவை மார்கழி மாதம் பூராவும் ஓதிப் பயனடையும் நாளென்றும் கூறி எல்லோரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை செய்வதன் மூலம் அடையும் பயனைவிளக்கி, திருவெம்பாவை தனியே அச்சிட்ட ஆதீன வெளியீட்டினையும் அன்பர்கட்கு வழங்கினார்கள்.

வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், 'நமக்குரிய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள். அதில் இம்மார்கழி மாதம் அவர்களுக்கு விடியற்காலம்; விடியற் காலையில் நாம் செய்யும் பிரார்த்தனையே நல்ல பலனை அளிக்கும்; இதற்காகத்தான் மணிவாசகரால் திருவெம்பாவை அருளிச் செய்யப்பட்டது. எல்லா மாதத்தையும்விட மார்கழி மாதம் சிறந்தது. எப்படியென்றால் கிறித்தவர்களும், மகம் மதியர்களுங்கூட இம்மாதத்தில்தான் பண்டிகை கொண்டாடு கிறார்கள். தலைவி தலைவனை அடைதல்போல, தலைவிநிலையில் இருக்கிற நாம் தலைவனாகியசிவபெருமானை அடையவேண்டும். இதற்காகத்தான் மணிவாசகர், திருவெம்பாவையில் பெண்மை நிலையில் இருந்துகொண்டு இறைவனைத் தோத்திரிக்கின்றார். ஆண்டாளும் அவ்வாறே கோபாலனை அடைய தோத்திரிக் கின்றாள். ஆனால் பெண்மை நிலையில் இருந்துகொண்டு பேசும் திருப்பாவையைவிட, ஆண்மை நிலையிலுள்ள மணி வாசகர், பெண் தன்மையில் தன்னை ஆக்கிக்கொண்டு பாடி யிருப்பது மிகச்சிறந்தது' என்றெல்லாம் கூறி அனைவரும் கூட்டுப் பிரார்த்தனைசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண் டார்கள். வித்துவான், திரு. V. S. குருசாமி, வித்துவான். திரு. பக்தவத்ஸல முதலியார், வித்துவான், திரு. C. சிங்கார வேல், வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தன் முதலி யோர் திருவெம்பாவைப் பிரசங்கம் செய்தார்கள். ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவை பாராயணம் செய்யப்பட்டது. தலைவர் அவர்களால் வார வழிபாடு தொடங்கப்பட்டது. இறைவாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது.

109

திருக்குறுக்கை:

26, 27—12—53 ஆகிய இரு நாட்களிலும் தருமை ஆதீன சமயப் பிரசாரகர்களால் **குறுக்கை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலயப் பிரசார மண்டபத்தில்** நடத்தப்பெற்றது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான மெய்யன்பர்கள் மாலை 6 மணிக்கே மண்டபத்தில் கூடியிருந்தார்கள். தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமையில் வழிபாடு தொடங்கப்பட்டது. சிவபுராண பாரயணத்துடன் தீபாராதனை முடிந்தது. தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், அனைவருக்கும் வரவேற்புரை கூறி, வழிபாட்டின் பலனை விளக்கிப் பேசினார்கள். ஷியூர் பஞ்சாயத்துபோர்டின்சார்பில் திரு. ராஜாங்க சேதுராயர் அவர்கள், அனைவருக்கும் மாலை சூட்டி மரியாதை செய்து உபசரித்தார்கள். பட்டாமணியம் திரு. **தியாகராஜப் பிள்ளையவர்கள்** இரண்டு நாட்களிலும் மாநாட்டிற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைவர் அவர்கள் தலைமையுரையில் 'இத்தகைய மாநாடு இவ்வூரில் ஏற்பாடுசெய்து, பல அரிய கருத்துரைகளை வழங்கத் திருவுளம்பற்றிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பொதுமக்கள் சார்பில் வணக்கம் தெரிவித்து, இவ்வூரில் இது வரையில் இம்மாதிரியான ஆஸ்திகச் சொற்பொழிவு நடந்தது இல்லையென்றும், நாம் எல்லோரும் வழிபாடு செய்யக் கூட்டுப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், திருவெம்பாவையை ஓதிப் பயனடைய வேண்டுமென்றும் கூறினர்கள்.

வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'சருகு அரித்தால் குளிர்காய நமக்கு நேரம் வேண்டாமா? இந்த வருஷம் பூராவும் வேலை செய்த நாம் கடவுளுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டும். அதற்காகவே மார்கழி மாதத்தில் காலையில் துயில் எழுந்து திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சியைப் பாராயணம் செய்யவேண்டும். சோழ நாட்டவர்களாகிய நாம் சோற்றுச் செருக்கால் சோம்பேறி

110

களாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் அடிக்கொரு தலம் ஏற்பட்டுள்ளது. பாண்டிநாடு, சேரநாடு. தொண்டை நாடு, வடநாடு இவைகளில் பாடல்பெற்ற தலங்கள் குறைவு என்றும், ஈழ நாட்டில் மூன்று தலம் உண்டென்றும், அதிலும் ஒரு தலம் இருக்குமிடம் சரியாக அறியமுடியவில்லையென்றும் கூறினர்கள். சோழ அரசர்கள் நமக்குச் செய்த அரிய சாதனைகள் கோவிலாகும்; இது வழிபாட்டிற்குரிய பொது ஸ்தலமாகும். கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் மழையில்லாமையினுல் நாம் அடைந்த துன்பங்கள் கணக்கில. ஆனுல் இவ்வாண்டில் சிறிது மழை பெய்தது. அதற்காக அந்த இறைவனுக்கு நாம் நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டாமா! மேலும் பொதுமக்களாகிய நீங்கள் நகரத்தவர்களைப்போல எப்பொழுதும் வேலைக்குச் செல்பவர்களல்ல. எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து வழிபாடு செய்தால் பிளவு மனப்பான்மை ஒழியும். நமக்குள் கூட்டுமனப்பான்மை வளரும். பெண்களும் இம்மாதிரியே செய்யலாம் என்று கூறித் திருவெம்பாவையின் முதற் பாட்டிற்கு விளக்கம் கூறினர்கள்.

பிறகு வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர், வித்துவான், திரு. V, S குருசாமி, வித்துவான், திரு. V திருஞான சம்பந்தம், வரகடை திரு. சம்பந்தம் பிள்ளை, ஸ்ரீ சுவாமி சிவானந்தா ஆகியோர்கள் திருவெம்பாவைப் பாடல்களின் பொருட் சிறப்பினையும், ஓதுதலின் பலனையும், ஆலய வழிபாட்டின் அவசியத்தையும் குறிப்பிட்டுப் பேசினர்கள். சிவபுராண பாராயணத்துடன் ஆலயவழிபாடு ஒவ்வொரு சந்நிதியிலும் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் திரு. பிள்ளையவர்கள் கூட்டத்தின் முடிவில் ஆதீனப் பிரசார கோஷ்டியினர்களின் விருப்பப்படி தலைவர் அவர்கள் 'வருகிற தை அமாவாசையன்று வாரவழிபாட்டுத் தொடக்கவிழா நடைபெறும்; அன்பர்கள் அனைவரும் தவருது கலந்துகொள்ள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். கடவுள் வாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது. இரவு உணவுக்குப்பின் பிரசாரவாகனத்தில் கோஷ்டியார் புறப்பட்டுத் தருமைக்கு வந்துசேர்ந்தார்கள்,

சீகாழி:

28—12—53 திங்கட்கிழமை முதல் மூன்று நாளும் **சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆலய மண்டபத்தில்** மாநாடு நடைபெற்றது. மகரதோரணங்களும், வாழைகளும், திரைச் சீலைகளும் கட்டி மண்டபம் அழகுறுத்தப்பட்டிருந்தன.

முதனாள் மாலை 5-மணிக்கு ஆலயவழிபாட்டிற்குப்பிறகு ரிடையர்டு டிப்டிகலெக்டர் திரு. M. கிருஷ்ணமுதலியார் B.A. அவர்கள் தலைமையில் விழா தொடங்கிற்று. வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "திருவாசகத்தேன்" என்பதுபற்றியும், அண்ணாமலைநகர் வித்துவான், திரு. G. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L. அவர்கள் "திருவெம்பாவை" என்பதுபற்றியும், திரு. K. அரங்காசாரியார் B.A.,B.T. அவர்கள் "திருப்பாவை" என்பதுபற்றியும் பிரசங்கம் செய்தார்கள்.

இரண்டாம்நாள் 29—12—53 செவ்வாய்க்கிழமை மாலை ஸ்பெஷல்தாசில்தார் திரு. S. T. கிருஷ்ணமாசாரியார் B.A. அவர்கள் தலைமைவகித்துச் சிறப்பித்தார்கள். சபாநாயக முதலியார் ஹைஸ்கூல் ஆசிரியர் திரு. K. சுப்பிரமணிஐயர் B.A. அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி, திருவாசகப்பெருமை" என்பதுபற்றியும், வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர் அவர்கள் "ஏழைபங்காளன்" என்பதுபற்றியும், வித்வான், திரு. V. S. குருசாமி அவர்கள் "திருவெம்பாவை" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

பெருநிலக்கிழார் திரு. C. இராமநாத முதலியாரவர்கள் "மக்கள் அனைவரும் விடியலில் எழுந்து திருவெப்பாவைப் பாராயணத்துடன் வீதிவலம்வருதல்வேண்டும்; பேச்சளவில் மட்டும் கேட்டுச் சிந்தித்தல் போதாது; நாளையே செயலில் இறங்கிப் பணிபுரியவேண்டும்; 'சிவ சிவ' என்றால் போதுமே! அது எவ்வளவு பயனைக்கொடுக்கும்! இப்படி நமது சமயம்

112

சிறப்பாக இருக்க, சிலர் விபூதி அணிய—ருத்திராக்ஷம் அணிய ஏன் தயங்குகிறுர்கள்? இந்த ஊரிலுள்ள அத்தனை மக்களும் கோயிலுக்கு வந்து வழிபடவேண்டும் என்பதற்காக அல்லவா நம் மன்னர்கள், எல்லாமக்களும் கூடியிருந்து வழிபடும்படி இவ்வளவுபெரிய கோயிலைக் கட்டியிருக்கிறுர்கள்" என்றெல் லாம் அருமையான கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். திரு. முதலியார் அவர்களின் அன்றைய பேச்சு ஊர்மக்கள் அனை வர்க்குமே ஒரு உற்சாகத்தை உண்டாக்கி விட்டது.

3-ம் நாள் 30—12—53 மாலை திரு. V. சுவேதாரண்யம் ஐயர் B. A. B. L. அவர்கள் தலைமையில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது தலைமையுரைக்குப் பிறகு அண்ணுமலைப் பல்கலைக்கழகவெளியீட்டுக் கண்காணிப்பாளர் திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை B. A. B L. அவர்கள் 'மணிவாசகரும் திருவெம்பாவையும்' என்னும் தலைப்பில் அருமையான ஒரு பிரசங்கம் நிகழ்த்தினுர்கள். அன்றைக்கும் திரு. C. இராமநாத முதலியார் அவர்கள் 'வழிபாடு' என்ற தலைப்பில் பேசிய பேச்சு அனைவர்க்கும் பெருவிருந்தாக இருந்தது. அடுத்து ஸ்ரீமத்சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவெம் பாவையிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய சாத்திர உண்மைகளை மிக அருமையாக எடுத்துக்காட்டி விளக்கிப் பேசினுர்கள். வித்துவான் திரு. C. சிங்காரவேலன் 'எங்கெழில் என்? ஞாயிறு' என்பது பற்றியும், வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தம் 'பழமையும் புதுமையும்' என்பது பற்றியும் பிரசங்கம் செய்தார்கள்.

ஒவ்வொருநாளும் தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவர்க்கும் வரவேற்பு உபசாரம் சொல்லி, இறுதியில் நன்றியுரையுங்கூறி மக்களை மகிழ்வித்தார்கள். தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியரும் மாணவிகளும் திருவெம்பாவைத் திருப்பாடல்களை இன்னிசையோடு பாராயணம் செய்தது அனைவர்க்கும் பக்தியை உண்டாக்கிமனத்தையும் கசிவித்தது.

ஆச்சாள்புரம்:

31—12—53 அன்று **ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜஸ்வாமி சந்நிதியில்** மாநாடு தொடங்கிற்று, மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சியாக வாரவழிபாட்டுத் தொடக்க விழாவும் நடைபெற்றது. ஆதீனப் பாடசாலை மாணவர்கள் திருவெம்பாவை ஓதினார்கள். கடவுள் வாழ்த்துப் பாடிய பிறகு தருமபுர ஆதீனப்புலவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் வார வழிபாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். மாநாட்டின் தலைவர் திரு. S. முருகேச **முதலியார்** B. A., B. L, அவர்கள் தலைமையுரையில், பல மதங்களைப்பற்றியும் ஆராய்ந்து அவற்றுள் சிவ மதத்தின் மேன்மையை விளக்கினார்கள். பிறகு சிதம்பரம் சிவஸ்ரீ நடராஜ தீக்ஷிதர். சிதம்பரம் பச்சையப்பன் ஹை ஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேது சுப்ரமண்ய பிள்ளை, திரு. முத்தையாப்பிள்ளை ஆகியோர்கள் அன்பின் அவசியத்தைக் குறித்து விரிவுரையாற்றினார்கள். பின்னர் வித்துவான், திரு, V. S. குருசாமி திருப்பாவை, திருவெம் பாவைகளின் கருத்து ஒற்றுமை குறித்தும், வித்துவான், திரு. C. சிங்காரவேலன் பக்திப் பாடல்களைப் பயின்று பயன் பெறவேண்டிய அவசியத்தைக் குறித்தும் சொற்பெருக்காற்றினார்கள். இறுதியாக, 'வேண்டுகோள்' என்ற தலைப்பில் திரு, ச. தண்டபாணி தேசிகரவர்கள் பேசுகையில், வாரந் தோறும் வழிபாடு செய்யவேண்டும்; திட்டமிட்டு வாழ வேண்டும்; திட்டமில்லாத வாழ்வு மட்டமானதே; ஆண்டவன் திருவருள் அனைவர்க்கும் பெருகுவது; அத்திருவருளும் அக முருகி வழிபடுவதாற் சித்திக்கிறது. ஆகவே சம்பந்த சுவாமிகளது திருமணம் நிகழ்ந்த இந்த ஆச்சாள்புரத்தில் திருவருள் வசமே திருவெம்பாவை மாநாடு கூட்டத் துணைசெய்தது; அத்திருவருளை வாரமாய் வழிபாடுசெய்து பெறுதல் நம் கடமை என்றெல்லாம் பேசிமுடித்தார்கள். பின்னர் கோயில் சூபரிண்டெண்ட் திரு வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களைத் தலைவராக அமைத்து, வார வழிபாட்டுக்குழு ஒன்று நிறுவப்

பெற்றது. ஆதீனப் பாடசாலை மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டபின் மாநாடு இனிது முடிந்தது. ஆதீன வெளியீடான திருவெம்பாவைப் புத்தகம் வந்திருந்த அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

தென்திருமுல்லைவாயில் :

1—1—54 வியாழக்கிழமை அன்று மாலை 6-மணிக்கு, **தென்திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி ஆலய மண்டபத்தில்** மாநாடு நடைபெற்றது. திருவாரூர் இராஜாங்கக்கட்டளை, கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமைதாங்கினார்கள். உள்ளூர்வாசிகளும், ஆதீன தேவாரபாடசாலை மாணவர்களும் திருவெம்பாவைத் திருப்பாவை பஜனை கோஷ்டியுடன் முக்கியமான வீதிகளில் மாலை 6-மணிக்கு வீதிவலம் வந்தனர். முக்கியமாக அவ்வூர் பரதவர்கள்வந்து கலந்துகொண்டனர். 500 மக்களுக்குமேல் வீதிவலம் வந்தகாட்சி கண்கொள்ளாக் காட்சியாய் அமைந்தது. வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "இங்கிருக்கின்ற மக்கள் பெரும்பாலும் விவாசாயிகளும், பரதவர்களும் ஆகக் காட்சி அளிக்கிறீர்கள். வருஷம் பூராவும் உழைக்கின்ற நீங்கள் வருமானத்தை வைத்துக்கொண்டு வாழ்கிற நிலையில் தெய்வ சிந்தனை யுடையவர்களாகவும் வாழவேண்டும். தெய்வசிந்தனையே இவ்வாண்டு நமக்கு நல்ல பலனை அளித்திருக்கிறது. எனவே மார்கழிமாதம் பூராவும் நாம் காலையில் மனம் அமைதியுற திருவெம்பாவையையும் திருப்பாவையையும் பாராயணம் செய்யவேண்டும், திட்டமில்லாத வாழ்வு மட்டமாகும். இன்று அரசாங்கத்திலும் திட்டத்துடன்தான் வேலை செய்கிறார்கள். நாமும் இந்த மார்கழிமாதம் பூராவும் இடுகின்ற திட்டம் வருஷம் பூராவும் பலனை அளிக்கிறது என்று கூறி, திருவெம்பாவை மாநாடு என்ற தலைப்பு பாவையை அருளிச்செய்த ஆண்டாளையும் குறிக்கும். எப்படி என்றால் எம் என்ற சொல் சைவத்திற்குச் சிறப் புடையது, மீதியிருக்கிற திரு என்பதும், பாவையென்பதும் இரண்டிற்கும் பொது. எனவே திருப்பாவையையும் இந்த

திருவெம்பாவை மாநாடு அடக்கிக்கொண்டிருக்கிறது என விளக்கம் தந்தார்கள். அடுத்து வித்துவான், திரு, சா. குருசாமி அவர்கள், கண்ணப்பரும் ஆண்டாளும் தெய்வ நினைப்பில் ஒத்தவர்கள். கண்ணப்பர் இறைவனுக்கு இறைச்சியைத் தான் தின்று நல்லதையே கொடுத்தார், ஆண்டாளும் அதேபோல் தான் மாலையை யணிந்து நல்ல மாலையாய் இருந்தபிறகுதான் இறைவனுக்குச் சூட்டினுள், அதனுல் அவளுக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் எனப் பெயர் வழங்கப்பட்டதெனக் கூறினுர்கள். வித்துவான், வை, திருஞானசம்பந்தன் முதலியோர் சொற்பொழிவாற்றினர் திருவெம்பாவையும் திருப்பாவையும் அச்சிட்ட புத்தகம் அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. இறைவாழ்த்துடன் இரவு 10½-மணிக்கு மகாநாடு முடிவுற்றது. பிரசாரகோஷ்டியார் பிரசார வாகனத்தில் ஆதீனத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

வைத்தீஸ்வரன்கோயில்:

வைத்தீஸ்வரன்கோயில் (வேளூர்) ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் (2; 3—1—54) ஆகிய இருநாளிலும் நடைபெற்றது. ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இந்த இரண்டுநாளும் தலைமைப்பேருரை வழங்கிச் சிறப்பித்தார்கள். தேவார வகுப்பு மாணவிகள் திருவெம்பாவை ஓதினர். ஷை கோயில் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த அனைவருக்கும் வரவேற்பளித்தார்கள். வித்துவான், திரு. V. S. குருசாமியவர்கள் 'அடியார் பெருமக்கள் அருளிச்செய்த அருட்பாக்கள் ஆன்மாக்கள் நல்வழி அடையவே; இக்காலத்து நூல்கள் காலை அரும்பிப் பகலில் போதாகி மாலை மடிவனவாயிருக்கின்றன; இவைகள் வெறும் வாசகம், திருவாசகமே திருவாசகம், இதற்கு வாச்சியம், தூசணி மருங்குல் நுண்தோகை இடத்தானுகிய அம்பலவாணனே; அவனைப்பற்றிப்பாடுவதால் நாம்பலனடைகிறோம்; இறைவனை வாழ்த்துதல் நாம் வாழ்வதற்காகவே' என்றெல்லாம் பேசி முடித்தார்கள். அடுத்து வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் 'நானுரைக்கும்

வார்த்தையெலாம் நாயகன் தன் வார்த்தை நம்புமினே; நமரங்காள்! நற்றருணமிதுவே என அடியார் பெருமக்கள் கூறினர்கள் என்றால் அவர்கள் அடைந்த பேரின்பம் அளவிடற்கரியதல்லவா? அதனாற்றான் அவர்கள் எண்ணு கின்றேன் எண்ணமெல்லாம் எனக்கே தருகின்றான், உண்ணு கின்றேன் உண்ண உண்ண ஊட்டுகின்றான், எனவே நீங்களும் வாருங்கள். அவன் புகழைப் பேசுங்கள்; எண்ணலாம், உண்ணலாம்; போவோம் காலம்வந்தது பொய்விட்டு உடை யான்கழல் புகவே' என அருளிய மணிவாசகர் சொற்படி பொய்யைநீக்கிப் பொன்னம்பலவாணனின் திருவடி அடைய; அதனால் நாம் வாழ திருவெம்பாவையை அனைவரும் ஓத வேண்டும்' எனக் கூறினர்கள்.

பிறகு தேசியத் தொண்டர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செய்துவரும் பணிகள் பலவற்றிலும், இம்மார்கழிமாதம் பூராவும் பல விடங்களில் திருவெம்பாவை மாநாடு ஏற்படுத்தியது நம் பாக்கியமே; இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பொதுமக்கள் பயன் படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் கூறி, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களைப் பாராட்டிப் பேசினர்கள். தேவஸ்தான அனதை ஆஸ்ரம கண்காணிப்பாளர் திருமதி. கண்ணுமணி அம்மாள், திரு. சொக்கலிங்க ஓதுவார், திரு. திருநாவுக்கரசு முதலியோர்கள் திருவெம்பாவை திருப்பாவைகளைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். அன்பர்களுக்குத் திருப்பாவை, திருவெம்பாவை, இன்பம், திருநீறு முதலிய ஆதீன வெளி யீடுகள் வழங்கப்பட்டன. தேவஸ்தான ஆசிரியரும், மாணவர் களும் திருவெம்பாவையைப் பாராயணம் செய்தனர். இறை வாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது.

தலைஞாயிறு :

தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீஸ்வரர் கோயில் பிரசாரசபா மண்டபத்தில் 4—1—54 அன்று ஆதீனப் பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமைதாங்க மாநாடு ஆரம்ப

மாயிற்று. திரு. இராமையாப்பிள்ளை அவர்கள் மாநாட்டிற்கு வரவேற்பு கூறினார்கள். கர்ணம் திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் திறப்புரைகூறி ஆதீன கர்த்தர் அவர்கள் செய்துவரும் தொண்டைப்பற்றி விளக்கிப் பேசினார்கள்

வித்துவான் திரு. V. S. குருசாமி அவர்கள் மணிவாசகர் யான்பெற்ற இன்பத்தை வையகம் பெறவேண்டும்; தலைவியாக யான் இருந்து தலைவனாகிய இறைவனிடம் பெற்ற பேறு பிறவாப்பேறு; நீங்களும் போற்றித் துதித்து வறுமைநீங்கி வாழுங்கள் என்று சொல்கிறமுறையில் மழையை வாழ்த்துகிறார். அம்மழையும் உமையவள் அடியார்க்குச் சுரக்கும் இன்னருள்போல் பெய்கின்றதென்பதை 'முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்' என வாழ்த்துகிறார். மழையை வாழ்த்தாத கவிஞனோ, புலவனோ இல்லை. கம்பர், சேக்கிழார், இளங்கோ, கச்சியப்பர் முதலியவர்கள் மழையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அந்தமுறையில் நாட்டில் மழை குறைந்த காலத்து, பெண்களைக்கொண்டு நோன்பு நோற்கச்சொல்லி. இறைவனைப் பாடும் பணியில் திருவெம்பாவை உள்ளது. மணிவாசகர், காணும் பொருள்களையெல்லாம் இறைவனது காட்சியாகக் கண்டார். குளத்தில் குளிக்கச்சென்ற அவர், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பங்கயப் பூம்புனல் என இறைவனும் இறைவியுமாகக் காட்சி வழங்குவதைக் கண்டார் எனக் கூறி முடித்தார்கள்.

வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தன் அவர்கள் 'ஊனையும் உயிரையும் வளர்ப்பன ஆலயங்கள் மன்னர்கள் மக்கள் தங்கள் வாழ்வைச் சோற்றுச் செருக்கிலேயே கழித்துவிடக்கூடாது என்பதற்காகச் சோழநாட்டில் அடிக்கொரு தலம் கட்டினார்கள். அதில் அறிவு வளர்க்க கலைப் பொக்கிஷங்களை வைத்தார்கள். சிற்பம், ஓவியம், முதலியன ஒரு நாட்டின் பொக்கிஷம், இவைகளால் தான் தமிழ்நாட்டின் பெருமை குறையாதிருக்கிறது. கோயில்களென்றால் இன்று

118

சிலர் சொல்கிறமுறையில் நினைக்கக்கூடாது. மேலைநாட்டார் நம் நாடுநோக்கி வந்தால் ஒருமணி நேரத்தில் தமிழரின் பண்பாட்டை அறிந்துகொள்ள முடியும். சிதம்பரம், திருவாரூர், ஸ்ரீரங்கம் முதலிய கோவில்களைப் பார்த்த மாத்திரத்தில் அறிந்துகொள்கிறார்கள். நாம் அங்கு சென்றாலோ நூல்கள் வாயிலாகப் படித்தறியவேண்டும். இரண்டிலும் எது பெருமையுடையது? எனவே கோயில்களை நாம் சமயப் பொக்கிஷ சாலைகளாகக்கொண்டு பயன்படுத்தவேண்டும்' என்றார்.

ஆதீனக் கல்லூரிப் புலவர் வகுப்பு மாணவர் திரு. K. வேலாயுதம் அறிவின் பயனைப்பற்றி அழகாகப் பேசி முடித்தார். திரு. S. T. திருஞானசம்பந்தம், திரு. P. சம்பந்தம் முதலியவர்கள் பேசியபின் இறைவாழ்த்தோடு கூட்டம் முடிந்தது. தேவார பாடசாலை மாணவர்களால் திருவெம்பாவை ஓதப்பட்டது. அன்பர்களுக்கு இலவசமாக திருவெம்பாவை, திருப்பாவை வெளியீடுகள் வழங்கப்பட்டன. பெருமழைக்கிடையில் மண்டபத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்து கேட்டு இன்புற்றனர்.

மாயூரம் வள்ளலார் கோயில்:

6—1—54 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மாயூரம் **வள்ளலார் கோயில் ஸ்ரீவதான்யேஸ்வரர் தேவஸ்தானம்** குருமூர்த்தி சந்நிதியில் மாநாடு நடைபெற்றது. பெரியோர்களைவிட சிறுவர்களும் சிறுமிகளும் பெருந்திரளாக குழுமியிருந்தனர், அவர்கள் மாநாட்டின் தொடக்கத்தில் இன்னிசைக் கீதங்களைப்பாடி அனைவரையும் இன்புறுத்தினர். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்கி மாநாட்டின் நோக்கத்தினை எடுத்துரைத்துத் தலைமையுரை நிகழ்த்தினார்கள். அடுத்து வித்துவான், V. S. குருசாமி, வித்துவான், V. திருஞானசம்பந்தம், வித்துவான், C. சிங்காரவேலன் ஆகியோர்கள் குழந்தைகளுக்கு ஏற்றவகையில் எளிய கதைகளைச் சொல்லி அதன் வாயிலாக உயர்ந்த கருத்துக்களை

அறிவித்தார்கள். திருப்பாவை, திருவெம்பாவை பாடி மகிழ் வித்த குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தலைவர் முடிவுரைகூறக் கடவுள் வாழ்த்துடன் மாநாடு இனிது முடிந்தது. பிறகு வழிபாடும் நடைபெற்றது.

குத்தாலம்:

7—1—54 மாலை 7-மணிக்கு, **குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீஸ்வர ஸ்வாமி கோயில் மண்டபத்தில்** மாநாடு தொடங்கியது. ஏராளமான பெருமக்கள் குழுமியிருந்தனர். வித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், குத்தாலம் போர்டு ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. **A. நாகரத்தினம் பிள்ளை** அவர்கட்கு மாலைசூட்டி வரவேற்றுப் பேசுகையில், சைவத்துக்கும் வைணவத்துக்குமுள்ள முப்பொருள் இறை நிலை ஒற்றுமைகளை விளக்கிக் கூறினார்கள். பிறகு தலைவர் தமது முன்னுரையில், மத வேறுபாடுகளை விளக்கிச் சைவ வைணவங்களின் இணையிலாச் சிறப்பை எடுத்து விளக்கி னார்கள். அடுத்தபடியாக போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர்களில் ஒருவரான திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், திருவெம் பாவையின் உயரிய கருத்துக்களையெல்லாம் இசையோடு எடுத்து ஓதி விளக்கிக் கூறினார்கள். வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் திருவெம்பாவையில் அமைந்த சித்தாந்த சைவ நுணுக்கங்களைத் தெளிவுறப் பேசி முடித்தார்கள். பின்னர் தமிழாசிரியர் வித்துவான், திரு. பிச்சையா சோழகர் அவர்கள் திருவாசகத் தேன்பற்றிப் பேசுகையில், திருவாசகமே கல் மனத்தையும் கரைக்கும் தெய்வீக மருந்து என்றுகூறி, இரண்டொரு தேன் துளிகளைக் கேட்போர் செவியிற் சுவைபெறப் பாய்ச்சினார்கள். அடுத்துப் பேசிய ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. V, S. குருசாமி அவர்கள், திருப்பாவை—திருவெம்பாவை கருத்து ஒற்றுமையை நன்கு விளக்கிப் பேசினார்கள். தலைவர் தம்முடிவுரையில், தமிழ்நாட்டில் திருவெம்பாவை நன்றாக மாணவர்களால் பயிலப்பட வேண்டுமென்றும், அப்போது தான் தமிழ்நாடு தனிச்சிறப்போடு மிளிருமென்றும் கூறி

120

இப்பணியைக் காலமறிந்து செய்யும் தருமையாதீனத்துக்குத் தமிழ் மக்கள் கடப்பாடுடையர் என்று கூறிமுடித்தார்கள். இறுதியாக வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'ஆஸ்திகமே ஆக்கப்பாதை; அதுவே மக்களை வாழவைக்கும்; மகாசன்னிதானமவர்களும், ஆச்சார்ய ஸ்வாமிகளும் காலம் மறிந்து அந்த ஆக்கப்பாதையில் 'சேரவாரும் செகத்தீரே' என்று அறைகூவி யருளுகின்ற ஒரு பெரும் வாய்ப்பாகவே இம்மாநாடுகள் அமைந்தன'—என்று பேசி யாவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். ஆதீனக் கல்லூரிப் புலவர் வகுப்பு மாணவன் திரு. S. தியாகராஜன் பாடிய இறை வாழ்த்தோடு மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

(தொடரும்)

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்

6-வது ஆண்டு விழா

கடந்த ஆறுஆண்டுகளாகவே குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர், வாரந்தோறும் ஒருங்குகூடிச் சிவாலய வழிபாடியற்றி ஆங்காங்கும் மக்களுக்கு ஆஸ்திக உணர்ச்சியை உண்டுபண்ணி வருகின்றனர் என்பதை அனைவரும் அறிவர். அத்தகைய திருக்கூட்டத்தின் 6-வது ஆண்டுவிழா அங்கர் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் மார்கழித்திங்கள் 17, 18, 19 ஆகிய மூன்று நாளும் மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்து இளவரசு ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கூட்ட விழாவிற்கு ஆசியுரை அனுப்பிச் சிறப்பித்திருந்தார்கள். ஆசியுரை வருமாறு:—

"சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி யெம்மானது திருவருள் உலகை இயக்குகிறது; அந்தத் திருவருள் இயக்கந்தான் மண்ணையும், விண்ணையும்,

கடலையும், காற்றையும், எல்லாவற்றையும் இயங்கச்செய்கிறது. இதை உணர்ந்தவர்கள்—உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர்கள் நமது சமயாச்சாரியப் பெருந்தகைகள். அவர்களது வாக்கு தூய்மையின் விளைவு. அந்த வாக்கு அனைவருள்ளத்தையும் வளம்படுத்துவது. அத்தகைய ஆன்றோர் வாக்கைச் சிந்தித்துச் செயலாற்றுதல் சமுதாயத்தின் சீரிய கடமை.

இந்தக் கடமையை உணர்ந்து பணியாற்றும் திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், குவலயத்துக்கோர் வழிகாட்டி போல. இத்திருக்கூட்டம் ஆற்றும் செயற்பணிகள் மிக அழகானவை; அவசியமானவை. தமிழ் நாட்டுத் தலங்கள்தோறும் சென்று கூட்டுப்பிரார்த்தனை செய்தல் குறிப்பிடத்தக்கது. சமயாச்சாரியர்கள் சேர்ந்து பிரார்த்தனை செய்தே சிவப்பயிரை வளர்த்தார்கள். இது நமக்கு வரலாறு காட்டும் பாடம். இந்தத் திருக்கூட்டம் தானும் வளர்ந்து. நாட்டையும் வளர்த்து வருவது கண்டு மகிழ்கிறோம். இதன் ஆறுவதாண்டு நிறைவுவிழா எல்லா வகையானும் சிறப்புற நிகழ்வதாக. விழாவில் பங்கு கொள்ளும் அன்பர்களுக்கு எல்ல நலங்களும் பெருகுவதாக. எல்லாம் வல்ல ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருள் அனைவர்க்கும் சித்திப்பதாக.

விழாவில் நாயன்மார்களுக்கு அபிஷேக ஆராதனை, பாராயணம் எல்லாம் நடந்தன, திருமுறை ஓதப்பெற்றது. திரு. G. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L., திரு. K. M, வேங்கடராமையா M, A. B. O. L., பாலகவி திரு, வே. இராமநாதன் செட்டியார். சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரியார், புலவர் திரு. சு. வடிவேலன், புரிசை திரு. ச. முருகேச முதலியார் திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., ஆகியோர்களும்' தருமபுர ஆதீனக்கல்லூரித் துணைத்தலைவர் திரு. ச. தண்டபாணி தேசிகர், வித்துவான் திரு C. சிங்காரவேலன் ஆகியோர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள், இந்த மாநாடு எல்லா வகைகளிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மதிப்புரைகள்

திருவெம்பாவை:

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆணை வழி. ஷை மடத்து இளவரசு வித்துவான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சைவசமய நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகிறார்கள் என்பது உலகறிந்ததொன்று. அந்த வெளியீட்டு வகையில் இப்பொழுது மார்கழித் திருவாதிரை நன்னாள் இலவச வெளியீடாக இது வெளிவந்துள்ளது. யாவரும் படித்துணருமாறு சீர்பிரித்து குறிப்புரையுடன் மிக அழகாக அச்சிடப்பெற்றுள்ளது. திருவெம்பாவையைப்பற்றிய விளக்கங் களும், தத்துவக்கருத்துக்களும், மணிவாசகரது சுருக்கவரலாறும் தரப்பெற்றுள்ளன. 'வார்கழல் - நீண்டதிருவடி; திருவடி சிவ சத்தியைக் குறிக்கும் (பா. 1) கூசுமலர்ப்பாதம் என்பது அருமை நோக்கியும், தந்தருள வந்தருளும் என்பது எளிமைநோக்கியும் நின்றது. பாதம் சிவசத்தியுமாம் (பா. 2) பத்துடையீர் - அடியார் உடலிலக்கணம் பத்தும் உடையீர் எனினுமாம் (பா. 3) வாய் திறப்பாய் - வாய் வாயிலுமாம். ஏழைபங்காளன் - உமையொரு பாகன் (பா. 8) உளன் - உள்ளத்திலிருப்பவன் (பா. 10) அப்பொருள் ஆமாறு பாடி - இறைவன் அகரப்பொரு ளாய் இருப்பதைப் பாடி. (பா. 14)' என்பனபோன்ற குறிப் புரைப் பகுதிகள் பல அறிவுவிருந்தாக இருந்து ஆனந்தமளிக் கின்றன. ஆங்காங்கு பெரியபுராணம் திருமந்திரம் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்களிலிருந்து மேற்கோள்களும் காட்டப் பட்டுள்ளன. இத்தகைய சிறந்த அரிய நூலை அச்சிட்டு வழங்கிய தோடு, திருவெம்பாவை பாடிய திருத்தல ஆலயத்து அம்மையார் கோயிலில் சலவைக்கற்களில் இருபது பாடல்களையும்பொறித்து அமைத்திருக்கிறார்கள். இப்படி நிலைத்த பணிபலபுரியும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களைப் பாராட்டி, குமரகுருபரசுவாமிகள் புகழ் குவலயத்தில் ஓங்குக என்று வாழ்த்துவது மக்கள் கடமையாகும்.

திருவெம்பாவை — திருப்பாவை:

மக்கள் தேவையறிந்து செய்யும் நூல் வெளியீட்டுப் பணி மிகமிகச் சிறப்புடையதே. அந்த வகையில் மார்கழிமாதத்தில் ஓதவேண்டிய அருள் நூல்களை வெளியிடுவது எவ்வளவு சிறப் புடைத்து. அம்பாசமுத்திரம் திருவெம்பாவை திருப்பாவை

முதலாவது மாநாட்டு வெளியீடு இது. இந்த இருநூல்களோடு திருப்பள்ளியெழுச்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கருத்துரை பொழிப்புரைகளும் எழுதப்பெற்றுள்ளன. வேண்டுவோர் 'செயலாளர், திருவெம்பாவை திருப்பாவை குழு, மேலப் பாளையம் தெற்கு ரதவீதி, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி ஜில்லா' என்ற விலாசத்திற்கு எழுதி இலவசமாகப் பெறலாம்.

சைவர் மாநாடு வரவேற்புரை:

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 48-வது ஆண்டு சைவர் மாநாடு 25—12—53ல் நிகழ்ந்தபோது சமாஜத்தலைவர் இராவ் சாகிப், நல். முருகேச முதலியார் B. A. அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை வரப்பெற்றோம். ஷை ஆண்டினுடைய ஆண்டு அறிக்கையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சைவசமயத்தின் சிறப் பியல்புகள் நன்கு விளக்கப்பெற்றிருப்பதோடு, சமய வளர்ச் சிக்கு ஆகவேண்டிய பணிகளாக 26 குறிப்பிடப்பெற்றுள்ளன. அதனை ஒவ்வொருவரும் படித்து அறிந்து செய்யவேண்டியது அவரவர்கள் கடமையாகும். வேண்டுவோர் சமாஜத்திற்கு எழுதிப்பெறுவார்களாக.

1. **அம்மையப்பர் மலர் வணக்கம்**
2. **தெய்வத் தமிழ் மலர்**

புதுவயல் திருவருட் கழகத்தினர் செய்துவரும் பலவகைப் பணிகளுள் நூல்வெளியீடுகளும் ஒன்று. அந்த வகையில் கூட்டுப்பிரார்த்தனைத் திரட்டு, விநாயகர் முருகன் மலர் வணக்கம் என்ற இரண்டும் முன்னர் வெளிவந்துள்ளன என்பதைச் சென்ற ஞானசம்பந்தம் இதழாலும் நேயர்கள் அறிந்திருப்பர். இப்பொழுது அம்மை அப்பன் மலர் வணக்கம், தெய்வத்தமிழ் மலர் என்ற இரு நூல்களும் ஷை கழகத்தின் சார்பில் வெளியிடப் பெற்றுள்ளன. மலர் வணக்கத்தில் அம்மைக்கும் அப்பனுக்கும் தமிழில் அருச்சனை செய்து வழிபடு வதற்கேற்ப தனித்தனி நூற்றெட்டு திருநாமங்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. திருநாமங்கள் திருமுறைகளிலிருந்து தொகுக் கப்பெற்றிருப்பது மிகமிகப் பாராட்டத்தகுந்தது. அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க அருச்சனைபாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார் என்பது சேக்கிழார் வாக்கு. தெய்வத் தமிழ் மலரில்

திருவையாறு, திருக்கோடிகா, திருமழபாடி, திருவதிகை என்று நான்கு திருத்தலங்களின் திருத்தாண்டகப் பதிகங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. தமிழிலும் எல்லா மூர்த்திகளுக்கும் அருச்சனைசெய்து வழிபாடாற்றலாம் என்ற ஒருநெறியை மக்கள் அறிந்து ஒழுகி உய்யும் பொருட்டு இத்தகைய வெளியீடுகளை உலகிற்கு உபகரித்த ஷை கழகச் செயலாளர் திரு. அரு. உ. வீர. அழகப்ப செட்டியார் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையது.

இந்த இரண்டுவெளியீடுகளும் வேண்டுவோர் மூன்றணாவும், நான்கு வெளியீடும் ஒருசேரப் பெறவேண்டுவோர் எட்டணாவும் தபால் தலை அனுப்பிக்கொள்வார்களாக. விலாசம்: 'செயலாளர், திருவருட்கழகம், புதுவயல், P. O. இராமநாதபுரம் ஜில்லா'.

ஆத்மாஞ்சலி.

உளங்கனிவிக்கும் பாடல்களால் உலகமக்கள் உள்ளத்தைக் கவர்ந்த இசைப்பாவலர் என். எஸ். சிதம்பரம் அவர்கள், இசைக்கனி, வள்ளல் கீதம் முதலிய பல நூல்கள் இசைப் பாவடிவில் முன்பு வெளிவந்துள்ளன என்பது நேயர்கள் அறிந்ததே. இப்பொழுது அன்பர்கள் செவிக்கு ஆத்மாஞ்சலி என்ற விருந்தையும் அளித்துள்ளார். பாடல்கள் மிகச் செம்பாகமான எளிய நடையில் அமைந்து படிப்போருக்குச் சுவையூட்டுகின்றன. 'சக்கரம் மாறிச் சுழன்றிடுமோர் ... வாழ்வு' என்று படிக்கும்போது யார்தான் உலகவாழ்வில் வெறுப்பின்றி இருக்க முடியும்? 'வாழ்வெனும் ஓடத்தில் ஏறிவிட்டேன் — வலி சாய்ந்து கவிழ்ந்ததையா' என்கிறபோது உலக பாசம் நம்மை விட்டுத் தாமே ஓடிவிடும். 'நன்றெல்லாம் தீதெல்லாம் நாயக உன் செயலென்றே' 'தனக்குவமை யில்லாத தற்பரனே' என்பனபோன்ற பல பகுதிகள் தொடுக்கும் கடவுட் பழம்பாடல்களிடத்தில் நம்மனத்தைக் கொண்டு சேர்க்கின்றன. கனவில் தெய்வம் பெண்ணாகவந்தாலும், தெய்வசிந்தனையை மறந்து புலம்புகின்ற மக்களிடையிலே, கனவில்கண்ட பூங்கொடியைக் கலைமகளென்றே கருதி, அந்த ஆனந்த தரிசனத்தில் ஈடுபட்டுப் பலவாறு தோத்திரிக்கின்ற இசைப்பாவலரது உள்ள நிலை பாராட்டத்தகுந்ததல்லவா? இத்தகைய மனச்சோலையில் எழுந்த ஆத்மாஞ்சலியிலுள்ள வாடாமலர்கள் ஆத்மசாந்தத் தேனைச்

சொரிந்து அன்பர்கள் உள்ளத்தைப் பண்படுத்துவது உறுதி. கிரௌன் சைஸ் இருபத்திரண்டுபக்கங்கள். பல அறிஞர்களுடைய பாராட்டுக்குரிய இந்நூலின் விலை அணு 6. கிடைக்குமிடம்;— 'வள்ளல் நிலையம், ஏகிரிமங்கலம், சிராத்தோப்பு, திருச்சி'

1. உலகப் பொதுநூல் சிறப்புநூல் தொகுதி.

2. முருகன் துதிமாலை.

சென்றடையாத திருவுடையானாகிய செல்வன் கழலை அனைவரும் ஏத்தச்செய்தலே, செல்வம் பெற்ற மக்கள் செய்ய வேண்டிய தொண்டு. இத்தகைய திருத்தொண்டில், திருவும் தெள்ளிய அறிவும் ஒருங்குபெற்றுத் திகழ்பவர்கள். பூவை. திரு. வெ. வேலாயுதச் செட்டியார் அவர்கள். சிவப்பணியில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை இந்நூல்களின் பதிப்புரை நன்கு விளக்குகின்றது. முதல்நூலில் திருவாசகம்—சிவபுராணம், திருவெம்பாவை, திருக்குறள் - அறத்துப்பால் இவை மூன்றும் தரப்பட்டுள்ளன. முருகன் துதிமாலை என்ற நூலில் கடம்பன் கவசம், அகத்திய பஞ்சகம், நாமசொற்பதிகம் என்ற மூன்றும் சேர்க்கப்பெற்றுள்ளன. இத்தகைய சிறந்தபணியாற்றும் திரு. செட்டியார் அவர்கள் ஸ்ரீமடம் தர்மத்தொண்டு சபை சொற்பொழிவாளராகவும் இருந்து பணியாற்றி வருகிறார் என்பது பாராட்டும் சிறப்புடையது. இந்த நூல் இரண்டினையும் வேண்டுவோர் நூலாசிரியருக்கு எழுதிப் பெறுவார்களாக. விலாசம் :- சிவஞானபண்டிதன் ஸ்டோர், ஜனரல் மர்ச்செண்ட்' அறந்தாங்கி'

இராமகிருஷ்ணர் மாணவர் இல்லம் ஆண்டு அறிக்கை.

மொழியறிவு மட்டும் பெறுவது பயன் தாராது; ஒழுக்கத்தோடு சமய அறிவும் மாணவர்களுக்கு அளிக்கப்பெறவேண்டும் என்ற பெருநோக்கோடு தொடங்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றிவருகின்ற நிலையங்களுள் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லமும் ஒன்று. அதனுடைய அறிக்கை வரப்பெற்றோம். அதில் 1953-ம் ஆண்டுப் பணிகளைப்பற்றிய விபரங்கள், தோற்ற வளர்ச்சிமுறை, பரிபாலனமுறை, வரவு செலவு விபரம், நன்கொடை கொடுத்த பெருமக்கள் விபரம் எல்லாம் தரப்பட்டுள்ளன.

தருமபுர ஆதீனப் பிரசாரம்

[தருமபுர ஆதீனச் சமயத் தொண்டர் திரு. மருள்நீக்கியார் அவர்களைக்கொண்டு இந்த மார்கழிமாதத்தில் தஞ்சைஜில்லா கிராமங்களில் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நிகழ்த்த வும், ஆங்காங்கும் பஜனை ஊர்வலம் நிகழ்த்தவும் ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பெற்றிருந்தது. அந்தத் திட்டத்தின்படி கீழ்க்காணுமாறு பிரசார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆங்காங்கும் அன்பர்கள் ஆர்வத்தோடு பிரசாரத்தில் கலந்து கொண்டுபஜனைசெய்கிறார்கள். அன்பர்கட்குத் திருவெம்பாவை வெளியீடும் வழங்கப்பெறுகிறது.]

16—12—53 **கரம்பத்தூர்** பாரதிசேவா சங்கத்தில். தலைவர், தருமபுர ஆதீன சமயப்பிரசாரகர், திரு. மருள்நீக்கி யார். பாபநாசம் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர், திரு. அரங்கநாத அய்யங்கார் 'குக பரத சமாகமம்', சமஸ்கிருத ஆசிரியர், திரு. S. சாமிநாத சாஸ்திரிகள் 'குசேல உபாக்யா னம்' ஹிந்தி ஆசிரியர், திரு T. V. நாகராஜ சாஸ்திரிகள் 'ஸ்திரீதர்மம்', கீழவிடையல் பதஞ்சலி யோகாசன நிலைய ஆசிரியர், திரு. ராமபத்ரன் 'யோகாசனமும் யோகசக்தியும்', யோகாசன மாணவர்களுக்குத் தருமபுர ஆதீன வெளியீடுகள் பரிசளிக்கப்பட்டது பாரதிசேவா சங்கச் செயலாளர், திரு. B. S. சீனிவாச அய்யங்கார் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

17—12—53 **திருக்கருகாவூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ** சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த நூல்நிலையத்தில். திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவை' திரு. மருள்நீக்கியார் 'திரு வெம்பாவை.

18—12—53 **இடையிருப்பில்.** தலைவர் ஷியூர் கர்ணம் திரு. T. K. வெங்கட்ராமையர் அவர்கள், திரு. B. S. சீனி வாச அய்யங்கார் 'திருப்பாவை' திரு. மருள்நீக்கியார் 'திருவெம்பாவை'.

19—12—53 **இரும்புதலை** சிவாலயத்தில். தலைவர், ஷையூர் திரு. S. நடேச குருக்கள். திரு மருள்நீக்கியார் 'திரு வெம்பாவை', திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவை'

25—12—53 **மிலட்டூர்** சிவாலயத்தில். தலைவர் திரு. N வரதய்யர். திரு. மருள்நீக்கியார் 'ஒருநம்பி அப்பூதி' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவை'.

26—12—53 **தஞ்சை** பாஸ்டர் ஸ்கூலில். தலைவர் ஷை ஸ்கூல் உதவி ஹெட்மாஸ்டர் திரு. சீனிவாச அய்யங்கார். திரு மருள்நீக்கியார் 'மாணிக்கவாசகர்'.

27—12—53 **சாயாவனம்** தேவஸ்தானம் இயற்பகை நாயனார் உற்சவத்தில். தலைவர் கீழப்பெரும்பள்ளம் திரு. சம்பந்தம் பிள்ளை. திரு. மருள்நீக்கியார் 'திருநாவுக்கரசர்' இரவு 10 மணிக்கு, இயற்பகைநாயனார் புராணப் பிரசங்கம் நிகழ்ந்தது.

28—12—53 ஷை கோயிலில் திரு. மருள்நீக்கியார் 'திரு வெம்பாவை கருத்துரையும், சாயவனத்தலப்பதிகமும்'.

29—12—53 **கோவிந்தக்குடி** சிவாலயத்தில். தலைவர் மாஜி முனிசிபல் கவுன்சிலர் திரு. புருஷோத்தம சாஸ்திரிகள். திரு. மருள்நீக்கியார் 'ஆண்டாளும் பாவையும்' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'மணிவாசகரும் திருவெம்பாவையும்'.

30—12—53 **ஏர்வாடி** விநாயகர் கோயிலில். தலைவர் பாபநாசம் தாலுக்கா டிஸ்டிக்போர்டு மெம்பர் திரு. T. V. சேஷு அய்யர். திரு. மருள்நீக்கியார் 'நமது சமயம்' திரு. S. சாமிநாத தேசிகர் 'திருவெம்பாவை' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவையின் கருத்துரை'.

31—12—53 **வெண்ணப்புத்தூர்** ஸ்ரீ திருநாவுக்கரசர் மடாலயத்தின் முன்பு. தலைவர் பள்ளியூர் திரு. ராமையா மழவராயர். திரு. மருள்நீக்கியார் 'திருவெம்பாவை' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவை'.

128

1—1—54 **நெடுஞ்சேரி** விநாயகர் கோயில் முன்பு. தலைவர் எடையிருப்பு வட்டம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. S. கிருஷ்ணமூர்த்தி நாயக்கர். ஷையூர் கர்ணம் திரு. T. V. வெங்கட்ராமையர் 'கடவுள் பக்தி' திரு. மருள் நீக்கியார் 'திருவெம்பாவை கருத்துரை' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'திருப்பாவை'

2—1—54 **காம்பத்தூர்** சேரியில். திரு மருள்நீக்கியார் 'கடவுள்பக்தி' திரு. B. S. சீனிவாச அய்யங்கார் 'கிராமசேவை' சேரி மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப் பட்டன. எல்லோரையும் திருநீறு அணியச்செய்து பஜனை நிகழ்த்தப்பட்டது.

3—1—54 **தஞ்சை** சிறைப்பள்ளியில் மாலை 3 மணிக்கு ஷை ஸ்கூல் மாணவர்களால் சிவபுராண பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. திரு. மருள்நீக்கியார் 'மனிதத் தன்மை' உதவித் தலைமை ஆசிரியர் திரு. சீனிவாச ஐயங்கார் நன்றி கூறினார்கள். 4-30 மணிக்குத் தஞ்சை சப்ஜெயிலில் திரு. மருள்நீக்கியார் 'கடவுள் பக்தி'.

(வரும்)

ஞானசம்பந்தம் வாழ்த்து.

கண்மூன் றுடையான் கவிதை கனிந்துருக
மண்ணோர் மனத்தை மலர்விக்கும்—விண்ணொளிபோல்
மாதம் உதிக்கு மலர்ஞான சம்பந்தம்
காதலாய் வாழ்க கனிந்து.

வித்துவான். ச சேதுசுப்பிரமணிய பிள்ளை,
தமிழாசிரியர், சிதம்பரம்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

27—12—53 முதல் 5—1—54 வரை நிகழ்ந்த

திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு

சென்னையில் இந்தப் பிரசார நிலையம் 28—9—53 சோம வார சுபநாளில் தொடங்கப்பெற்றதுமுதல் கலைமகள் விழா, கந்தசஷ்டி விழா இப்படி மாதந்தோறும் மக்களுக்குப் பெரு விருந்தளித்து வருகிறதல்லவா? அந்தமுறையிலே இந்த மார்கழிமாத விழாவாகிய திருவெம்பாவை, திருப்பாவை விழாவும் 27—12—53 முதல் பத்துநாட்கள் பெரிய மாநாடாக நடைபெற்றது. நீதிபதிகளும் அமைச்சர்களும் தலைமைதாங்கியும், அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றியும், இசைவாணர்களும் - பாகவதர்களும் இசை விருந்தளித்தும் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தியும், பணியாற்றிச்சிறப்பித்தார்கள், கனம். **ஸ்ரீ இராஜாஜி அவர்களும்** தொடக்கவிழாவன்று மாநாட்டிற்கு விஜயம் செய்து 'என் வீடு இந்நிலையத்திற்கு அருகில் இருக்கிறது. ஆகவே யான் வந்து மாநாட்டில் இன்று கலந்துகொள்ளுவதற்கு வசதியாக இருந்தது. இப்படிக் கலந்துகொள்ளாவிட்டால் அது பெரும் பாவம் என்று எனக்குத் தோன்றியது. நல்ல விஷயங்களைப் பேசுவார்கள் கேட்கலாம் என்று வந்தேன்; வந்த என்னைப் பேசவைத்து விட்டார்கள்' என்றெல்லாம் குறிப்பிட்டு, பக்திப்பாடல்களைப் பாராயணம் செய்யவேண்டியதின் அவசியத்தைப்பற்றி அழகாகப் பேசியது மிகச்சிறப்பாக இருந்தது.

27—12—53 மாலை 6-மணிக்கு சமயப் பிரசார நிலையத்தில் திருமுறை வகுப்பு மாணவிகள் கடவுள் வணக்கப் பாடலுடன் விழாத் தொடங்கியது. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவருக்கும் வரவேற்பளித்தார்கள். அந்தநேரத்தில் எதிர்பாராத முறையில் விஜயம்செய்த சென்னை மாகாண முதலமைச்சர் கனம் **ஸ்ரீ இராஜாஜி அவர்களை**

வரவேற்று, விழாவினை விளக்கம் செய்தார்கள். சென்னை உயர்மன்ற நீதிபதி ஸ்ரீ A. S. P. அய்யர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி, மத ஒற்றுமையின் அவசியத்தையும், திருவெம்பாவை—திருப்பாவைகளால் ஏற்படும் நன்மைகளையும், ஒற்றுமை உணர்ச்சியை மக்களிடையே வளர்ப்பது கடவுள் நம்பிக்கையே என்பதையும், கடவுள் நம்பிக்கை நாட்டில் வளம் பெறவேண்டுமானால் ஆதீனம் நடத்துவதுபோன்ற மாநாடுகள் மிகவும் இன்றியமையாதன என்பதையும் எடுத்துரைத்தார்கள்.

மாநாட்டைத் தொடங்கிவைத்த மினர்வா கல்லூரித் தலைமையாசிரியர் ஸ்ரீ A. N. பரசுராம் அவர்கள் தமது ஆய்வுரையில் 'மாணிக்கவாசகர் ஐந்தாம் நூற்றாண்டினர்; ஸ்ரீ ஆண்டாள் ஏழாம் நூற்றாண்டினர். இருபெரு மக்களின் கருத்துக்களும் திருவெம்பாவை, திருப்பாவையாக வெளிவந்துள்ளன. இவ்விரு நூலிலும் பெரும்பகுதி ஒத்துள்ளன. தத்துவசாத்திரக் கருத்துக்கள் உள்ளடங்கியும், விளையாட்டுமுறை வெளிப்படையாகவும் பாடல்களில் காணப்படுகின்றன. அனைத்துயிர்களையும் தாய்மை உணர்ச்சியுடன் காணவேண்டும். அதுவே ஒற்றுமையை வளர்க்கும். மாயா உணர்ச்சியுடன் கண்டால் வேற்றுமை உணர்ச்சிதான் விரைந்துவரும். நீராடுதலையும், வழிபாட்டினையும் விளக்குவதே இவ்விருபாவைகளும். நீரினையும் அம்மை அப்பனைக் காணவேண்டும்; அதுதான் மாணிவாசகர் கண்டது. பாதகங்கள் தீர்த்துப் பரமனடி காட்டவல்லது இப்பாவைப் பாடல்கள்' என்றெல்லாம் விளக்கமாகப் பேசினார்கள். வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கனம் * ஸ்ரீ இராஜாஜி அவர்களும் பேருரையாற்றினார்கள்.

திருவெம்பாவை முதற் பத்துப்பாடல்களைப்பற்றி, தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்கள் பேசுகையில் 'பரசுராம் பேச்சு ஆராய்ச்சிப் பேச்சு, இராஜாஜி பேச்சு அனுபவப் பேச்சு, ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் ஆண்டவனை அடைய முடியும் என்பதைத்தான் நம் சைவசித்தாந்தம் கூறுகிறது. சிவஞானபோதம் முதல் ஆறு சூத்திரம் ஆராய்ச்சி

* இவர்கள் பேருரை இவ்விதழின் முதலில் தரப்பட்டுள்ளது

யையும், பின் ஆறு சூத்திரம் அனுபூதியையும் அறிவிப்பதால் இதனை நன்கு உணரலாம். கன்னிப்பெண்கள் நீராடி வழி படுவதால் தங்களுக்கு நற்குணம் வாய்ந்த கணவனைப் பெறுவ தோடு நாட்டிற்கு நல்ல மழைவளத்தையும் வாய்க்கச் செய்கிறார் கள். குறைவிலாது உயிர்கள் வாழ வழிவகுப்பதே திருவெம் பாவையின் உட்கருத்து. நீராடுவதற்கு முன்னர் சங்கல்பம் செய்துகொள்ள வேண்டுமென்பதை ஒன்பதாவது பாடல் அறிவிக்கிறது' என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

''ஏலக் குழலி பரிசு'' என்பதுபற்றிப் பேசிய திருமதி, சண்பகவல்லி அம்மையார் நவசத்திகளும் ஒன்றனுக்கொன்று துபிலுணர்த்துமுறையில் முதல் எட்டுப் பாடல்கள் அமைந் துள்ளன என்றும், ஐந்தாவது பாடலில் ஏலக் குழலியின் தாழ்ந்த நிலையினை எடுத்துப் பேசுகிறார் என்றும், அதனால் நாமறிந்து கொள்ளும் கருத்து இறைவன் நம்மீதுள்ள குற்றங் களைந்து குணங்கொடுத்து ஆட்கொள்ள வந்த போதிலும் மாயையின் வன்மையால் மயக்கமெய்தி உண்மை உணராதிருக் கிறோம் என்றும் குறித்து அருமையானதோர் பிரசங்கம் செய்தார்கள்.

28—12—53 மாலை, நிகழ்ச்சியில் குறித்தவண்ணம் 6-மணிக்கே கூட்டந் தொடங்கியது. திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையுரையில் 'சமய நம்பிக்கை இல்லா விட்டால் ஒழுக்கம் நிலைபெறாது என்பதனை இன்று மேலை நாட்டாரும் ஒப்புக்கொள்கின்றனர். உள்ள பொருளையே பல பகுதிகளாகப் பிரித்து ஆய்ந்து உணர்த்தவல்லதே விஞ் ஞானிகள் செயல். இதுவரை இல்லாத ஒன்றனைச் சிருட்டித்து உணர்த்துவது விஞ்ஞானியால் இயலாது. கடவுள் உணர்ச்சி குறைவதால் நாட்டிற்கு நன்மை குறையும், கடவுள் நம் பிக்கையை ஆதீனத்தார்களும், கழகத்தார்களும், பெரியோர் களும் வளர்க்கவேண்டும். அவர்களும் வளர்த்து வருகிறார்கள். பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு விஞ்ஞானத்தின் துணை கொண்டு அருளுணர்வைப் பெருக்க வேண்டும் பாகவத காலத்திலேயே பாவை நோன்பு இருந்தது. சங்ககாலத்தில் பரிபாடலில் காணப்படுகின்றது. தைந்நீராடலை மலையாளத்தில் இன்றும் காணலாம். அன்பு, அருள், தெய்வஉணர்ச்சி இவை

132

களைத்தான் பாவை நூல்கள் நமக்குப் போதிக்கின்றன' என்றெல்லாம் மிக விளக்கமாகப் பேசினார்கள்.

விழாவினைப் பார்வையிடவந்த கனம் மந்திரி V. பழனிசாமி கவுண்டர் அவர்கள் நிலையத்தாரின் விருப்பத்திற்கிணங்க சிறிது நேரம் பேசினார்கள். 'இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கும்போதே சமய நம்பிக்கையையும் கற்பிக்க வேண்டும், கல்வி அந்த முறையில் மாறி அமையப்பெறவேண்டும். சமய நம்பிக்கை அரசியலுக்குப் புறம்பானதல்ல என்பதை இராஜாஜி சர்க்கார் நடைமுறையில் காட்டி வருகின்றது. அறிவாகிய சத்தியை நல்லவழியில் நடத்த வேண்டும். மார்கழி நீராட்டுவிழாவில் ஆண், பெண் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும். விடியலில் நீராடுவதால் பல நன்மைகள் விளையும் என்பதை அனுபவத்தால் நன்கு உணரலாம். இத்தகைய மகாநாட்டைக் கூட்டி மக்களை நல்வழிப்படுத்தும் ஆதீனத்தலைவரவர்களுக்கு எனது வணக்கம் உரியது என்று கனம் மந்திரி அவர்கள் தமது பேச்சில் குறித்தார்கள்.

திருவெம்பாவையில் இரண்டாம்பத்து என்பதுபற்றிப் பேசிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், "சிவன் என்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியெம்மான்" என நாவுக்கரசரும், 'தண்ணியல் வெம்மையினன்' எனச் சுந்தரரும், 'செய்யன் சிவந்த மேனியன்" என நக்கீரரும் சிவபெருமானுடைய வண்ணத்தினையும் தன்மையினையும் வாயாரப் புகழ்ந்தமையைத் திருவெம்பாவையில் 'செய்யா, வெண்ணீருடா, செல்வா' என்ற சொற்றொடரில் அமைந்து கிடக்கிறதென்றும், கடவுள் வாழ்வே மனித வாழ்வு, மனித வாழ்வு கடவுளியலை விட்டுத் தனியே இல்லை, இருக்கவும் முடியாது என்றும் சென்றடையாத திருவுடைய இறைவனை இத்திருவெம்பாவைப் பாடல்களை ஓதி வழிபடின் எளிதாகப் பெறமுடியும் என்றும் பேசினார்கள்.

"திருவெம்பாவை" என்பதுபற்றிய உரையாடலைச் சமயப் பிரசார நிலைய மாணவிகள் விளக்கமாக நிகழ்த்திக் காட்டினர்.

"பூம்புனல் பாய்ந்தாடல்" என்பதுபற்றிப் பேசிய திருமதி பார்வதி அம்மையார் அவர்கள், பாவை என்ற சொல் கண் பாவையையும் குறிக்குமாகலின் கண்ணுக்கே இத்திருவெம்

பாவைக் கருத்துக்களையெல்லாம் மாணிக்கவாசகர் அறிவித்தார் என்றும் கொள்ளலாம்; ஏனெனில் கட்புலன் அடங்கினால் ஏனைய புலன்கள் தானே அடங்கும் என்பது துணிபாகலின் என அறிவித்து, நீராடல் நிலையினை "ஓரொருகால் எம்பெருமான்" என்ற பாவைப் பாடலைக்கொண்டு தெளிவித்தார்கள்.

29—12—53 மாலை 6 மணிக்கு, சமயப்பிரசார நிலையத்தின் திருமுறை ஆசிரியர் சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் அவர்கள் குழுவினரால் திருவெம்பாவை இசையரங்கு நிகழ்த்தப்பட்டது. பண்ணொன்ற இசையமைத்துப் பாவை பாடிப் பலரையும் மகிழ்வித்தார்கள். தலைமைதாங்கிய திரு. கே. இராமலிங்க முதலியார் அவர்கள் இப்பாடல்களை இசையுடன் பண் அமைத்துப் பாடியதைப் பாராட்டினார்கள், மேலும், இப்பாடல்களை நாடகமாகவும் நடித்துக் காட்டலாம்; அதற்கேற்ப இந்நூல் அமைந்துளது என்றும், முதல் எட்டுப் பாடல்கள் சாத்திரக் கண்கொண்டு காண்பார்க்குச் சத்திகள் ஒருவருக்கொருவர் எழுப்புவது புலனாகுமென்றும், உலகியல் நிலையில் பார்ப்போருக்கு எட்டுவிதமான மக்களை நன்னெறியில் செலுத்துவது புலனாகும் என்றும் குறிப்பிட்டார்கள். சென்னையில் பயிலும் மாணவர் மாணவிகட்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "திருவெம்பாவை திருப்பாவை"ப் பரிசுப்போட்டி அமைத்துள்ளதை மக்கட்கு அறிவித்து அனைத்து இளைஞர்களும் கலந்துகொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள்.

30—12—53 மாலை 6 மணியளவில் சங்கீத சுரேந்திரா நாகர்கோயில் திரு. எஸ். ஹரிஹர அய்யர் அவர்கள் குழுவினர் தமிழிசையரங்கு நிகழ்த்தினார்கள். இரவு எட்டு மணியளவில் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் குழுவினர், 'குமாரசம்பவம்' என்பதுபற்றி, கதாகாலட்சேபம் நிகழ்த்தினார்கள். நிகழ்த்தும்போது 'ஆஸ்திகர்கள் நெறிதவறுங்கால் அதற்குத் தண்டனையாக நாஸ்திகம் தோன்றுகிறது. நாஸ்திகம் தோன்றும் போதெல்லாம் ஆஸ்திகம் ஒளிபெறுகிறது; இதனைத்தான் குமாரசம்பவம் நமக்கு அறிவிக்கிறது; தேவர்கள் கடமை மறந்து நின்றபோது அசுரர்கள் இன்னல் செய்தார்கள்; தேவர்கள் தங்கள் கடமையை உணர்ந்தபோது இறைவன் அஞ்சேலென்றருள் செய்வான் குமரனாகத் தோன்றினார்' எனக் குறிப்பிட்டார்கள்.

31—12—53 மாலை 6 மணிக்குத் திருப்பாவைத் திருநாள் தொடங்கியது. தலைமை தாங்கிய முன்னாள் இந்திய உயர்மன்ற நீதிபதி சர் எஸ். வரதாச்சாரியார் அவர்கள் 'மடாதிபதிகளும், மடத்தைச் சேர்ந்த சிடர்களும் மக்களைத் திருத்தி அவர்களுக்கு நல்லவற்றைப் போதிப்பதற்காகவே அமைந்துள்ளார்கள்; ஆதீனத் தலைவரவர்கள் இம்மகாநாடு கூட்டுவது நம்மையெல்லாம் ஒற்றுமைப்படுத்துவதற்கேயாம். திருவெம்பாவை—திருப்பாவையைத் தனித்தனியே பார்ப்பதைவிட இம்மாதிரி ஒன்றுசேர்த்துக் காணவேண்டும். அப்போதுதான் ஒற்றுமையும் இன்பமும் உண்டாகும். கூட்டு வழிபாட்டினை—பிறர் நலப்பெருமையை இவ்விரு நூல்களும் நமக்கு அறிவிக்கின்றன. நாமெல்லாம் உடல்வகையால் ஆண், பெண்ணாக இருந்த போதிலும் உயிர்வகையால் எல்லோரும் பெண்களேயாம்' என அறிவித்துத் தலைமையுரை நிகழ்த்தினார்கள்.

காந்திஜி சேவாசங்க மாணவிகள் பக்கவாத்தியங்களுடன் திருப்பாவைப் பாடல்களைப் பாங்குறப் பாடினார்கள்.

"ஆண்டாளும் பாவையும்" என்பதுபற்றிப் பேசிய திருமதி. கோதைநாயகியம்மையார் ஆண்டாள் துளசிச் செடியடியில் அவதரித்துப் பெரியாழ்வார் பெண்கொடியாக வளர்ந்து, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாய், பாவைநோன்பு நோற்று, அரங்கநாதனையே மணாளனாகப்பெற்றவள் என்றும், அந்த அம்மையால் பாடப்பெற்றதே திருப்பாவை என்றும், இப் பாவையைப் பாராயணம் செய்தால் பெற்றதாயையைக் காட்டிலும் ஆண்டவன் நமக்கு அருள்புரிவான் என்றும் கூறினார்கள்.

"திருப்பாவை முதற்பகுதி" பேசிய, குகஸ்ரீ. கண்ணன் அடிகள் இரவினுக்கு வேண்டியவற்றைப் பகலில் தேடிக்கொள்வது போலவும், முதுமைக்கு வேண்டியவற்றை இளமையில் தேடிவைத்துக்கொள்வது போலவும், மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையில் தேடி வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை விளக்கமாக எடுத்துரைக்கிறது திருப்பாவை என்றும், முதற்பகுதியில் பள்ளி எழுப்புதல், மழைவளம் வேண்டுதல், நோன்புமுறை முதலியன நன்கு அறிவிக்கப்பெறுகிறதென்றும் பேசிச் சொற்பெருக்காற்றினார்கள்.

1—1—54 மாலை 6-மணிக்கு முன்னுள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சர். V. பாஷ்யம் ஐயங்கார் அவர்கள் தலைமையில் மாநாட்டுநிகழ்ச்சி தொடங்கப்பெற்றது. தலைவர் தமது தலைமையுரையில் 'பகவான் அவதாரமும் ஆசாரியர்கள் அவதாரமுமே நமது நாட்டிற்குச் சிறப்பைத் தருகிறது. நமது முன்னோர்கள் உடலுக்கு வேண்டிய பொருட்செல்வத்தைக் கருதாமல் உயிருக்குவேண்டிய அருட்செல்வத்தையே கருதி வாழ்ந்தார்கள். ஒரு மதத்தைச் சேர்ந்தவர் மற்றொரு மதத்தைத் தாழ்த்திச் சொல்லுதல் பாவமானது. அதனுல் இறைவனுடைய ஒளி நமக்குக் குறைவாகத்தான் கிடைக்கும். மத ஒற்றுமையாகிய மரம் நிலைத்தால்தான் ஒவ்வொரு சமயமாகிய கிளைகளும் துளிர்விட்டு வளரமுடியும். தத்துவ விசாரணையின் பெயரால் பெருமையடையமுடியாது என்பது தெளிவாக விளங்கும். ஆகவே திருவெம்பாவை திருப்பாவைகள் நம்மையெல்லாம் ஒற்றுமைப்படுத்தத் துணைபுரியும் என நம்புகிறேன்' எனக் குறிப்பிட்டார்கள்.

அட்வகேட், திரு. D. இராமசாமி ஐயங்கார் அவர்கள் "திருப்பாவை இரண்டாம்பகுதி" யைப்பற்றிப் பேசும்போது 'வடமொழியில் நாட்டங்கொண்ட ஸ்ரீமத். சங்கராச்சாரிய சுவாமிகள் தமிழருமையைப் பாராட்டவும், சமய ஒற்றுமையைக் காணவும் பாவை மாநாடு பலஇடங்களில் கொண்டாடச் செய்கிருர்கள். தருமபுர ஆதீனத்தின் சார்பில் இம்மகாநாடு நடைபெறுவதும் நமது ஒற்றுமைக்கு ஊக்கமளிப்பதாகும். ஆங்கிலேயர்களுக்கும் இந்த மார்கழிமாதம் விசேடமானதாக இருக்கிறது: கிறிஸ்து பிறந்தது இம்மாதமேயாகலான். திருவெம்பாவையும் திருப்பாவையும் அடியவர்களைச் சிறப்பித்துப் பாடப்பெறுவது. இம்மாதிரி நூல் வேறு மொழிகளில் இல்லை. திருப்பள்ளியெழுச்சி, திருப்பல்லாண்டு, திருப்பாவை முதலிய நூல்களில் பெரும்பகுதி சைவ, வைணவ ஒற்றுமை காணப்படுகிறது. திருப்பாவையின் பிற்பகுதியில் நந்தகோபனைத் துயிலெழுப்புதலும், மக்கட்கு வேண்டிய வளத்தினைப் பெறுதலும், அவனை வாழ்த்துதலுமாகிய அருங்கருத்துக்கள் பல அடங்கியுள்ளன' என உரைத்தார்கள்.

"பாவை நோன்பு" பற்றிப் பேசிய திருமதி. குகப்பிரியை அம்மையார் அவர்கள் 'இலக்கியத்தால் சமயமும், சமயத்தால்

இலக்கியமும் வளர்ச்சியடைகிறது. வாழ்க்கையும் சமயமும் பிரிக்கமுடியாதபடி பின்னிக்கிடக்கிறது. நமது பழைய இலக்கியங்களில் வீட்டின் நடுவில் பூஜை அறைகளும்; ஊரின் நடுவில் கோயில்களும் இருந்தலே பெரியதொரு சான்ருகும். கன்னிப் பெண்கள் விடியற்காலையில் நீராடி, கௌரிதேவியை வழிபடுவதே பாவை நோன்பு எனப் பெயர்பெறும். இக்கருத்தையே திருப்பாவை விளக்கமாக எடுத்துரைக்கிறது ஸ்ரீ ஆண்டாள் அம்மை அரங்கநாதனை மணாளனகப் பெற்றதும் இப்பாவை நோன்பாலேயே என்பதும் நினைவுகூர்தற்குரியது. நோன்பு நோற்ற பெண்கள் முடிவில் புத்தாடையுடுத்து, பாற்சோறுமூட நெய்பெய்து முழங்கை வழிவார, கூடியிருந்து உண்டல் மரபு என்புதைப் பாவைப் பாடலே நமக்கு அறிவிக்கிறது' என உரைத்தார்கள். "திருப்பாவை" உரையாடலைச் சமயப்பிரசார நிலைய மாணவர்கள் திறமையாக நிகழ்த்திக்காட்டினர்கள்.

2—1—54 மாலை திரு. T. M. மார்க்கசகாயஞ்செட்டியார் அவர்கள் தலைமையில் திருப்பாவை இசையரங்கு தேரழுந்தூர் ஸ்ரீ சீனிவாசாசாரியார் அவர்கள் குழுவினரால் இனிமையாக நிகழ்த்தப்பட்டது. பாவைப்பாடலை இசையுடன் கலந்து விருந்தளித்தார் பாடகர்.

தலைவர் அவர்கள் பேசுகையில் பாவைப் பாடல்களின் கருத்தினை விளக்கி, விஞ்ஞானிகளும் தமது ஆராய்ச்சிக்குப் புலனாகாத நிலையில் கடவுளை ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை எடுத்துரைத்து, மெய்ஞ்ஞானிகள் எளிமையாகக்கண்டவற்றை விஞ்ஞானிகள் தமது அருமையான ஆராய்ச்சியால் ஒப்புக்கொண்டு வருகின்றனர் என்பதை விளக்கிப்பேசினர்கள்.

3—1—54 மாலை 6 மணிக்கு "மாணிக்கவாசகர்" என்பது பற்றித் தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர பாகவதர், எம்பார், ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் குழுவினர் கதாகாலட்சேபம் புரிந்தனர். அரசாங்க அலுவலுக்கு உரிய பிராமணர்களை அமாத்தியப் பிராமணர் என அழைத்தல் மரபு என்றும், மாணிக்கவாசகர் குதிரைவாங்குவதற்குக் கொண்டு சென்ற பொருள் கோயில்கட்டுதற்கு உதவியது அரசன் இருந்ததற்கு ஆண்டவன் கண்ட வழியென்றும் கதாகாலட்சேபத்தில் விளக்கினர்கள்.

4—1—54 மாலை 6 மணிக்கு "ஸ்ரீ ஆண்டாள்" என்பது பற்றி ஷை ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் குழுவினரே கதா காலட்சேபம் புரிந்தனர். பெரியாழ்வார் பக்திப்பெருக்கின் பண்பாட்டையும், கோதையைச் சூடிக்கொடுத்த கோதையைப் பெருமான் ஏற்றுக்கொண்டது அன்பின் முதிர்ச்சி கருதியே என்பதையும், அன்புவலையில்தான் ஆண்டவன் அகப்படுவான் என்பதையும் தாம் செய்த கதாகாலட்சேபத்தில் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

5—1—54 மாலை 6 மணியளவில் திருவெம்பாவை திருப்பாவை மாநாட்டு நிறைவுவிழாவிற்குச் சென்னை அரசாங்க அறநிலையப்பாதுகாப்பு மந்திரி, கனம், ஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். 'உலகியலில் நல்லவற்றை நாம் பெறவேண்டுமானால் முதலில் சிரமமடைந்து பின்னர் நலம் பெறுகிறோம். அதுபோல் ஆண்டவன் அருள் பெறுதற்கு முதலில் நெய்யுண்ணாமலும், பாலுண்ணாமலும் நாட்காலே நீராடி நோன்பு நோற்றுப்பின்னர், பெருமானுடைய அருளைப் பெறவேண்டும். இதனைத்தான் திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன. ஒரு மனிதன் நல்லன அனுபவித்தற்கும் தீயன அனுபவித்தற்கும் அவன் அவனே காரணம் என்பதைத் திருப்பாவையில் "நானே தானாயிடுக" என அறிவிக்கின்றார். யான் எனது என்னும் கர்வம் நீங்கினால் இறைவனைக் காணமுடியும். பக்தன் பகவானை அடைவதெப்படி என்பதைப் பாவைப்பாடல்கள் விளக்கமாகக் கூறுகின்றன. சமய வேறுபாடு நீங்கி ஒற்றுமை நிலைபெற இம்மாதிரியான மாநாடு பயன் விளைவிக்கும், மத ஒற்றுமை கருதியே தருமபுர ஆதீனகர்த்தரவர்கள் இந்நிலையத்தை இங்கு நிறுவியுள்ளார்கள். தகுதியுடைய ஒரு அடிகளையும் திருமுறை ஆசிரியர் ஒருவரையும் இங்கு அமைத்துள்ளார்கள். தேவாரம், திவ்யப்பிரபந்தங்கள் முதலியவற்றை, பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை இவ்விடம் அனுப்பிப் படிக்கச்செய்ய வேண்டும். திருவெம்பாவை திருப்பாவைக்கு ஆதீனத்தார் பரிசு அமைத்துள்ளார்கள். குழந்தைகள் இவ்வருட்பாடல்களைப் படித்துப் பரிசு பெறவேண்டும்' என்று தலைமையுரையில் பேசினார்கள்.

"எம்பெருமான் பள்ளி" என்பதுபற்றிப் பேசிய திரு. மோ. ஸ்ரீ செல்வம் அவர்கள், மார்கழி மாதம் உலகியல் போக

போக்கியங்கட்குச் சூன்ய மாதம், அருளியலுக்குப் புனிதமான மாதம் என்றும், பரமனை உபசாரமாகப் பள்ளி யெழுப்புவதைத் தான் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் (திருப்பள்ளி எழுச்சியாக) அருளிச்செய்தார் என்றும் உரைத்தார்கள்.

"அரங்கத்தம்மான் பள்ளி" என்பதுபற்றிப் பேசிய திரு. C. ஜெகந்நாதாசாரியார் அவர்கள் திருப்பாவையில் சிலபாடல்கள் அரங்கத்தம்மானைப் பள்ளி யெழுப்புவதாக அமைந்துள்ளன என்றும், இப்பள்ளி எழுச்சி தொண்டரடிப்பொடி ஆழ்வாரால் இயற்றப் பெற்றதென்றும், உள்ளத்தில் வீற்றிருக்கும் பரந்தாமனை நம்மீது அருள்நோக்கம் பாலிக்கும்படியாகப் பாடுதலே பள்ளி எழுச்சியின் உட்பொருள் என்றும் பேசினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அனுப்பிவைத்த ஆசிச் செய்தியை ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் வாசித்து, பிறகு அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரை :—

"இன்பவாழ்விற்கு இறைவன் உதவி இன்றியமையாதது. மனநோய்க்குக் கடவுள் உணர்ச்சியே மருந்து. நமது நாட்டில் பௌத்த ஜைன நாகரீகம் பரவுவதற்கு முன்பே சங்ககால நாகரீகத்தில் சட்டநூலாகிய தொல்காப்பியம், கந்தழியாகிய சிவம், திருமால், முருகன் முதலிய தெய்வங்களைப்பற்றியும் வழிபாட்டு வகைகளைப் பற்றியும் பயனைப்பற்றியும் அறிவிக்கின்றன. பரிபாடல் நூல் தைந்நீராடலைப்பற்றிப் பேசுகின்றது. மார்கழி மாதம் முழுதும் நோன்பு பூண்ட மாதர்கள் செய்யும் முடிவு நீராட்டு விழாவே இது. யாக முதலிய நோன்புகள் முற்றின் அவபிருதஸ்நானம் செய்கிறார்களல்லவா! அதுபோல் தைந்நீராடிய பின் பொங்கல்நாள் ஒவ்வொரு வீட்டிலும் பொங்குகிறது, வீட்டுத் தெய்வங்கள் வணங்கப்பெறுகின்றன. ஆண்டாள் அருளியதுபோல நெய் முழங்கை வழியப் பாற்சோறு படைக்கப்படுகிறது. மறுநாள் உழவுக்கும் தொழிலுக்கும் உதவிசெய்த மாடு கன்றுகளுக்குப் பூசனை. அந்தநாள்முதல் தான்ய லக்ஷ்மி வீடுதேடி வருகிறாள். ஏனைய ஏழு லக்ஷ்மிகளும் முறையாக வந்து சேர்கிறார்கள். அஷ்டலக்ஷ்மிகடாக்ஷத்தால் உலகம் ஆனந்தம் அடைகிறது இவ்வளவு எழுச்சிக்கும் காரணம் மார்கழி நோன்பு.

இம்மாதம் தேவநாளின் விடியற்காலம். விடியலில் விழித்தவனுக்கு நல்லகாலம் விடியும். விழித்தவுடன் கடவுளைத் தியானிப்பது கடமை பின் அன்று செய்யும் வேலைகளுக்குத் திட்டமிடுதல் அவசியம்.

வைகறையாமம் துயிலெழுந்து தாம் செய்யும்
நல் அறமும் ஒண்பொருளும் சிந்தித்து - வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. —ஆசாரக்கோவை.

ஆதலால் வரப்போகும் வருஷத்திற்கு வேண்டிய வேலைத் திட்டங்களை—அதற்கு வேண்டிய ஆற்றலை—தெய்வத்திருவருளைச் சேமித்து வைக்கவேண்டிய காலம் இம்மாதம். இதனாலே நமது ஞானச் செல்வர் மணிவாசகப் பெருந்தகை 'கண்ணைத்துயின்று அவமே காலத்தைப்போக்காதே' என்று அறிவுறுத்தினார்கள். கடவுள் அருள்பெற, பக்திப் பாசுரங்களைப் பாராயணஞ் செய்தல்வேண்டும். இம்மாதத்திற்குரிய பாடல்கள் பாவைப் பாடல்கள். பாவை திருவெம்பாவையும் திருப்பாவையும்.

திருப்பாவை ஒரு பெண் பெண்ணிலையிலிருந்தே நோன்பையும் பயனையும் பற்றிப் பாடியருளியது, திருவெம்பாவை ஒரு ஆண் பெண்ணிலையைப்பெற்றுப் பிரபஞ்ச சிருஷ்டியைத் திருவுளத்திலெண்ணி அதற்குரிய சக்திகளை வியந்ததாகப் பாடியருளியது இவையிரண்டும் அன்பைச் சுரக்கச்செய்யும் அரிய துணை. ஆண்டவனை அணியனாக்கும் வாயில்கள். ஆதலால் ஆடவரும் பெண்டிரும் அவ்விருவர்களைப்போல தாமும் ஆகப் பாராயணஞ் செய்தல் அவசியம்.

தேன்மொழிதந்த திருவாதவூரடிகளைத் தென்தமிழ்நாடு உய்யத்தந்தருளிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் சென்னையில் நமது ஆதீனப்பிரசார நிலையத்தில் இந்த மாநாடு இனிது நடைபெறுகின்றது. இந்தப் பத்து நாட்களிலும் ஒவ்வொரு துறையில் ஒப்புயர்வற்ற தலைவர்களும் பேச்சாளர்களும் சொற்பணி செய்து சிறப்பித்திருக்கின்றார்கள். பாவைப் பாடல்களின் உண்மைக் கருத்துக்கள் எல்லார் உள்ளத்தும் பதிக்கப்பெற்றுள்ளன. எல்லார் சிந்தையிலும் தெய்வ ஒளி திகழ்ந்து வருகிறது. இங்ஙனம் நற்பணி புரிந்த அனைவர்க்கும் திருவருள் நல்லன எல்லாம் தந்தருள்க.

நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.''

பிறகு நிலையத்தின் திருமுறை ஆசிரியர் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வாழ்த்துப் பாட திருவெம்பாவை—திருப்பாவை மாநாடு நிறைவெய்தியது.

140

ஷை நிலயத்தில் பெரியபுராண விரிவுரை

(தொடர்ச்சி)

13—12—53 மாலை 6-மணிக்குத் "திருக்கூட்டச் சிறப்பு" என்பது பற்றி "சௌபாக்கியம்" ஆசிரியர், திரு. B. சொக்கலிங்கம் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் பரமனடி பாடும் தொண்டர்களைத் திருக்கூட்டம் என அழைத்தல் மரபென்றும், தம்மாலியன்ற தொண்டுகளை ஒல்லும் வகையெல்லாம் இயற்றுபவர்களே தொண்டர்கள் ஆவார்கள் என்றும், திருநீறு பூசும் மேனிபோல் உள்ளும் தூய்மை பெற்றவர்கள் திருக்கூட்டத்தில் காணப் பெறுவர் என்றும், எத்தகைய இடையூறு வரினும் இறைவனை மறவாதவர்கள் என்றும், தொண்டு செய்வதையே பெரிதாகக் கருதவேண்டும் வீடுபேறடைதலை விரும்பலாகாதென்றும், ஈசன் பணியல்லாது வேறு பாரங்களை உள்ளத்தில் கொள்ளாதவர்களே அடியவர்களாவார்கள் என்றும், ஈர அன்புடையார் யாதுங் குறைவிலாது வாழ்வார் என்றும், இத்தகைய தொண்டர்கட்கு வரும் நன்மை தீமைகளுக்கு இறைவனே பொறுப்பாளியாகின்றான் என்றும், இவையனைத்தும் திருக்கூட்டச் சிறப்பில் சேக்கிழார் சுவாமிகளால்விரித்துரைக்கப்படுகின்றன என்றும் பேசினார்கள்.

20—12—53 மாலை 6 மணிக்கு "சுந்தரரைத் தடுத்தாட்கொள்ளல்" என்பதுபற்றி திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். சுந்தரர் திருக்கயிலையில் இறைவனுடைய அணுக்கத் தொண்டராயிருந்தவர் என்றும், சிறிது காம இச்சையினால் இப்பூவுலகத்திற்கு அனுப்பப்பட்டார் என்றும், பெரியவர்கள் தவறெல்லாம் ஒப்பற்ற நன்மையில் முடியும் என்பதற்கு இச் சுந்தரர் வரலாறு ஒரு எடுத்துக்காட்டு என்றும், அவர் வாழ்க்கை நமக்குப் பெரியதொரு வழியாகக் காணப்படுகிறது என்றும், அரசர் வளர்ப்பாகச் செல்வவாழ்வு வாழ்ந்தபோதிலும் தமது வைதிக நெறியை மறத்தலாகாதென்பதை இவரது வரலாறு தெளிவிக்கின்றதென்றும், அடியவராய் இருந்தாலும் பிழைசெய்யின் திருத்தியாட்கொள்ளும் முறை இறைவன்பாலுளது என்பதைத் தடுத்தாட்கொள்ளும் பகுதி நமக்கு அறிவிக்கிறது என்றும் விளக்கிக் கூறினார்கள்.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஸூ தை-மீ 1-௳ முதல் 29-௳ முடிய)

(14—1—54 முதல் 11—2—54 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசிபலன் எல்லா பாதங்களுமே சுபத்தைத் தரும்; அதில் கார்த்திகை முதல்பாதம் சில விசேஷ லாபங்களை எதிர் பாராதபடி கொடுக்கும்; பரணி லாபகரத்தோடும், மங்களகர மாகவும் நடக்கும்; ஆனால் அடிக்கடி மனமாறுதலும், தொல்லை களும் உண்டாகும்; சஞ்சாரபலனும், சுபங்களும், கீர்த்தி பத்திரங்களும், கௌரவங்களும் ஏற்படும். அசுவதி மிசிரமாக நடக்கும். அதிக கஷ்டமிராது. புதனும், சனியும் சுபமாகும்.

2. விருஷபம்: கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை மூன்றுபாதமும் கவலையைத்தரும். ரோஹிணி பூரா மிசிரமாயும், கவலை அதிகமாயும் ஓடும்; செலவு அதிகம்; வியாபாரிகள் நஷ்டமடைவார்கள்; விவசாயி லாபமடைவான்; பிரபுக்கள் பீடிக்கப்படுவார்கள். மிருகசீரிஷம் 1, 2 பாதம் சுபத்தையும், ஆரோக்கியத்தையும், விஜயத்தையும், லாபத்தை யும் தரும்; மேலோர் பெரியோர் அன்புகிட்டும்; தெய்வபலன் பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் பின்றைமாதம் முதல் பகுதியில் விசேஷ கஷ்டத்தைக் கொடுத்து, பிற்பகுதியில் லாபத்தைத் தரும்; தொழில் ஓங்கும்; தர்ம விரயம் அதிகமாகும்; சத்கர்மபலன் கிட்டும்; ஆஸ்தீகம் ஓங்கும். திருவாதிரை உழைப்பின்பேரில் அதிகலாபந்தரும்; நஷ்டதனம் கிடைக்கும்; மேலோர் பெரியோர் ஆசி கிடைக்கும்; சகல காரியங்களும் வெற்றியடையும். புனர்பூசம் முக்காலும் மகா ஆபத்தையே தரும்; சென்றமாதத் தைவிட அதிக கஷ்டங்கள் காட்டும்; குடும்பத்தொல்லைகளா லும், வேலைக்காரர்களாலும், புத்திராதிகளின் ஆபத்தான

வியாதி பயத்தாலும் பெரிய கஷ்டங்களை அனுபவிக்க நேரும்; நாஸ்தீகமும், பெரியோர் சாபமும் விருத்தியாகும்; தெய்வபலமே இராது; கஷ்டங்கள் நிவர்த்திக்கு மார்க்கமே இல்லாததுபோல் நடந்துவரும். சனி, வியாழன், புதன் அசுபத்தைத்தரும்.

4. **கடகம்:** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4-ம் பாதம் கஷ்டம் சுகம் சமமாய் நடக்கும். பூசம் ரொம்ப துன்பத்தையே அநுபவிக்கச்செய்யும்; ஆரம்பத்தில் எல்லாம் லாபகரமாகவும் ஜயமாகவும் தோன்றி, பிறகு பெரிய கஷ்டங்களையே கொடுக்கும். ஆயில்யம் 4 பாதமும் மகா சந்தோஷத்தைத்தரும்; ஆனால் வித்தியார்த்திகளுக்கு அபஜயத்தைத்தரும்; கடனாளிகள் கடன் நிவர்த்தியாகி நலம் பெறுவார்கள்; விவசாயிகள் சந்தோஷப்படுவார்கள்; வியாபாரிகள் புதுவிதமான தொழில்கள் ஆரம்பித்து லாபமடைவார்கள். சனியும், புதனும் சுபம் தரும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் நான்கு பாதங்களும் சுபமாகவே நடக்கும்; குடும்பம் ஓங்கும்; தொழில் ஓங்கும்; லாபம் கிடைக்கும்; மனம் சந்தோஷமடையும்; மாதக்கடைசி பத்துதினங்கள் கவலையைக்காட்டும். பூரம் மிசிரமாய் நடக்கும். வியாதி தொல்லைதான் அதிகமாகும். உத்திரம் கால் அபவாதத்தை அடையும்; நல்லது செய்யப்போய் துன்பம் உண்டாகும்; பந்துமித்திராள் விரோதமாவார்கள்; மனம் துன்புறச்செய்யும். சனியும், வியாழனும் நலன் தரும்.

6. **கன்னி:** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம் முக்காலும் சுபசந்தோஷத்தைத்தரும்; வியாதி சாந்தியாகும்; உத்தியோகமேன்மை கிட்டும்; வியாபாரம் ஓங்கும்; குடும்பம் ஓங்கும்; நல்ல கீர்த்திபத்திரம் கிடைக்கும். ஹஸ்தம் 1, 2; சித்திரை 1, 2 பாதங்களும் மனம் நிம்மதி இல்லாமல் நடக்கும். குடும்பத் தொல்லைகளும், நஷ்டங்களும் உண்டுபண்ணும். ஹஸ்தம் 3, 4 பாதங்கள் தெய்வசக்தியை விசேஷமாய்த் தந்து அசாத்தியமெல்லாம் சுலபமாகச் சாதித்துத் தரும்: நினைத்ததெல்லாம் கைகூடும்; தூரத்திலிருந்து ஆஹ்வான பத்திரம் கிடைக்கும்; தூரதேசசஞ்சாரம் கொடுக்கும்; நல்லோர்

பெரியோர் தரிசனம் கிட்டும்; நஷ்டதனங்கள் தானக வந்து சேரும்; எங்கும் விஜயமும் கீர்த்தியும் செல்வாக்கும் தரும்; தொழில் ஓங்கும். புதன், வியாழன் சுபம்தரும்.

7. துலாம்: சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

விசாகம்தவிர மற்ற இருநக்ஷத்திர பலனும் சம்பூர்ணமான சுபத்தைத்தரும்; எதிர்பாராத லாபகரமான காரியங்கள் நடைபெறும்; தொழில் ஓங்கும்; கீர்த்தி கிட்டும்; பெரியோர்கள் அன்பினல் துக்கநிவர்த்தியாகும்; தெய்வபலன் பிரகாசிக்கும்; தன தான்யவிருத்தியாகும். விசாகத்துக்கு துக்கபலனே தான் கிட்டும்; வியாபாரியாகில் பெரும் கஷ்டம் உண்டுபண்ணும். சனியும், வியாழனும் அசுபமாகும்.

8. விருச்சிகம்: விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகம் 4-ம் பாதம் நல்லபலன் கொடாது. நஷ்டத்தைத் தரும். அனுஷம் பூராவும், கேட்டை பூராவும் சுபத்தையேதரும். மங்களகாரியங்கள் நடக்கும்; தொழில் ஓங்கும்; பந்துமித்திராளுடைய சேர்க்கையும், வெகுதூரத்திலிருந்து வரக்கூடிய நஷ்டதன வரத்தும், கிரஹபூமி லாபங்களும் கிட்டும்; மனம் சந்தோஷமடையும். புதன், வியாழன் தனம் தரும். சுபமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலத்துக்கு அதிகத் தொல்லைகள் உண்டாகும். ஆனாலும் தெய்வபலன் உண்டாகும். பூராடத்துக்கு உத்தியோக மேன்மையும், லாபமும் கிடைக்கும்; குடும்பத்தொல்லைகளும், வைத்தியச் செலவுகளும் ஏற்படும். உத்திராடம் முதல் பாதம் மனம் நிம்மதி இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும். ஆனல் கஷ்டம் இராது. தனதான்ய விருத்தியும், பெரியோர் ஆசியும் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும், திருவோணமும் சுபபலனையே தரும். தொழில் ஓங்கும்; லாபம் கிடைக்கும்; உத்தியோகமேன்மை உண்டாகும்; சகல ஜனங்களுடைய அன்பும்

கிடைக்கும்; நூதன வாகன லாபங்கள், சதா சஞ்சாரபலன்கள் ஏற்படும்; மனம் சந்தோஷமடையும். அவிட்டம் 1, 2 பாதங்களின் பலன் கொஞ்சம் நிம்மதியைத்தருமேதவிர பூரா ஜயம் ஏற்படாது. தொழில் கிடைக்கும். சனி, செவ்வாய் நலன்தரும்.

11. கும்பம்: அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

கும்பராசி பூரா நல்ல பலனே நடக்கும். சென்றமாதம் போலவே இருக்கும். வியாபாரிகள், தொழில் செய்பவர்கள், விவசாயிகள், பிரபுக்கள் எல்லோருமே நலனடைவார்கள்; தனதான்ய விருத்தி, விவகார ஜயம், உத்தியோகமேன்மை, சென்றவிடமெல்லாம் சிறப்பு, இல்லற சுகபோகங்கள் இடைவிடாது அனுபவிக்கநேரும்; கட்டிடங்கள் கட்டவும், பூமிகள் வாங்கவும், ஆபரணாதிகள் செய்யவும், தொழிலுக்கு உதவியும் வசதிகளும் ஏற்படும். சனி, புதன் சுபம் தரும்.

12. மீனம்: பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி 4-ம் பாதம் கஷ்ட பலனைத் தரும். நஷ்டம் ஏற்படும்; வியாதி உண்டாகும்; கடன் ஏற்படும். உத்திரட்டாதி 4 பாதங்களும் சந்தோஷத்தையே தரும். ஆனால் பணச்செலவு அதிகமாகும். ரேவதி முதல்பாதம் ஆபத்தைக் கொடுக்கும். மற்ற 2, 3, 4 பாதங்கள் தெய்வபலத்தோடு சுபம்தரும்; தொழில் ஓங்கும்; நஷ்டதனம் கிடைக்கும்; சத்துரு சரணடைவான்; செல்வாக்கு ஓங்கும்; தனதான்ய விருத்தியாகும்; குடும்பசுகம் உண்டாகும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :— தைமாதத்திய கிரகசஞ்சாரவசமாய் ஏற்படக்கூடிய மேஷாதிராசிகளின் கோசார பலன்கள் உலகத்துக்கும், அந்தந்த ராசிக்காரர்களுக்கும் சுபத்தையே விசேஷமாய்த்தந்து சுபிக்ஷத்தைத் தரும். கெடுதலான கோசாரராசி பலன்கள் கூட அதிக கஷ்டப்படுத்தாமல் சுபமாய் நடக்கும். எங்கும் தெய்வ சக்தி ஓங்கும். உலகம் சுபிக்ஷமாய் இருக்கும்.

இவ்வாறு **செப்புமாற்ருல் பழுதென வச்சிவ ஞான மென்பதுமில்லை** யென்பது இவன்ருனே ஆன்மாவாய்க் கரண நீக்கியிருந்தபடி சிவஞான ... ... ன்மையின் அது கரணங்கள் கெடவிருக்கை ... **முத்தியாமென்னிலென்றற்**ருெடக்கத்தான் மேனிராகரிக்கு மாற்ருனுணர்க. 7

8. * * *

ஊனுயிர் என்னும் எட்டாவது முதல் **ஏதெனினும்** என்னும் பத்தொன்பதாம் பாட்டீருகக் கிடந்த பன்னிரண்டு செய்யுளும் பொருடானே விளங்கும். 8 – 19.

20. * * *

சோகமிது வென்பது அவன் கூறும் சோகம் பாவனை யாலு முத்தியில்லை என்றது. அவன் கூறுமாறு ஞான சித்தியில், பின்னுபின்ன விவேகத்தில்,

शिवोऽहमस्मि सिद्धान्तं सोऽहमस्मि श्रुतान्तकम् ।
वेदार्थसार संङ्ग्राह्यं नव तत्त्वोदिता गमम् ॥
तस्माद्वेदान्त सद्बोधं शैवसिद्धान्तदर्शनम् ।
माया कुण्डलिनी मध्ये अप्राप्यं चिद्विभिन्नकम् ॥
आत्मकेवल सम्बोध जीवात्मस्वप्रकाशकम् ।

என்ருற்போல வரும். பிறவும் ஆண்டே உணர்க. 20

21. * * *

தத்துவங்கள் எல்லாம் என்பது இந்த வேதாந்திக்கு ஒருவாற்ருற் பதமுத்தி கிடைக்குமென்கின்றது. அது இவன் பிரணவ பேதாவத்தைகளான் முத்தியவத்தை கூறுதலிற்

சிவகலர் பேதமான வுன்மனை மற்றந்தமாய்ச் சென்றொழிந் தான்மாவைச் சிவனாய்ப் பாவித்தலிற் சிவதத்துவபதப் பிராப்தி வரினும் வரும். அது புருடதத்துவத்தை அடைதற்கேதுவாகப் புருடனைப் பிரமமெனப் பாவிக்கும் மாயாவாதிபோலும். இவனுட்சமயியாகலின் அவனினுமுயர்பதமடைவது. அது,

शक्तितत्वे तदद्वैताः शिवतत्वे ततःपरे ।

என்னும் சித்தாந்தரகசியவசனத்தாற் காண்க. 21

22. * * *

ஆதலினால் என்பது முதல் **இத்திறம்** என்பதீறாக மூன்றும் பொருடானே விளங்கும். ஈண்டுக் கூறியவாறே சர்வஞானோத்தராதிகள் சைவ சாங்கிய பேதமென்பது ஞான சித்தியில்,

पौष्करादि ज्ञानसाङ्ख्यास्तत्वसाराधिभेदकाः ।
अनेकार्थागमाः सांख्याश्चतुष्पादाःशैवनिर्णयाः ॥
देविकालोत्तरस्कन्दकालोत्तर द्विशतोत्तराः ।
सर्वज्ञानोत्तराः सांख्या इत्याद्या योगसांख्यकाः ॥
नानाशैव प्रकृत्यर्थाः नानाशैवागमोदिताः ।

என வருமாற்றான் உணர்க. பிறவுமன்ன. 22 – 24.

25. * * *

என்பதனால் என்பது சுப்பிரபோதாதிகள்போல் என்னூலொத்தலிற் பரமுத்தியுண்டென்பதை மறுக்கின்றது. அவைகளும் நிமித்தகாரண பரிணாமவாதம் பற்றி நிகழும் நூல்களாகலின். 25

26. * * *

அகச்சமயப்புறம் என்பது முதல் தொகுத்து மொழிந் தனம் என்பதீருகக் கிடந்த வைந்து செய்யுளுந் தானே பொருள்விளங்கும். 26 – 30.

இவ்வாறு தக்கண மதபேதமான வாமத்திற் சுத்த சைவ மத நிராகரணம் முற்றும்.

சைவசித்தாந்தத்தின் அகப்புறச்சமயமான வாமபைரவ தக்கண சைவ மதமு மறுப்பு முற்றும்.

இந்தத் தக்கணமத சித்தாந்தம் மேற்கொண்டொழுகு பவர் இக்காலத்து வீரசைவராம். அவர்ய ... திய நவலிங்க லீலையினிவ்வாறு வரும் தெசாவத்தாதிகளைத் தம் பொருளி லேற்றிக் கூறிக்கோடலின். அது வருமாறு:

பருவரைமே லமர்ந்தருளி பரமனுமைக் கருளியதை
வரமிகுந்த பிரபுதேவன் ருனேவசவேசற்
கிருளகலக் கருநடத்தா லியம்பியதைச் செந்தமிழால்
அருளிறையைப் பெறுமவருக் கறியவறைகுவன் யானும். 1

பவவங்கமேறியாவி படுந்துயர்க்கடலை நீந்தி
சிவவங்கமேறிநின்று சிவானந்தக் கரையிலேற
நவலிங்க சக்கரத்தி னலமிக நவிலுமாற்ரு
னவலிங்க லீலையென்று நவிறலா மின்னூற்பேரே. 2

அவமதி யதனுலேறு மருவினைச் செயல்களாலே
பவமுறு முயிர்கடம்பாற் பற்றிய பாசம்நீக்கச்
சிவமஃதொன்றே நின்று திகழுவாந் தரபேதத்தால்
நவவித மாகவந்து நடிக்குமே லீலையாக. 3

நடுத்திடு மவையா வென்னி னற்சிவன் சத்திநாதந்
துடித்திடும் விந்துவோடு தொடர்ந்தவைம் முகனீசன்பி
னடுத்திடு மரன்மால்பூம னாகவே நவபேதங்கள்
படித்திடும் பழுதிலாத பழமறை பரிந்து நின்றே. 4

இந்த வகை யொன்பதுமி லிங்க வியல்பாகி
பந்தமற நின்றபர மானசுக லிங்கம்
நந்திடவெ ழுந்தநவ சக்கரம தாகி
தொந்ததசி யாலயிக்க மாகுமொரு சோதி. 5

ஏகமாமந்த மூர்த்தி யிலங்கிடு மொருமூன்றென்னத்
தாகமாங் குருவிலிங்கச் சங்கம வடிவதாகி
மோகமா மன்பர்தம்பான் மும்மல மகற்றவேண்டிப்
போகமா முலகு தன்னிற் பொலிவுடன் சிறந்த வன்றே. 6

மன்னு முபதேச நிலையாற் குருவழங்கு
மின்னவுடலோடேகமெய்னனவுறுமலிங்கம்
உன்னரிய சங்கமமு வந்தமுது செய்யு
மன்னவகையில்லையெனில் யாரறிவர் பரமே. 7

குருலிங்க சங்கமங்கள் கூறிய மூன்றுந் தாமே
மருவிய விந்துநாத கலாதீத மாகி நின்று
பருகிய சிவனோடு பரஞ்சிவம் பதமூன்றாகித்
தருலிங்கம் பிராணனிட்டந் தன்னொடுபாவ மூன்றும். 8

பேசிடிற் கலந்தியங்கப் பெறுமிந்த வுடலுமூன்று
மாசுறுந்தூல சூக்க காரண மாகி யெங்குந்
தேசொடு தியானபோக யோகங்கள் சேர்ந்துநின்று
மாசுலா வகை யொழிந்து வருமுறை யறையலுற்றாம். 9

ஆகிய தூலதேகத் தமர்ந்திடு மவத்தை மூன்றில்
வாகிய விசுவனோடு தைசதன் பிராஞ்ஞன மன்னு
மோகிதனாகி நின்று மும்முறை யுலகமெல்லாம்
போகியாய்ப் பலங்கடம்மைப் பொசிப்பதா மிட்டலிங்கம்.

ஊனமார் சூக்குமத்தி னுதித்திடு மவத்தை மூன்றி
னானதோர் விராட்டுக்கேற்ப னவ்வியாகிருதனாகி
வானொடு புவன மற்றும் வாழ்வுறப் போகந்துய்த்துத்
தானது மேலா யெங்குந் தயங்கிடும் பிராணலிங்கம். 11

அலைவிலது காரணமதாகி வருமுடலசிற்
சொலிதனெடு மற்றப் பிரசாபதி சுகஞ்சேர்
நிலையினுப சாந்தனெடு மூவரென நின்று
பலதிசையு முறுவது நற்பாவ லிங்க மாமே. 12

தோன்றிய தொம்பதார்த்தஞ் சொல்லிய விந்துவாகும்
மான்றதோர் நாதந்தானே யறியிற் றற்பதார்த்த மாகும்
மேன்றிடு மசிபதந்தான் னெழிற்களாதீத மாகும்
மூன்றிய லாகுவேத முடிவுவாக்கியந்தான் சொல்லும். 13

முத்துரியங்க ளாகி முக்குணமவத்தை மூன்றும்
இத்திறந் தேசகால மெழில்பெறு வத்துவாதி
யத்தொடு காற்றுந்தியு யப்புவும் விண்ணுமண்ணு
மெத்திசைகளுந்தானுகி நின்றதை யாவர்காண்பார். 14

இத்தகை யுரைத்த லிங்க மெனவரு மூன்றிற்பின்னர்ப்
பத்தன் மாகேசன் பண்ணும் பிரசாதிப் பிராணனுகி
முத்தராஞ் சரணனேடு ... மைக்கர் மூவிருவரென்ன
தத்தம தியல்பினின்றுத் தற்பர மாவரன்றே. 15

பத்தர் மாகேசரென்று பகர்ந்திடு மிருவர் தாமுஞ்
சத்தியமாகிநின்று தனுமனந் தனதெனுமல்
இத்தகை யாவுமீந்தே யெய்திடுந் தியாகியாகி
முத்தியாம் வெளியினூடே மூழ்கியங் கிருப்பர் தாமே. 16

பிரசாதி பிராணலிங்கி பேதமற்றிரண்டுபேரும்
புரைவற நின்றுதாமே பொசித்தபோ கங்களெல்லாம்
திரமதா யிலிங்கந் தானே பொசித்ததாய் தெளிந்துநின்று
கரவிலா நிறைவதாகிக் கலந்தினிதிருப்ப ரன்றே. 17

இலிங்கம் புசித்தவாறு மேல் "நாசியாசாரலிங்க" மென்னும் பாடன் முதலானவற்றுன் விளங்கும்.

சரணனு மயிக்கன்றுனுந் தானெனை தறவே நின்று
பிரணவ வெளியினூடே பெறுமியோ காங்கந் தன்னில்
கரணம தொடுங்கி மூன்று காலமுங் கழித்து மேலாம்
பொருளெனும் வடிவமான போதவானந்த மாவார். 18

முற்பட வுரைத்த லிங்கம் மூன்றினிற் பின்னு முண்டா
மற்புதா சாரலிங்க மத்தொடு குருலிங்கந் தான்
பொற்புறு சிவலிங்கஞ் சங்கம லிங்கம் பொருவிலாத
சிற்பரப் ப்ரசாத லிங்கம் சிறந்தமா லிங்க மாகும். 19

ஆசார லிங்கந்தானே யருமறை யயனென்றாகித்
தேசாய தேசமெல்லாந் தெரிந்துதான் படைத்துநிற்கும்
பூசாருங் குருலிங்கந்தான் பொருவின் மாலாய்ப்புரக்கு
மேசாதசிவ லிங்கந்தா னிறையெனத்துடைத்து நிற்கும். 20

மன்னுசங் கமலிங்கந்தான் மகேசனாய் மறைத்துநிற்கும்
தன்னியற் ப்ரசாத லிங்கஞ் சதாசிவ மாகி நின்றே
யன்னிய மிலாமையந்த வனுக்கிரகத்தைச் செய்யும்
பின்னிலை விந்து நாதம் பரைசிவம் பேசுநான்கும். 21

மாறின்மாலிங்கமாகி மன்னுமுனைந்துங் கூடி
யாறதா யுயிராயூனா யகிலமா யனைத்துமான
பேறுகா ணெனவே நின்று பெருமையாம் லீலை தன்னை
யாறியே யறிந்த நல்லோ ரனைத்துமா லிங்கமென்பர். 22

தரித்தவா சாரலிங்கந்தகுங் ... குருலிங்கம் ... ... ஞ்
பிரித்திடு மிட்டலிங்கம் பணிபவர் பாவம் போக்கும்
பெருத்திடுஞ் சிவலிங்கந்தான் பேசிய பிராணலிங்கம்
தெரித்தகுமுருவமுள்ளும் புறம்போக்கித் திரமதாகும். 23

பரிவுடன் பிரசாதலிங்கம் பன்னுமா லிங்கமெல்லாம்
தருவதாம் பாவலிங்கஞ் சகலதே சங்கள் மெய்யாய்த்
தெரிவுறத் தோற்றுவித்துத் தேகியாய் நின்று ஞான
வரியவா னந்தமாகி யனைத்துமா யமலமாமே. 24

இட்டமாம் பிராண பாவ மீரிரு வகையதாகிக்
கட்டிய காயஞ்சீவன் கலந்துதான் கருவாய்நின்றே
மட்டொரு பாகமெல்லாம் வளம்பெற மன்னியாங்கே
திட்டமாய்ப் பொசித்தெங்கும்பின் சின்மய ரூபமாமே. 25

கூறிய விட்ட லிங்கங் கூடுறுமுருவந்தன்னை
மாறிலா விரதந்தன்னை மருவிடும் பிராண லிங்கம்
தேறிய பாவலிங்கஞ் சிறந்திடுஞ் சிரத்தை யென்றே
வேறுபா டிலாத வேதம் விளம்பிய விதமாமன்றே. 26

உரைத்தநல் லாறிலிங்க மோங்நமச் சிவாயவென்றே
தெரித்திடு மக்கரங்கள் தெளிந்தவா றதனையோகிற்
கரைத்திரைக் கடலதான பிறவியிற் கலந்துவந்தே
மரித்திடா வின்பமெய்தி மாலிங்க வடிவமாவார். 27

ஆறெழுத்தினுள் பிரணவம் மகாலிங்கம், யகாரம் பிரசாத லிங்கம், வாகாரஞ் சங்கம லிங்கம், சிகாரம் சிவலிங்கம், மகாரங் குருலிங்கம், நகாரமாசாரலிங்கம், இவ்வாறே சதாசிவ முதலேவருமாவர்.

குருலிங்க சங்கமங்கள் கூறிடில் வன்னமேழாம்
மருவிருள் குகாரமாகு மன்னிய ருகாரந் தியா
மருவினை யகிலமெல்லா மடங்கிடும் விகாரந்தன்னிற்
றிருவளர் ககாரந் தன்னிற் செறிந்திடு முலகமுண்டாம். 28

தருக்கிய சகாரந்தானே தனிமல ரயனென்றுகும்
டெருக்கிய ககாரந்தானே பேருலகளந்த மாயன்
றிருக்கறு மகாரந்தானே சிறந்தருத் திரனென்றுகும்
இருக்கொடு மியசுசாம மதர்வண மாயிசைந்தே. 29

தோற்றிய சங்கமத்திற் றுரியமூன் றவத்தை மூன்று
மேற்றிய காலமூன்று மியல்பிணு லெரிகள் மூன்று
மாற்றுமண் டலங்கள் மூன்று மன்னிய தத்துவங்க
ளாற்றிய சிவமேவித்தை யான்மதத்துவங்கள் மூன்றும். 30

இன்பமா மிட்டப் பிராண பாவமா மியல்பு மூன்றுந்
துன்பமதகற்ற வேண்டித் தோற்றிய லிங்கமாகும்
முன்புறக் கண்டுநின்ற மூதறிவாளர் சொன்ன
நன்பொருளறிவார் நல்ல ஞானிக ளாவரன்றே. 31

சொல்லிய வங்கலிங்கந் தோன்றிட வறியுங்காலைப்
புல்லுநா லாறுதத்வம் புகன்றிடு வவத்தை மூன்று
மல்லனு ... னென்றுகண்ட வறிவதே யங்கமாகும்
நல்லுயிர் மேலாம் ஞானம் நற்பர மிலிங்கமாகும். 32

வாய்ந்தநல் விந்துநாத களாதீத வாய்மைதானே
யேய்ந்தநற் குருவிலிங்க சங்கம மென்று பேராம்
ஆய்ந்தநன் னூலோரோது மதனியல் பறிந்துகொண்டே
சாந்தமாந் தன்மை யெய்தித் தான்வழி பாடுசெய்வார். 33

முன்னமே யான்மாவந்த மொழிந்த நல்விந்துவாகும்
பன்னிட வரியதான பரம்பொருள் நாதமாகு
மின்னதிவ் வாறதென்ன வியம்பிட லாகவொண்ணு
வன்னநற் சிவமே யந்த வருங்களா தீதமாகும். 34

இந்தநல் விந்துபீட மியயைந்தமா லிங்கமாகச்
சிந்தையி லறியவொண்ணுச் சிவத்தினை யிங்குப்போற்றின்
வெந்தொழிற் பிறவியான வேலையில் கவசருமல்
அந்தமு மாதியில்லா வானந்தச் சோதியாவார். 35

அங்கமு மிலிங்கந்தானு மனைவருங் காணவேதான்
பொங்கிய புவியிடத்துப் புதைத்திடக் கண்டிருந்துஞ்
சங்கர னடியைச்சேருந் தன்வடி வதனைப்பாரார்
மங்கியே பிறவித்துன்ப வாரியி லமிழ்ந்தி மாள்வார். 36

அங்கமு மிலிங்கதானு மன்புசெய் தாசான்றன்னு
லிங்கிவர் ... ... லெழுபிறப்ப ... ... தனீங்கித்
தங்கிய புவியில் வாரார் தற்பர மதனைச்சேர்ந்து
செங்கதி ரொளிதானுகிச் சிறந்தினி திருப்பர்தாமே. 37

நாசியா சாரலிங்கம் நயத்துடன் கெந்தங் கொள்ளும்
பேசிய குருலிங்கந்தான் பெருநாவி லிரதங் கொள்ளும்
மாசிலாச் சிவலிங்கங்கண் ணறிவது ரூபங்கொள்ளும்
மாசில்சங் கமலிங்கந்தான் வடிவினிற் பரிசங்கொள்ளும். 38

கனத்தினிற் பிரசாத லிங்கங் கலந்துவான் சத்தங்கொள்ளும்
இனத்தந்தக் கரணந்தன்னி லெல்லாமா லிங்கங்கொள்ளும்
மனத்துட னங்கமெங்கும் நரலிங்கம் நிறைந்திருக்க
நினைத்திராரிதைமறந்து நிகழ்த்திடிற் பூசையாதாம். 39

தத்துவ மசிதான் முன்னந் தானவ னென்றுசொன்ன
வத்துவின் வடிவாந் தன்னை வாக்குநெஞ் சிறந்துநோக்கார்
மித்தையாம் பிறவிதன்னின் மெலிவொடு மேலதாகிப்
புத்தியைப் புலன்களைந்து பொறிவழி புகுவரந்தோ. 40

வித்துடன் முளையதாகி வேறின்றி விளங்குமாபோற்
சத்துடன் சித்தத்தாகித் தானது வாகுமென்று
மத்தகு சத்தியங்க மாஞ்சிவம் லிங்கமென்றும்
புத்திசேர் ஞானமுள்ளோர் புவியினிற் பிறவாரன்றே. 41

153

உ

திருமுறை இசைத்தட்டுகள்

வெளியீடு: **தருமபுர ஆதீனம்.**

பாடினோர்: தருமபுர ஆதீன இசைப் புலவர், இசையரசு,
திரு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்.

தயாரிப்பு: The Gramaphone Company Ltd.,

(தேவாரம்)

QC. 1279. — தோடுடைய - அருநெறிய.
மங்கையர்க்கரசி - பன்னலம்.

QC. 1280. — நீறுசேர்வதோர் - செல்வமல்கிய.
கற்றுங்கெரி - செல்வநெடு.

QC. 1281. — சிறையாரும் மடக்கிளியே.
தொண்டரஞ்சு களிறும்.

QC. 1282. — சிவனெனும் - குற்றம்நீ.
காதலாகிக்கசிந்து.

QC. 1283. — நிலைபெறுமாறெண்ணுதியேல்.
கூற்றாயின - சலம்பூவொடு.

QC. 1284. — படைக்கலமாக உன்நாமத்து.
மலையேவந்து வீழினும் - மனிதர்காள்.

QC. 1285. — பித்தாபிறை - காரூர்புனல்.
பொன்னுமெய்ப்பொருளும்.

(திருவாசகம்)

QC. 1286. — தந்ததுன் தன்னை.
அம்மையே அப்பா.

(திருவிசைப்பா, திருப்பல்லாண்டு)

QC. 1287. — பத்தியாயுணர்வோர் – குழலொலி.

(பெரியபுராணம்)

,, ஐந்துபேரறிவும் - வேதநெறி.

(பிள்ளைத்தமிழ்)

QC. 1288. — ஒழியாத புவனத்து.

(திருப்புகழ்)

,, அகரமுமாகி.

[இசைத்தட்டு ஒன்றுக்கு விலை ரூ. 4—1—0.]
(Packing Forwarding Charges etc.,)

கிடைக்குமிடம்:

காஷியர்,
ஸ்ரீ சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம், சீர்காழி.
தஞ்சை ஜில்லா.

சென்னை,
தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்
தமிழ்த்திருநாள்
14—1—54 வியாழன் அன்று கொண்டாடப்பெறும்
ஸ்ரீமதி. M. L. வசந்தகுமாரி & பார்ட்டியார்
இசை விருந்தும், பேரறிஞர்கள் சொற்பொழிவுகளும்,
நடைபெறும்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—1—1954.